உ

ஸ்ரீகணபதியேநம:

ஜாதகவிளக்க சோதிட அரிச்சுவடி என்னும்

# சுந்தரசேகரம்.

முதற்பாகம்.

இஃது

சோதிடம் கற்றுக்கொள்ள விரும்புவோர்கள் எளிதில்
உணரும்பொருட்டு அகஸ்தியர், இடைக்காடர், புலிப்பாணி,
குமாரசுவாமிதேசிகர், ரோமரிஷி, ஆதிசங்கராசாரியார்,
நந்திதேவர், முதலான மகான்கள் இயற்றிய சோதிட சாஸ்திரங்
களினின்றுந் திரட்டிச்சோதிட பிரதம சிக்ஷயாக,

திரிசிரபுரம் உறையூரில்வசித்த மாஜிபோலீஸ இன்ஸ்பெக்டர்.

**டி-சுந்தரம் பிள்ளையவர்கள் குமாரராகிய**

தூத்துக்குடி போலீஸ் அஸிஸ்டெண்டு சூப்பிரண்டெண்டு ஆபீஸ்

மாஜி ஹெட்கிளார்க்கு

**டி-எஸ். அய்யாசாமிபிள்ளை அவர்களால்**

அமைக்கப்பெற்றதை

திரிசிரபுரம் புஸ்தகவியாபாரம்,

தி. சபாபதி பிள்ளை குமாரர்,

**தி. ச. ரெங்கராசுபிள்ளையவர்களால்**

மதராஸ், என். ஸி.

கோள்டன் எலெக்ட்ரிக் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy-Right.

விலை] **1921.** [அண, 12.

# சந்திரசேகரம் முதற்பாகத்தில் அடங்கிய விஷயம்.


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| அஷ்டவர்க்கு, ஏகாதிபத்தியசோதனை, இராசிகுணகாரம், கிரககுணகாரம், சர்வாங்க அஷ்டவர்க்கம், கிரியான மாரகதசைகள் 9-க்கு விபரம் இவைகள் அனுபந்தம் 1-முதல் 6—பக்கம் வரையில், நவக்கிரகம் 9-க்கும் நாமதேயம், 12-ராசி சக்கரம், நாழிகை 1. | |
| லக்கினநிச்சயம் அறியும்வகை, உதாரணத்துடன் | 3 |
| லக்கினஸ்புடம், லக்கினநிச்சயம், குழந்தைபிறந்த நாழிகையினால் ஆண், பெண் அறியும் விபரம் | 4 |
| ஒவ்வொரு இராசியிலும் கிரகங்கள் இருக்கும் காலம் | 6 |
| கிரகபாத நட்சத்திரகால்கள் | 7 |
| யுகபேதம், நவாம்சலக்கினம் காணும்வகை | 8 |
| நவாம்சசக்கிரத்தில் கிரகங்களைப்போடும் வகை, இராசிகளின் உருவம், ஆண், பெண், நிறம், ஜாதி, நோக்குத்திக்கு, நோய், ஸ்தானம், அங்கம். | 9 |
| கிரகங்களின்வடிவம், ஆண், பெண், அலி, நிறம், ஜாதி, நோய், நோக்குத்திக்கு, ஸ்தானம், அங்கம் | 11 |
| கிரகநோக்கும், கவியும். | 12 |
| சுபபாபக்கிரக பொதுவிதி, விசேஷவிதி | 13 |
| இன்னகிரகத்துக்கு இன்ன இராசிகள் ஆட்சிவீடுகள், மூலத்திரிகோணவீடுகள் என்பது | 14 |
| இன்னகிரகத்துக்கு, இன்னஇராசிகள் உச்சம், நீசவீடு | 16 |
| அவைகளின்பலன் முதலியவை | 17 |
| நீசபங்க இராஜயோகம், இன்னகிரகத்துக்கு இன்னஇராசி நட்பு, இன்னகிரகத்துக்கு பகை, வீடுகளென்பது | 18 |
| ஷை விதியின்படி நட்பு, பகை இராசிகளாவன, கிரகவக்கிரம், அஸ்தமனம். செவ்வாய்தோஷம், புத்திரபாவம். | 19 |
| இன்னகிரகத்துக்கு இன்னகிரகம், சத்துரு, மித்துரு, சமம், என்பது | 21 |
| கிரககுணம். கிரகவலிமை, பஞ்சவித ஸ்தானப்பெயர் | 22 |
| கிரகமறைவு, கிரககேந்திரபலன் | 23 |
| எல்லாக்கிரகங்களுடைய நன்மை, தின்மையை, பொதுவில் கூறுகின்றது கிரகக்ஷேத்திரபலன், லக்கினமுதல் 12-பாவம் | 24 |
| வக்கிரகசாரங்கள் சூரியன்முதல் 9-க்கும் விபரம் | 27 |
| கிணபலன் முதலியவை மேஷமுதல் | 30 |
| ரகஸ்தானம், மாரகான் | 35 |
| ரகதிசாபுக்தி விபரம் | 37 |
| ரிஷ்டதோஷங்கள், அரிஷ்டபாவம் 3-க்கு விபரம் | 39-40 |
| த்தம, மத்திம, அற்பாயிசுவிபரம், ஆயுள், யோகபாவம் | 41 |
| கோதிரபாவம், களத்திரபாவம் | 44 |
| ருப்பிடம், மரிப்பிடம், நவக்கிரகதசாபுக்தி, கிரகநட்சத்திரங்கள் தசைவருஷம் | 45 |

# சுந்தரசேகரம் முதற்பாகத்தில் அடங்கிய விஷயம்.


| | |
|---|---|
| கிரகாதிபருடைய மகாதிசையில் அபகாரம், சித்திரம், சூக்ஷமம், பிராணன் இவற்றை அறியும் முறைமை கூறுகின்றது. | 47 |
| சுக்கிரன் சனிபலன், கிரகங்கள் தங்கள் தசைகளில் நற்பலன்கொடுக்குங்காலம். | 48 |
| போதகன், வேதகன், பாசகன், காரகாள் என்பது | 50 |
| உயிர்-உடல் கோட்சாரம், சந்திரலக்கின கோட்சாரபலாபல அட்டவணை | 51-52 |
| அஷ்டமத்துச்சனி, ஏழரைநாட்டுச் சனிகாலம் | 54 |
| நவக்கிரகதானியம், புஷ்பம், நஷ்டஜாதகம் | 55 |
| புத்திரபாவம், தோஷநிவர்த்தி முதலிய சந்தான முக்கியகவனிப்பு | 56-69 |
| குளிகாதிநால்வர் வாரோதயம், இராப்பகல் ஒருவர்பிறந்த நட்சத்திரத்துக்கு உண்டான நாழிகை மகாதசையில் செல்லுப் போகபாக்கி ஷ ஸ்ரீ நாள் நாழிகை விஞடி தற்பரை சுலபமாய் அறியும் விபரம் உதாரணத்துடன் | 70 |
| கணக்குப் பிரயாசையன்றி, மகாதசை, புக்தி அந்தரம் பார்க்கும் விபரம் உதாரணத்துடன் | 71 |
| சூரியதசைமுதல் சுக்கிரதசைவரையில் தசை-ஷ புத்தி, அந்தரம், ஒரேவரியில் சுலபமாய் அறிய | 72-80 |
| சூரியதசைமுதல் சுக்கிரதசைவரையில் அந்தந்த தசைபக்தியும், அடுத்த புக்தியும் சேர்ந்தது ஆகபுக்தி மொத்தமும் பார்த்துக் கொள்ளக்கூடியது | 81 |
| அகஸ்தியர் நவநீத நூல் தசாபுக்தி, அந்திராதி பாவசங்கிரகம் | 82 |
| பாசகன், போதகன், காரகன், வேதகன் இவைகளுக்கு ஸ்தான இடங்கள் | 83 |
| லக்கினநிச்சயம், வாரநிச்சயம், நக்ஷத்திரநிச்சயம், இவைகள் நிச்சயம் அறிய உதாரணத்துடன் | 84 |
| உவாமகேசுவர சம்வாத காலசக்கிரமஹாதசை வருஷங்கள், காலசக்கிர ராசிபாய்ச்சலும், சுருக்கபலனும்-உதாரணத்துடன் | 85 |
| மேற்படி தசாபுக்திகாலம் | 86-88 |
| காலச்சக்கிர தசையில் பாய்ச்சல் | 89 |
| வேளை, ஓரை, அறியும் விபரம் | 90 |
| நவாம்ச இராசிசக்கிரத்தில் கிரகங்கள் அடைக்கும் விபரம் | 91 |
| 12-இராசிசக்கிரத்தில், கிரகங்கள் ஆட்சி, உச்சம், நீசம், நட்பு, பகை மூலத்திரிகோணம் பார்த்துக்கொள்ள | 92 |

உ

சிவமயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும் அச்சுக்கூடத்ததிபர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் இந்த ஜாதகவிளக்கமாகிய சுந்தரசேகரம் என்னும் நூலை அமைத்த டி—எஸ். அப்பாசாமிப்பிள்ளை அவர்களிடம் இந்நூலிற்குள்ள (எடிட்டர் பாத்தியதை)யென்னும் சுதந்தரத்தை இத்துடன் சேர்த்திருக்கிற விக்கிரயபத்திர நகல்பிரகாரம் அடியில் கையொப்பமிட்ட என்னால் கிரயத்திற்கு வாங்கப்பட்டு அச்சிற் பதிப்பித்து ரிஜிஸ்டர்செய்து விற்பனைசெய்துவந்ததில் புதுவூர் சோதிடம் நீலகண்ட உபாத்தியாயர் மற்று மநேகரும், ஜாதகங்களுக்கு முக்கியமாய் வேண்டிய மற்றுமுண்டான அம்சங்களும் இதில் சேர்ந்திருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியால், பெரம்பலூர் — துரைசாமி நாயுடு அவர்களை நான் சேகரித்துக் கொடுக்கச்சொல்லி வாங்கி இதன்56—வது பக்க முதல் நூதனமாய்ச்சேர்த்து அச்சிட்டு 3—வது தடவை ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இப்புத்தகத்தை என்னுடைய அனுமதி அன்னியில் யாரேனும் அச்சிடுவாராகில் 1867—வருத்திய 25 – வது ஆக்ட்டு 20 – வது பிரிவு 6 – வது உட்பிரிவின்படி நான் கோரும் நஷ்டத்திற்கும் இண்டியன் பினல் கோர்ட்டு என்னும் ஆக்ட்டுப்படி குற்றத்திற்கும் உத்தாவாதிகளாக வேண்டுமென்பதை கவனிக்கக்கோருகின்றேன்.

இப்படிக்கு,

திரிச்சி ஸ்ரீ மட்டுவார் குழலம்பாள் அச்சுகூடத் ததிபராகிய

ஷை-யூர் புத்தகவியாபாரம்

☞ தெப்பகுளம் போஸ்ட், தி. சபாபதிபிள்ளை.

இந்த சுந்தரசேகரம் என்னும் சோதிடநூல், முதலில் சோதிடம் கற்றுக்கொள்பவர்களுக்கு மாத்திரம் உபயோகமே அல்லாமல் ஓர் ஜாதகத்தின் கிரகநிலைகளை அறிந்து பலாபலன்களை விபரமாக அறிந்துகொள்ளும் விதத்தைக் கூறாமல் நிறுத்திவிட்டமையால் இதற்கு இரண்டாம்பாகமென்றுசொல்லும்படியாக அநேக நூல்களை அநுசரித்து 12—பாவபலன்களையும் யாவரும் சுலபமாய் அறிந்து பலன் சொல்லும்படி நான் தியாகராஜசேகரம் என்னும் சோதிடநூல் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன்.

இதன் விலை அணா – 12.

(எட்டணு முத்திரைஸ்டாம்பு.)

# சுந்தரசேகரம் என்னுமிந்நூலின்

## எடிட்டர் பாத்திய விக்கிரயபத்திரத்தின் நகல்.

1895ளு ஜூலைமீ 31உ திருச்சினப்பள்ளிகோட்டை ஆண்டார் தெருவிலிருக்கும் அய்யாக்கண்ணுப் பிள்ளை குமாரர் வெள்ளாழஜாதி விஷ்ணு மதம் புஸ்தகவியாபாரம், தி. சபாபதிபிள்ளையவர்களுக்கு, திருச்சினப்பள்ளியைச்சார்ந்த உறையூர்சாலை பட்டுநூற்காரத் தெருவிலிருக்கும் சுந்தரம்பிள்ளைகுமாரர் சுதர்மான் வெள்ளாழஜாதி சிவமதம் சுகவாசி டி—எஸ்—அய்யாசாமிப்பிள்ளை எழுதிக்கொடுத்த புத்தக எடிட்டர் கிரயபத்திர மென்னவென்றால், என்தகப்பனர் மாஜிபோலீஸ் இன்ஸ்பெக்டர் டி. சுந்தரம்பிள்ளை யவர்கள்பெயர் எப்போதும் புஸ்தகரூபமாக விளங்கும்பொருட்டு அவர்கள் பெயர் வைத்து சுந்தரசேகரமென்னும் சேரதிடபுஸ்தகத்தை புதிதாய் நான் பிரயாசைப்பட்டுசெய்து அச்சிட்டு விற்பனைசெய்துவந்த புத்தகத்தின் அமைப்பு அல்லது எடிட்டர் பாத்தியத்தை ரூபா 50—க்கு தங்களுக்கு கிரயஞ்செய்துக் கொடுத்து இதற்குமுன் தங்களிடம் நான் வாங்கிக்கொண்டது ரூபா — 40 நாளதுதேதியில் சப் ரிஜிஸ்டாரவர்கள் முன்னிலையில் பத்திக்கொண்டது ரூபா—10, ஆக இவ்விதமாக மேற்கண்டரூபாய் ஐம்பதும் நான் பெற்றுக்கொண்டபடியால் இனி ஷை புஸ்தகத்தை அச்சிற்பதிப்பித்து விற்பனைசெய்யும் பாத்தியமுதலான வேறே எவ்விதபாத்தியமும் எனக்குக் கிடையாது. தாங்களே அச்சிற்பதிப்பித்து தங்கள்பேரால் ரிஜிஸ்டர்செய்து ஷை புஸ்தகத்தை எப்போதும் அச்சிட்டு விற்பனைசெய்துகொண்டு வரவும், மற்றவர்கள் அச்சிட்டால் அதினுல நேரிடும் சகல நஷ்டத்தையுந் தாங்களே வாங்கவும் இவை முதலான சகலபாத்தியதையும் தாங்களே யனுபவித்துக்கொள்வீர்களாகவும். இதற்குமுந்தி இந்தப் பாத்தியதை தங்களுக்குத் தவிர வேறே யாருக்கும் அச்சிடும்படி எவ்வித அநுமதியுங் கொடுக்கவில்லையென்று உறுதிசொல்லி இந்த சுத்தக்கிரய சாசனஞ் செய்யலானேன்.

**சுகவ்ஸ்தலிகிதம் டி. எஸ். அய்யாசாமிபிள்ளைசம்மதி.**

**சாட்சிகள்.**

திருச்சினப்பள்ளிகோட்டை சின்னக்கடைத் தெருவிலிருக்கும் சோசியம் நாராயணசாமிபிள்ளை குமாரர் . சோசியம் ரெங்கசாமிபிள்ளை அறிவேன்.

ஷை ஆண்டார் தெருவிலிருக்கும் சுப்பராயபிள்ளை குமாரன். தி. கண்ணுசாமிபிள்ளை அறிவேன்.

ஷை முத்தழகப்பிள்ளைத் தெருவு கெடியாரவேலை டி. என். பொன்னுசாமி பிள்ளை அறிவேன்.

ஷை ஆண்டார் தெருவிலிருக்கு இராமலிங்கம்பிள்ளை குமாரர் அப்பாதுரை பிள்ளை அறிவேன்.

ஷை கோட்டை வசந்தராயபிள்ளைத்தெருவிலிருக்கும் அளகிய வேம்பபிள்ளை குமாரர் அரியபுத்திரபிள்ளை அறிவேன்.

மலைக்கோட்டை ஆ. சந்திரசேகரமுதலியார் குமாரர் பெரியசாமிமுதலியார் அறிவேன்.

இந்தப் பத்திரத்தை 1895ளு ஜூலைமீ 31உயில் திருச்சினப்பள்ளி டிஸ்திரிகட்டு ரிஜிஸ்ட்ராரார் ஆபீசில் ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கின்றது.

## சூரியன்-48.

| | |
|---|---|
| லக்கினம்-3-4-6-10-11-12 | ஆக(6) |
| சூரியன்-1-2-4-7-8-9-10-11 | (8) |
| சந்திரன்-3-6-10-11 | (4 |
| செவ்வாய்-1-1-2-4-7-8-9-10-11 | (8) |
| புதன்-3-5-6-9-10-11-12 | (7) |
| குரு-5-6-9-11 | (4) |
| சுக்கிரன்-6-7-12 | (3) |
| சனி-1-2-4-7-8-9-10-11 | (8) |

## செவ்வாய்-39.

| | |
|---|---|
| லக்கினம்-1-3-6-10-11 | ஆக (5) |
| சூரியன்-3-5-6-10-11 | (5) |
| சந்திரன்-3-6-11 | (3) |
| செவ்வாய்-1-2-4-7-8-10-11 | (7) |
| புதன்-3-5-6.11 | (4) |
| குரு-6-10-11-12 | (4) |
| சுக்கிரன்-6-8-11-12 | (4) |
| சனி-1-4-7-8-9-10-11 | (7) |

## குரு-56.

| | |
|---|---|
| லக்கினம்-1-2-4-5-6-7-9-10-11 | (9) |
| சூரியன்-1-2-3-4-7-8-9-10-11 | (9) |
| சந்திரன்-2-5-7-9-10-11 | (5) |
| செவ்வாய்-1-2-4-7-8-10-11 | (7) |
| புதன்-1-2-4-5-6-9-10-11 | (8) |
| குரு-1-2-3-4-7-8-10-11 | (8) |
| சுக்கிரன்-2-5-6-9-10-11 | (6) |
| சனி-3-5-6-22 | (4) |

## சனி-39.

| | |
|---|---|
| லக்கினம்-1-3-4-6-10-11 | ஆக(6) |
| சூரியன்-1-3-4-7-8-10-11 | (7) |
| சந்திரன்-3-6.11 | (3 |
| செவ்வாய்-3-5-6.10-11-12 | (6) |
| புதன்-6-8-9-10-11-12 | (6) |
| குரு-5-6-11-12 | (4) |
| சுக்கிரன்-6-11-12 | (3) |
| சனி-3-56-11 | (4 |

## சந்திரன்-49.

| | |
|---|---|
| லக்கினம்-3-6-10-11 | ஆக (4) |
| சூரியன்-3-6-7-8-10-11 | (6) |
| சந்திரன்-1-3-6-7-10-11 | (6) |
| செவ்வாய்-2-3-5-6-9-10-11 | (7) |
| புதன்-1-3-4-5-7-8-10-11 | (8) |
| குரு-1-2-4-7-8-10-11 | (7) |
| சுக்கிரன்-3-4-5-7-9-10-11 | (7) |
| சனி-3-5-6-11 | (4) |

## புதன்-54.

| | |
|---|---|
| லக்கினம்-1-2-4-6-8-10-11 | ஆக (7) |
| சூரியன்-5-6-9-11-12 | (5) |
| சந்திரன்-2-4-6.8-10-11 | (6) |
| செவ்வாய்-1-2-4-7-8-9-10-11 | (8) |
| புதன்-1-3-5-6-9-10-11-12 | (8) |
| குரு-6-8-11-11 | (4) |
| சுக்கிரன்-1-2-3-4-5-8-9-11 | (8) |
| சனி-1-2-4-7-8-9-10-11 | (8) |

## சுக்கிரன்-52.

| | |
|---|---|
| லக்கினம்-1-2-3-4-5-8-9-11 | ஆக (8) |
| சூரியன்-8-11-12 | (3) |
| சந்திரன்-1-2-3-4-5-8-9-11-12 | (9) |
| செவ்வாய்-3-4-6-9-11-12 | (6) |
| புதன்-3-5-6-9-11 | (5) |
| குரு-5-8-9-10-11 | (5) |
| சுக்கிரன்-1-2-3-4-5-8-9-10-11 | (9) |
| சனி-3-4-5-8-9-10-11 | (7) |

மேற்சொன்ன அந்தந்த காரகர்களின்பரலை ஒவ்வொரு காரகர்களின் பிரகாரம் லக்கினம்முதலாகவும், நவக்கிரகங்கள் ராகு கேது தவிர மற்றவர்களுக்கு அவரவர்கள் ஸ்தான முதலாகக் கொண்டு ஒவ்வொன்றையும் போட்டு அந்தந்த ராசியில் கடைசியில் என்ன தொகையிருக்கிறதோ அவைகளையெல்லாம்ஒன்றாகச்சேர்த்துஎண்களைஒரு சக்கரத்தில்போட அதுஆதியந்தமாம்.

அதை மறுபடியும் திரிகோணராசியில் சோதிக்க எண்கள் திரிகோண ராசியில் சமமாயிருக்க எடுத்துப்போடவும், வித்தியாசமாயிருக்கில் குறைந்த எண்களுக்குச் சரிவரச்செய்யவும்.

ஒருராசியில் எண்களிருந்து மற்றராசிகளில் எண்ணில்லாமற்போனால் அப்படியே வைத்துக்கொள்ளவும்.

இதை ஒரு சக்கரத்தில்போடவந்தது திரிகோணசோதனையாம்.

ஏகாதிபத்தியசோதனை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1–மேஷம், | ரிஷபம், | மிதுனம், | தனுசு, | மகரம், |
| 2–விருச்சிகம், | துலாம், | கன்னி, | மீனம், | கும்பம், |

இந்த நேர்நேர் ராசிக்கு சோதனையுண்டாம். கடகம் சிங்கம் இரண்டுரா சிகளுக்குச் சோதனையில்லை.

(1) கிரகமிருந்தராசி பரல் ஏறியிருந்தால் குறைந்ததுபோல் சரிசெய்துக் கொள்ளலாம்.

(2) இரண்டுராசி பரல் சமமாயிருந்தால் கிரகம்இல்லாதராசிப்பரலை எடுத்துவிடவும்.

(3) இரண்டுராசியிலும் கிரகம் இல்லாதிருக்க பரல் ஏறக்குறைச்சலாக யிருந்தாற் குறைந்தபடி சரிசெய்துக்கொள்ளவும்.

(4) இரண்டுராசியிலும் கிரகம் இல்லாதிருக்க பரல் சமமாயிருந்தால் இரண்டுராசிப்பரலையும் எடுத்துப்போடவும்.

(5) இரண்டுராசியிலும் கிரகமிருக்க பரல் ஏறக்குறைச்சலாயிருந்தாலும் சமமாயிருந்தாலும், ஒருராசியில் பரல் இல்லாதிருந்தாலும், இரண்டு ராசியிலும் கிரகமில்லாமல் ஒருராசியில் பரல் இல்லாமலிருந்தாலும், இவைகளுக்கெல்லாம் சோதனையில்லை.

(6) ஒருராசியில் கிரகமிருக்க அதின் பரல் இல்லாதிருக்கில் மற்றகிரகம் இல்லாத ராசிப்பரலை நீக்கிப்போடவும்.

## இராசி குணகாரம்.

அந்தந்தராசிகளிலிருக்கப்பட்ட எண்களை அடியிற்காட்டும் தொகையால் பெருக்கி ஒரு சக்கரத்தில்போட இராசிகுணகாரமாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேஷம்.7 | ரிஷபம்.10 | மிதுனம்.8 | கடகம்.4 | சிங்கம்.10 | கன்னி.5 |
| துலாம்.7 | விருச்சிகம்.8 | தனுசு.9 | மகரம்.5 | கும்பம்.11 | மீனம்.12 |

## கிரக குணகாரம்.

முதலில் அந்தந்த காரகாள் ஏறியிருக்கும்படியான ஸ்தானங்களில் இருக்கிற எண்களை அடியிற்காட்டும் தொகையால் பெருக்கி ஒரு சக்கரத்தில் அதற்குரிய ஸ்தானத்தில்போட வந்தது கிரக குணகாரமென்க.

சூரி.5 சந்.5, செவ்.8 புத.5, வி.10, வெ.7, சனி,5.

இராசிகுணகாரம் கிரககுணகாரம் கூடிவந்ததொகை சுத்தபிண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | அஷ்டவர்க்க | 9-ம்-ராசி | பாலைக்கொண்டு | பிதா | பலன் |
| சந்திரன் | ,, | 4-ம் ,, | ,, | மாதா | ,, |
| செவ்வாய் | ,, | 3-ம் ,, | ,, | சகோதரர் | ,, |
| புதன் | ,, | 5-ம் ,, | ,, | அம்மான் | ,, |
| குரு | ,, | 5-ம் ,, | ,, | புத்திரர் | ,, |
| சுக்கிரன் | ,, | 7-ம் ,, | ,, | களத்திரம் | ,, |
| சனி | ,, | 8-ம் ,, | ,, | ஆயுள் | ,, |

சூரியநின்ற இராசிக்கு 9-வது ராசிப் பாலை சுத்த பிண்டத்தால் பெருக்கிக் கொண்டுவந்ததொகையை 27-னல் வகுத்து பூர்வபக்ஷமானல் மீதிநின்ற தொகையை அசுபதி முதற்கொண்டுஎண்ணிவந்த நக்ஷத்திரத்திலும் அமரபக்ஷமாகில் சித்திரைமுதல் எண்ணிவந்த நக்ஷத்திரத்தில் திரிகோணராசியில் குருவரும்போது பிதுருக்கு நல்லபலனும் சனிவரும்போது பீடையும் உண்டாகும்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழம், சுக்கிரன், சனி இவர்கள் 7-பேர் அஷ்டவர்க்கங்களின் ஆதியில் இருந்த எண்களை அந்தந்தராசிக் கிரமமாய் எடுத்து ஒன்ருகக்கூட்டி ஒருசக்கரத்தில் எழுதியது சர்வாங்க அஷ்டவர்க்கு இதில் எல்லாபாலையும் ஒன்ருகக் கூட்டினல் 337 ஆகும்.

## சர்வாங்க அஷ்டவர்க்கம்.

ஒருராசியில் 30-பாலுக்கு மேலிருந்தால் பூரணபலன். பால் 25-குறைந்திருந்தால் மத்திபம். 20-குறைந்திருந்தால் அரைப்பலன் 10-ம் 12ம்-இடம் பால்குறைந்து 11-ம் இடம் பால் அதிகமாக இருந்தால் ராஜயோகம் 11-ம் இடம் பால்குறைந்து 12-ம் இடம்பால் அதிகமானல் மிஞ்சினசெலவு 10-ம் இடம் பால் குறைந்து 12-ம் இடம்பால் அதிகமாயிருந்தால் செய்தொழிலில் லாபமில்லை.

### கிரியாசணமாரகதைசகள் 9-க்கு விபரம்.

1. உற்பன்னதிசைகாணும்விதி ஜன்மநக்ஷத்திரமுதல் எண்ணினல் 6-வது நட்சத்திரமெதுவருமோ அந்த நக்ஷத்திரத்துக்கு என்ன கிரகதசையோ அதுவேயாம்.

2. மிருத்துதசை ஜென்மநக்ஷத்திரத்துக்கு மூன்ருவது நக்ஷத்திரதசை.

3. பிராணதசையாவன சூரியன் ஜெனனகாலத்தில் எந்தராசி பாகைகலையிலிருக்கிருனே அதையறிந்து மேஷாதியாக ராசி (க) க்கு கஅ கலையாகக்கணக்கிட்டு எந்தராசியின் எத்தனையாவது பாகையி லிருக்கிருனே அதை பாகை (க) க்கு (சுய) கலையாக மேல்கண்ட கலைகளுடன்கூட்டி (அ) ஆல் வருக்கவந்த ஈவுகளை அசுவனி முதலாகஎண்ணி மீந்தகலைக்கு எந்த நட்சத்திரம் வருகிறதோ அதே நட்சத்திரத்துக்கு என்னதசையோ அதுவே பிராணதசையாம்.

4. ஆதானதசை ஜென்மநட்சத்திரத்துக்கு எட்டாவது நட்சத்திரதசையாம்.

5. வாமதசையாவன ஜென்மநட்சத்திரமுதல் தலைகீழாக எண்ணினால் நாலாவதாகவரும் நட்சத்திரதசையாகும்.

6. உடுதசையாவன பிராணதிசையில் சூரியனுக்குக் கண்டதுபோல் சூரியன் சந்திரனிருவருக்குங்கண்ட கலைகளை யொன்றுபடுத்தி முன்போலக் கண்ட தசையாகும்.

7. நிரியாணதசையாவன சூரியனுக்குப்பார்த்ததுபோலலக்கினமிருக்கும் பாகைகளை (சுய)ல் பெருக்கில் மீதிகலையோடுசேர்த்து (அா)க்குக் கொடுத்த ஈவுக்கு எற்பட்ட நட்சத்திரம்போக மீதிகலைக்குரிய நட்சத்திரதசையாம்.

8. மகாப்ராணதசையாவன உடுதசைபோல் ஆம்.

9. குளிகநிரியாண தசையாவன குளிகனிருக்கும் இராசி பாகை கலையை முன் பிராணதசை முதலியவைகளுக்கு கண்டதுபோல கலையாக்கி 9-ஆல் பெருக்கி சந்திரனிருக்கும் ராசிபாகை கலைகளைகலையாக்கி மேலே பெருக்கும் படிசொன்ன கலையோடுசேர்த்து (அா) க்கு கொடுத்துவந்த ஈவு எத்தனை யோ அதைமுன்போலவே எண்ணிக்கண்டதுபோக மீதியானகலை யெந்த நட்சத்திரமோ அதற்குரியதசையே ஆகும் மிச்சங் கலையில்லாவிடில் வந்த ஈவின் நட்சத்திரதசையாம் இதுபோலவே எல்லாவற்றினுக்கும் மகாதசை போல் எனக்காண்க.

ஷை 9-தசைகளும் கேந்திர திரிகோண அதிபதியாயும் சுபக்ஷேத்திரத் தில் * பஞ்சபலத்துடனுமிருந்தால் அத்தசாகாலத்தில் விசேஷ ராஜயோக பலத்தைத்தருவார்கள்.

(1) லக்னாதியாய் மாரதசையும் (2) மிருத்துவதசை அல்லது வாம தசையும் (3) நிறியாணதசையும், ஒரேதசையாகவந்தால் அவாள் தசையில் அத்தசாநாதனுக்கு பாவஸ்தானதிபதியாயும் கொடிய விரோத பாவியாயு மிருக்கும் தசாபுக்திகாலத்தில் மாரககாலமாகும்

* பஞ்ச பலன்களாவது (1) ஸ்தானதிபத்தியபலன் (2) க்ஷேத்திரபலன் (3) மூலத்திரிகோணபலன் (4) திருஷ்டிபலன் (5) சம்பந்தபலன்.

---

1902௵ ஜுன்மீ 27௳ க்குச்சரியான கலியுகாதி௵ 5004-ல் செல்லா நின்றசுபகிருது௵ ஆனிமீ 14௳ சுக்கிரவாரம் அமரபக்ஷம் சப்தமிதிதிநாழி கை 59-3. பூரட்டாதிநக்ஷத்திரம் நாழிகை 57-50, முதல் நாள் ஷை நட்சத் திரம் சென்றநாழிகை 2, ஆயுதநாமயோகம் 31-45, பாலவாகரணம் 57-47, இந்த சுபதினத்தில் உதயாதிநாழிகை, 30 அளவில் ஜெனனமான ஜாதக ருக்கு ராசி லக்கினம் நவாம்சலக்கினம் முதலியவைகளும் அடியில்காண்க.

ஆனிமீ ஆதியந்தம் தேதி 32.

இதின் 84-வது பக்கவிபரங்கள் உதாரணப்படிசுக்கிரவாரம் பூரட்டாதி நக்ஷத்திரம் தனுசுலக்கினம் நிச்சயம் காண்க.

70-வது பக்கவிபர உதாரணப்படி சுக்கிரவாரத்துக்கு கடகத்தில் குளிகன்

90-வது பக்க விபரப்படி சுக்கிரவாரம் 30 நாழிகைக்கு குருகால ஓசை தாமிசவேளை.

5-வது பக்கவிபர உதாரணப்படி சுக்கிரவாரம் 30-நாழிகைக்கு புருஷ காலம்.

இதின் 2-வது பக்கவிபர உதாரணப்படி ஆனிமீ துக்குரிய மிதுனலக்கினம் நாழிகை $5\frac{1}{4}$ ஐ தேதி 32க்கு கொடுக்க தேதி ஒன்றுக்கு விநாடி ஒன்பதேமுக்காலேவீச அரைவீசமாக $13\frac{1}{2}$ தேதிக்கு சென்ற நாழிகை வினாடி பன்னிரண்டேமுக்காலே அரைக்கால்போக மீனலக்கினத்தில் பாக்கிநாழிகை 3 விநாடி இரண்டே அரைக்கால் அப்பால்கடகம் $5\frac{1}{2}$ சிம்மம் $5\frac{1}{4}$ கன்னி 5 துலா 5 விருச்சிகம் $5\frac{1}{4}$ ஆக 29-நாழிகை இரண்டே அரைக்கால் விநாடிக்குமேல் தனுசுலக்கினம் நாழிகை $5\frac{1}{2}$ யில் ஐம்பத்தியேழேமுக்காலே அரைக்கால் விநாடி தனுசுலக்கினத்தில் சென்றதில் ஜெனனம்.

8-வது பக்கவிபரப்படி ஜெனனமான தனசுலக்கினம் $5\frac{1}{2}$ ஐ 9 பங்குசெய்ய 2-வது பாகத்தில் ஜெனனம் வருவதால் மேஷாதிமுதல் 2-வது சுக்கிர நவாமிசை லக்கினம் காண.

85-வது, பக்க உதாரணப்படி காலச்சக்காதசை மிதுனபுத காலதசை வருஷம் 9-ல் ரிஷபசுக்கிரகாலபுத்தி 1—8—24—35 ஜெனனம்.

17-வதுபக்க உதாரணப்படி சுபகிருதுஸு ஆனிமீ 14உ பூரட்டாதி நக்ஷத்திரம் 30-நாழிகைக்குபிறந்தஜாதகருக்கு பிரமாதீசஸு கார்த்திகைமீ 30உ 18-நாழிகை வரையில் சனிமகாதசையில் புதன்புக்தி சுக்கிர அந்தரம் முடிவு.

70-71-வதுக்க விபர உதாரணப்படி ஜென்னபூரட்டாதி நட்சத்திரத்தில் குருமகாதசையில் செல்லுபோக பாக்கிஸு 7. மீ 5. நாள் 18.

அன்று நவக்கிரக நிலைகாண்க.

திருவாதிரை 2-ல் சூரியன். மிருகசீரிடம் 3-ல் புதன். உத்திராடம் 2-ல் சனி. பூரட்டாதி 3-ல் சந்திரன். அவிட்டம் 1-ல் வியாழன். சுவாதி 1-ல் ராகு. ரோகணி 4-ல் செவ்வாய் கார்த்திகை 3-ல் சுக்கிரன்- அசுவனி 3-ல் கேது.

| | | | |
|---|---|---|---|
| | கே | சு செ | கு பு |
| சந் | இராசி | | குளி |
| வி சனி | | | |
| ல | | ரா | |

| | | | |
|---|---|---|---|
| | | ல | கே சந் |
| சு | அம்சை | | செ |
| கு சனி | | | வி |
| ரா | | பு | |

அமிசை சக்காத்தில் கிரகங்கள் இராசியில் அடைக்கும்விபரம் இதின்

91-வது பக்கத்தில் காண்க.

மேற்கண்ட அம்சங்கள் எந்த ஜாதகத்திற்கும் அவசியம்கண்டு எழுத விபரங்கள் இருக்கவேணுமென்று அநேகர் கேட்டுக்கொண்டபடி அது அது விபரங்களும் மேல்கண்டஜாதகத்தைக்காட்டி உதாரணத்துடனும் காட்டியது.

82-வது, பக்கத்தில் அகஸ்திய நவநீகறால் தசாபுத்தி அந்தராதி பாவ சங்கிரம் என்கிற நக்ஷத்திரகாலறிந்து பலன்சொல்லும் விபாமும்,

56-வது பக்கமுதல் 19-பக்கம் வரையில் புத்திரபாவமும்.

அனுபந்தம் 3-வது பக்கமுதல் 5-பக்கம் வரையில் அஷ்டவர்க்கம் திரிகோண சோதனை ஏகாதிபத்திய சோதனை ராசிகுணகாரம் கிரககுணகாரம் சுத்தபிண்டம் சர்வாங்க அஷ்டவர்க்கம்.

ஷை 5-வதுபக்கத்தில் நிரியாண மாரகதிசை 9-க்கு விவாமுதலியதும்.

70. 71-வது பக்கத்தில் உலகத்தில் சோதிடம் பார்க்கும் புண்ணியவான்களுக்கு ஜெனன நட்சத்திர தசையில் கெர்ப்பச்செல்லுபோக பாக்கிலும் மீ நாள் நாழிகை விஞடி தற்பரை பாக்கி செல்லவேண்டியதை 4-பாதமாகவகுத்து அல்லது ஆதியந்த நாழிகைக்கு தசை வருஷத்தைப் பங்கிட்டுக்கொடுத்து பார்க்காமலும், லேசாய் காணவும் பலன்கேட்பவருக்கு தற்காலதசாபுத்தி அந்தரம் ஆதிமுதல் கணக்கெடுத்துக்கொண்டு வந்துபார்த்து பலன்சொல்ல வெகு பிரையாசையையும் கால தாமிசப்படும். பழையவழக்கமாய்பார்க்கும் பிரயாசையை நீக்கி அபுரூபமான சோதிடகணிதத்தில்வரும் தசைபுத்தி அந்தரம் ஒரேவரியில் சுலபமாய்பார்க்கும்படியாக செய்வித்து வெளிப்படுத்த சோதிடர் நா-ரெங்கசாமிபிள்ளை புதுவூர் சோதிட நீலகண்டய்யர் மற்றும் அநேக சோதிடர்களும் என்னைக்கேட்டுக் கொண்டபடி நான் **பெரம்பலூர் சோதிடம் துரைசாமி நாயடு அவர்களை** வெகுநாளாய்கேட்டுக்கொண்டபடி அவர் பிரயாசை எடுத்து செய்து யுக்தி பூரணமாயும் சாஸ்திரப்படிக்கும் கோவைசெய்துக்கொடுத்ததை நான் வாங்கி இந்த சுந்தா சேகரம் முதற்பாகத்தில் சேர்த்து அச்சிட்டு 3-வது தடவை ரிஜிஸ்டர் செய்து வெளியிட்டு இருக்கிற பிரயாசையை கவனிக்கக் கோருகிறேன்.

**திரிச்சி புஸ்தகவியாபாரம், தி. சபாபதி பிள்ளை.**

தெப்பகுளம் போஸ்ட்.

வருஷங்கள் - 60.

| | | | | |
|---|---|---|---|---|
| 1பிரபவ | 13பிரமாதி | 25கர | 37சோபகிருது | 49இராக்ஷச |
| 2விபவ | 14விக்கிரம | 26நந்தன | 38குரோதி. | 50நள |
| 3சுக்கில | 15விஷு | 27விஜய | 39விசுவாவசு | 51பிங்கள |
| 4பிரமோதூத | 16சித்திரபானு | 28ஜய | 40பாாபவ | 52காளயுத்தி |
| 5பிரசோற்பத்தி | 17சுபானு | 29மன்மத | 41பிலவங்க | 53சித்தாத்ரி |
| 6ஆங்கிரச | 18தாரண | 30துன்முகி | 42கீலக | 54ரௌத்ரி |
| 7ஸ்ரீமுக | 19பார்த்திப | 31எவிளம்பி | 43சௌமிய | 55துன்மதி |
| 8பவ | 20விய | 32விளம்பி | 44சாதாரண | 56துந்துபி |
| 9யுவ | 21சர்வசித்து | 33விகாரி | 45விரோதிகிரு | 57உருத்திரோ |
| 10தாது | 22சர்வதாரி | 34சார்வரி | 46பரீதாபி | 58இரத்தாக்ஷி |
| 11ஈஸ்வர | 23விரோதி | 35பிலவ | 47பிரமாதீச | 59குரோதண |
| 12வெகுதானிய | 24விக்குருதி | 36சுபகிருது | 48ஆனந்த | 60அக்ஷய |

உ

ஸ்ரீகணபதியேநம:

ஜாதகவிளக்கமென்னும்

# சுந்தரசேகரம்.

## முதற்பாகம்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது, இவர்கள்-கூ-பேரும் நவக்கிரகங்களாம். இவர்கள் சஞ்சாரமாக விருக்கின்ற இடத்துக்கு இர்சிமண்டலமென்று பெயர். அதில் மேஷம் ஆதியாகம் மீனம் அந்தமாகவுள்ள-கஉ-இராசிகளுண்டு.

| | | | |
|---|---|---|---|
| 12<br>மீனம்<br>சவ | 1<br>மேஷம்<br>சவ | 2<br>ரிஷபம்<br>சஅ | 3<br>மிதுனம்<br>ருவ |
| 11<br>கும்பம்<br>சஅ | இராசிகளிற் கண்டிருக்கிற எண் அந்தந்த இராசிக்குரிய நாழிகையாம். இராசி-கஉ-க்கு மொத்த நாழிகை சுய-இதை இலங்கையின் இராசிமான சங்கையென்றுஞ் சொல்லப்படும். | | 4<br>கடகம்<br>ருஒ |
| 10<br>மகரம்<br>ருவ | | | 5<br>சிம்மம்<br>ருவ |
| 9<br>தனுசு<br>ருஒ | 8<br>விருச்சிகம்<br>ருவ | 7<br>துலாம்<br>ரு | 6<br>கன்னி<br>ரு |

ஒவ்வொருதினத்திலுமுள்ள பகல் இரவுமொத்தநாழிகை சு0ம் இந்த-கஉ-இராசிகளுக்குமுரிய மொத்த நாழிகையாம். ஒவ்வொருதினத்திலு மிந்த-கஉ-இராசிகளும் முதலில் உதயமாகு மிராசிமுதல் வரிசைக்கிரமமாய் ஒன்றின்பின் னொன்றாக உதயமாகி செல்லர்கிக் கொண்டிருக்கிறது. சூரியஉதயகாலத்தில் சூரியனோடு எந்த இராசி

உதயமாகிறதோ அதுதான் முதலில் உதயமாகு மிராசியாம். அதை யறியவேண்டியவிபரம்: சூரியன் சித்திரைமாதத்தில் மேஷத்திலும், வைகாசிமாதத்தில் ரிஷபத்திலும், ஆனிமாதத்தில் மிதுனத்திலும், ஆடிமாதத்தில்கடகத்திலும், ஆவணிமாதத்தில் சிம்மத்திலும், புரட்டாசிமாதத்தில் கன்னியிலும், ஐப்பசிமாதத்தில்துலாத்திலும், கார்த்திகைமாதத்தில் விருச்சிகத்திலும், மார்கழிமாதத்தில் தனுசிலும் தைமாதத்தில் மகரத்திலும், மாசிமாதத்தில் கும்பத்திலும், பங்குனி மாதத்தில் மீனத்திலுமிருந்து வருகிறபடியினாலே அந்தந்த மாதத்துக்கு அந்தந்த இராசியின்பேருங் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தமாதத்தில் எந்த இராசியில் சூரியனிருக்கிறதோ அந்தமாதத்தில் அந்த இராசிதான் சூரியனோடு முதலில் உதயமாகிறது. ஒவ்வொருமாதத்துக்குமுரிய இராசி அந்தந்தமாதத்தின் முதல்தேதிமுதல் கடைசிதேதிவரைக்கு முதயமாகிக்கொண்டிருக்கிறதில், ஒவ்வொரு தேதியிலும் அதற்கு ஏற்பட்ட பூராநாழிகையோடும் சூரியஉதய காலத்தில் உதயமாகிக்கொண்டிருக்கிறதா அல்லது தேதிக்குத்தேதி குறைந்த நாழிகையுட னுதயமாகிறதா வென்பதையும், குறைந்து வருமானால்தேதி ஒன்றுக்கு இத்தனை விகடிகைவீதம் குறைந்துவருமென்பதையும், ஒருகுறிப்பிட்டதேதியின் உதயகாலத்தில் ஷை இராசியில் செல்லுபோக பாக்கியிவ்வளவென்பதையும் அந்ததேதிக்கு மொத்தம்-சூ0-நாழிகை-எவ்விதமாகுமென்பதையு மறியவேண்டிய விபரம். முதல் தேதியில் மட்டு மதற்குரியபூராநாழிகையோடு முதயமாகும். மற்றப்படி அந்தஇராசியின் பூராநாழிகையை விகடிகையாக்கி அதை அந்தமாதத்துக்கு எத்தனை தேதியென்றுகண்டு அத்தனை தேதிக்கும்பங்கிட்டுதேதி ஒன்றுக்கு இத்தனை விகடிகை யென்றும் அதைக்குறிப்பிட்டதேதிக்குமுன்தேதியால் பெருக்கி ஷை இராசி நாழிகையிற்கழித்து மிச்சமான விகடிகையெதுவோ அதுதான் ஷை குறிப்பிட்டதேதியின் உதயகாலத்தில் ஷை இராசியில் செல்லானது போக பாக்கியாயிருந்த விகடிகையென்றும் அத்துடன் மற்றஇராசிகளின் நாழிகைகளையும் சேர்த்துக்கண்டதே அந்ததேதிக்கு மொத்த நாழிகையென்றுமறிக. (சூ0-விகடிகைகொண்டது ஒருநாழிகையாம்)

## உதாரணம்.

கார்த்திகைமாதம்-உரு-தேதியை ஒரு குறிப்பிட்ட தேதியாய் வைத்து மேற்சொல்லியதை விவரித்துக் காட்டுவோம்: அதாவது கார்த்திகைமாதத்துக்குரிய இராசி விருச்சிகம், அதற்கு ஏற்பட்ட பூராநாழிகை ருவ-இதை-சூ0 தினல் பெருக்க வந்தது-௩கரு-விகடி

கை இதை அந்த மாதத்துக்கு-௩0-தேதியானல்-௩0-தினுல் வகுத்து தேதி ஒன்றுக்கு வந்தவிகடிகை-௰௭ (இந்தவீதம் ஷை இராசியில் தேதிக்குத்தேதி குறைந்தேவரும். அதாவதுசூரியன் ஷை இராசியில் இந்தவீதம் தேதிக்குத்தேதிகடந்துகொண்டேவருகிறது) இதை முந்தின தேதியாகிய-௨௪-தேதியாலும் பெருக்கவந்தவிகடிகை ௨௫௨ இதை ஷை இராசியின் மொத்த விகடிகையாகிய-௩௧௫-ல் கழித்து மிச்சம்வந்த விகடிகை ௬௩-இது தான் ஷை ௨௫-தேதியில் உதயகாலத்தில் ஷை இராசியில் செல்லானது போகபாக்கியாயிருந்த விகடிகை. இத்துடன் இதற்கடுத்த இராசியாகிய தனுசுமுதல் துலாம் வரையிலுள்ள நாழிகைகளைக் கூட்டி வந்த மொத்த நாழிகை-௫௫ வினடி-௪௮-இத்துடன் சூரியஉதயத்துக்கு முன் விருச்சிகத்தில் செல்லாகவேண்டிய விகடிகை-௨௫௨-யும் சேர்க்கவந்த மொத்தநாழிகை-௬0-என்றறிக (௨௭-நாழிகை அல்லது-௧௫௰-விகடிகை கொண்டது கடிகாரயந்திரத்தின்படி ஒருமணிநேரமாகும்.)

## ஜன்மலக்கினம் அறியும் வகை.

முன்விவரித்தவிதமாய் ஜனனமாதத்துக்குரிய இராசிநாழிகையில்ஜனனமானதேதியின் உதய காலத்தில் பாக்கியாயிருந்ததெதுவோ அதிலிருந்துஜனனநாழிகைவரைக்கும் அதேஇராசியில்சூரியன் சென்றிருக்கும் விகடிகைகளேயும் கழித்துவந்த மிச்சத்தையும் அடுத்த இராசிகளின் நாழிகைகளேயும் ஒவ்வொன்ருய் ஜனனநாழிகை வரைக்கும் சேர்ந்துவந்த நாழிகை எந்தஇராசியி லொட்டுகிறதோ அந்தஇராசிதான் ஜன்மலக்கினமாம்.

### உதாரணம்.

பங்குனிமீ ௰௫௨ பகல்-௩0-நாழிகைக்கு ஒருகுழந்தை ஜனனமானல் ஜன்மலக்கினங் காணவேண்டியவிபரம்.

ஷைமாதத்துக்குரிய மீன இராசியின் மொத்தநாழிகை ௪௳-ல் (அந்தமாதத்துக்கு முப்பதுதேதியானல்) ௧௫௨ உதயகாலத்தில் பாக்கியாயிருந்த விகடிகை-௧௩௬-தேதிஒன்றுக்கு-௮௭-விகடிகை வீதமாய் ஷைஇராசியில் சூரியன் கடந்து வருவதால் ௧௫௨ பகல்-௩௰நாழிகைக்கும்அரைத்தேதிக்குள்ள வீதமாய் கடந்தவிகடிகை-௪௳-இதை மேற்கண்ட விகடிகை-௧௩௬-ல் கழித்துவந்தமிச்சம் விகடிகை ௧௩௧௯ இதையும்இதுமுதல்மேஷம் ௪௭, ரிஷபம்-௪௯-மிதுனம்-௫௳ கடகம் ௫௭ சிம்பம்-௫௳ - இவ்வாறு இராசிகளின்தொகைகளேயும் ஒன்றுசேர்க்க

வந்த நாழிகை-உஎ, விநாடி ககஞ-க்குமேல் கன்னிலக்கினம்நாழிகைரு உடன்சேர்க்கவந்த நாழிகை-ஙஉ-விநாடி-ககஞ-வரைக்கும்கன்னிலக்கினம் இதில் குழந்தை ஜனனமான நாழிகை-ங0-தைக்கழித்து வந்தமிச்சநாழிகை-உ-விஞடி-ககஜம்ஷடிலக்கினத்தில் செல்லானதுபோகபாக்கியாம். ஜனனமான நாழிகை கன்னிராசியிலொட்டினபடியால் கன்னியே ஜன்மலக்கினமாம். இவ்விதமாக ஒவ்வொருவருடைய ஜனனகாலத்தைநிதானித்துலக்கினத்தையறியவேண்டும்.

## இலக்கினஸ்புடம் (இலக்கினநிச்சயம்)

இதுவரை யச்சுக்குவாராதிருக்கும் குமாரசுவாமியம் இரண்டாவதுபாகத்திலிருந்து சேர்க்கப்பட்டது.

### க லி.

"ஜெனனம்வரை யுதயாதிசெல்கடிகையதனை-திசைத் தொகையிலேத்தியதை தினத்தொகைக்கீய்ந்து அதிகமுனத்தின நேர்நடத்தில் அதுவும்; அதின் கோண்வருநாள் முற்றுவதும் உதயதினம், மொழிவதலாது இதன்மேல், தினமருவுமிலக்குடையோன்கேந்திர கோண், திரமாய் செப்புவதல்லாது விதுக்கேழ் செல்வனும் கேந்திர கோண் புனர்பதியிலிதுவுமிதற் கிரவிசுன் சேய்வதியில்-புகல்வர் முடியென்றுன் சந்தணப்பொருப்புற்றவனே"

(இதன்பயன்) சூரியஉதயமுதல் ஜெனனமானநாழிகை வரைக்கும் கூட்டிய நாழிகையை காலாற்பெருக்கியத்துடன்மேஷம் முதல் ஜெனனமான நாழிகைக்கு வரும் இலக்கினம்வரை எண்ணீ வந்த இராசிகளின் தொகையையுஞ் சேர்த்துக்கொண்டு அந்த இலக்கினம் சரவிராசியானல் முன் கூட்டிய இரண்டுதொகையுடன் ஐந்து கூட்டியும் ஸ்திரவிராசியானல் பத்துக்கூட்டியும் உபயவிராசியானல் பதிஞைந்து கூட்டியும் வந்தமொத்தத் தொகையை இருபத்தேழுக்குக் கொடுத்து வந்தமிச்சத்தை பூர்வபட்சமானல் அசுபதிமுதலாகவும் அமரபட்சமானல் சித்திரை முதலாகவும் எண்ணிவந்தால் அந்தத் தொகைக்கு எந்தநட்சத்திரம் வருகிறதோ அதுசென்மநட்சத்திரமாகவாவது அல்லதுஜென்மநட்சத்திரத்துக்கு திரிகோணநட்சத்திரமாகவாவது வரவேண்டும், அப்படிவராவிடில்எந்தநாழிகையும் இலக்கினமும் வித்தியாசமென்றும் மேற்சொல்லிய கணக்கின்படி எந்த நாழிகையும் இலக்கினமும் ஏற்படுகிறதோ அந்தநாழிகையும்இலக்கினமும் நிச்சயமென்றுங் கொள்ளவேண்டியது. (திரிகோண நட்சத்திரமென்பதைப்பற்றி திசைகாண்க.) அன்றியும் சந்திரனிருந்த வீட்டுக்குடையவன் இலக்கினத்துங்கு கேந்திரம் அல்லது திரிகோணத்தி லிருக்கவேண்டும். அல்லதுசந்திரனுக்கு ஏழாமிராசிக்குடை

யவன் சந்திரனுக்கு கேந்திரதிரத்திலிருக்கவேண்டும். அல்லது இலக் கினத்துக்கு குளிகதிரிகோணம்வரவேண்டுமென்பதாம். இதனுலு மிலக்கின·நிச்சய மறிய வேண்டியது.

### குழந்தைபிறந்த நாழிகையினுல் ஆண்பெண்ணறிய விபரம்.

ஒவ்வொரு தினத்திலும் புருஷகாலம் ஸ்திரீகாலம்-கவ-நாழி கைக்கு ஒருதரம் ஒன்றுக்கொன்று மாறிக்கொண்டே வருகிறதில் ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி, இந்த தினங்களில் முதலில் புருஷகாலம் ஆரம்பம். திங்கள், புதன், வெள்ளி இந்ததினங்களில் முதலில் ஸ்திரீகாலம் ஆரம்பமாம். மேற்கண்ட தினங்களில் காலை முதல் காலம் ஒன்றுக்கு-கவ-நாழிகையாக ஜனனநாழிகை வரையில் பார்த்துவந்ததில் புருஷகாலம் வந்தால் புருஷகுழந்தை யென்றும், ஸ்திரீகாலம் வந்தால் ஸ்திரீகுழந்தையென்றும் அறியவேண்டியது. இதற்கு வேறுபட்டாலும் ஜனனமானதாகச் சொல்லப்பட்ட நாழி கையும் பிசகாம்.

| நாழிகை. | ஞாயர் | திங். | செவ். | புதன். | வியா. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| கவ-வரை | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௩¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ரு | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| சுவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| எ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| அ¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| க0 | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ககவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| கஉ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| க௩¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| கரு | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| கசுவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| கஎ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| கஅ¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உ0 | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உகவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உஉ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உ௩¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உரு | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உசுவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உஎ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உஅ¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௩0 | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |

ஜனனமான தினத்துக்குரிய இராப்பகலுக்குள்ள அகஸ் நாழிகை எத்தனையோ அத்தனையையும்-௨௪-ல் வகுத்து வந்தயீவை முதல் காலத்துக்குள்ள நாழிகையாக வைத்துக் கொண்டு அது முதற் கொண்டுஜனனமான நாழிகைவரையிலும் கிரமப்படி நடத்திப்பார்க்கிறது முண்டு. ஒவ்வொரு தினத்துக்குமுள்ள புருஷகாலம் ஸ்திரீ காலங்கள் இதனடியிற்கண்ட அட்டவணையில் தெளிவாய்அறியலாம்.

அன்றியும் ஜன்மலக்கினத்தில் பூர்வபட்சத்துச் சந்திரனிருக்கில் பிறந்தகுழந்தை ஆண். அமரபட்சத்துச் சந்திரனிருக்கில்பெண் ஜன்ம லக்கினத்துக்கு ஒற்றிற்ற இராசியில் சனியிருந்தால் ஆண் இரட்டித்த இராசியில் சனியிருந்தால் பெண் என்றுங் காண்க.

அன்றியும் நவாம்சை இலக்கினம் புருட இராசியானால் புருஷ குழந்தை என்றும், பெண் இராசியானால் பெண் குழந்தை யென்றும் கூறும் நூல்களும் உண்டு.

### ஒவ்வோரு இராசியிலும் கிரகங்களிருக்குங்காலம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் ஒரு ராசியில் | | ஒரு மாதம் வரையிலிருக்கும், | |
| சந்திரன் | ,, | இரண்டேகால்நாள் | ,, |
| செவ்வாய் | ,, | ஒன்றரை மாதம் | ,, |
| புதன் | ,, | ஒரு மாதம் | ,, |
| சுக்கிரன் | ,, | ஒரு மாதம் | ,, |
| வியாழன் | ,, | ஒரு வருஷம் | ,, |
| சனி | ,, | இரண்டரை வருஷம் | ,, |
| இராகு | ,, | ஒன்றரை வருஷம் | ,, |
| கேது | ,, | ஒன்றரை வருஷம் | ,, |

கிரகங்களினுடைய வக்கிரத்தினுலும் அதிசாரங்களினுலும் இந்தகால அளவுக்குச் சற்றேறக்குறைய சில சமயங்களில் பேதப்படும். கிரகநிலையை கோளமென்னும் சாஸ்திரத்தை வாசித்து உணர்ந்தாலொழிய மற்றப்படி பஞ்சாங்கத்திலுள்ள கிரகசாரங் களையே பார்த்துக்கொள்ளவேண்டியது.

இராகு கேதுக்கள்தவிர மற்றக் கிரகங்கள் அடுத்த இராசிகளுக்கு வலது பாரிசமாய்ச் சுற்றிவரும். இராகுகேதுக்கள் இடது பாரிசமாய்ச் சுற்றிவரும்.

சூரியன்-௫-நாள், புதன்- சுக்கிரன் ௭-நாள், செவ்வாய் ௮-நாள், சந்திரன்- ௩-நாழிகை, குரு ௨-மாதம், இராகு-கேது ௩-மாதம், சனி ௯-மாதம், முன்னதாகமற்றொரு இராசியில் பிரவேசிப்பதற்கு முன்

பார்வையாம், சந்திரன்-சனி-கீழ்ப்பார்வை, சூரியன்புதன்-வியாழன் சமபார்வை, இராகுகேது-சுக்கிரன்செவ்வாய் - மேற்பார்வையுடைய வராம், இராகுகேதுக்களுக்கு இடதுபக்கமும், மற்ற கிரகங்களுக்கு வலது பக்கமும் பார்வையாம்.

### கிரகசார நட்சத்திரக்கால்கள்.

அசுவனியாதியாக ரேவதியந்த மாகவுள்ள இருபத்தேழு நட் சத்திரங்களும் மேஷமாதியாக மீனம் அந்தமாகவுள்ள பன்னிரண்டு இராசிகளிலு மடங்கியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| மீனம் பூரட்டாதி பின் கால். உத்திரட் டாதி ரேவதி. | மேஷம் அசுவனி பரணி கார்த்திகை முதற்கால். | விருஷபம். கார்த்திகை பின் முக்கால் ரோகணி மிருகசீரிடமுன் னரை. | மிதுனம், மிருகசீரிடம் பின்னரை திருவாதிரை புனர்பூசம் முன்முக்கால் |
| கும்பம். அவிட்டம் பின் னரை. சதயம் பூரட்டாதி முன் முக்கால். | இராசியொன்றுக்கு இரண்டே கால் நட்சத்திரம், நட்சத்திரம் ஒன்றுக்கு நாலுகால்—இதினால் ஒரு இராசிக்கு நட்சத்திரக்கால் கள் ௯. | | கடகம் புனர்பூசம் பின் கால் பூசம் ஆயில்லியம் |
| மகரம் உத்திராடம் பின் முக்கால். திருவோணம் அவிட்டமுன் னரை. | கால்கள் என்பதற்கு பாதங்கள் என்றும் பெயர். | | சிம்மம் மகம் பூரம் உத் திரம் முதற் கால். |
| தனுசு மூலம் பூராடம் உத்திராடம் முதற்கால். | விருச்சிகம் விசாகத்தின் பின்கால் அனுஷம் கேட்டை | துலாம் சித்திரையின் பினனரை சுவாதிவிசாகத் தின் முன் முக்கால் | கன்னி உத்திரத்தின் பின் முக்கால் அஸ்தம் சித்திரையின் முன்னரை |

பஞ்சாங்கத்திற்கண்டிருக்கிறகிரகபாதசாரங்களில் இன்னின்ன கிரகங்கள் இன்னின்ன நட்சத்திரத்தினித்தனையாவது பாதங்களிலி ருக்கிற தென்றுகண்டால் அப்படிக்கிரகமிருந்தநட்சத்திரக் காலான து இந்தஇராசிச் சக்கரத்திலுள்ள எந்த இராசியி லடங்கி யிருக்கிற தோ அந்த இராசியில்தான் அந்தக் கிரகமிருக்கிறதென் றறியவும். சந்திரன் ஒரு இராசியில் ௨வ-நாள் மட்டு மிருக்கிறபடியால் அது ஒரு நட்சத்திரத்தின் நாலுபாதத்தையும் ஒரேநாளில் கடந்து வருகி

றது. மற்ற கிரகங்களுக்கு அதிக காலமாகையால் அவைகள் அதற்கு த்தக்கபடி மெதுவாய்க் கடந்துவரும். ஒரு குழந்தை ஜனனமானமா ன நாழிகையில் சந்திரனிற்கு மிராசியையறிவதற்கு விபரம். ஜன்ம நட்சத்திரத்துக்குரிய நாலுபாதங்களில் ஜனனம்வரைக்கும் செல்லா னதுபோக எந்தப்பாதம் வருகிறதோ அந்தப்பாதம் இந்தசக்கரத்தில் எந்த இராசியிலடங்கியிருக்கிறதோ அந்த இராசியில் தான் சந்திர னிற்கும்.

## யுகபேதம்.

கிரேதாயுகத்தில் கர்ப்பதானஞ்செய்ப நியமித்த லக்கினமே ஜனனலக்கினமாகவும், திரேதாயுகத்தில் சூல்கொண்ட குறிப்பே ஜனனலக்கினமாகவும், துவாபரயுகத்தில் ஜனனத்தின் தோற்றமே ஜனனலக்கினமாகவும் இந்தக் கலியுகத்தில் குழந்தைபூபதமானதே ஜனனலக்கினமாகவும், கொள்ளுதல் முறைமையாம்.

## நவாம்சலக்கினம் காணும் வகை.

1. ஒருவருடைய ஜன்மலக்கினத்தில் மொத்த நாழிகையை ஒன்பது பங்குசெய்து அதில் ஜனனமான நாழிகை எத்தனையாவது பங்காகிறதென்றுதெரிந்து' மேஷம், சிம்மம், தனுசு இந்த மூன்று இராசிகளில் எந்த இராசியிலாவது ஜனனமானவர்களுக்கும் ஷ்டி ஜனனமான பங்கு எத்தனையோ அத்தனை வரைக்குமுள்ள தொகைப் படி மேஷ முதல் எண்ணிக் கண்ட இராசியே நவாம்சலக்கினம்.

2. விருஷபம், கன்னி, மகரம் இந்தமூன்று இராசிகளிலெதில் ஜனனமானவர்களுக்கும் மகரம் முதல் ஜனனமான அத்தனையாவது பங்கு வரைக்கும் எண்ணிக்கண்ட இராசியே நவாம்சலக்கினம்.

3. மிதுனம், துலாம், கும்பம் இந்தமூன்று இராசிகளில்எதில் ஜனனமானவர்களுக்கும் துலாம் முதல்ஜனனமான அத்தனையாவது பங்கு வரைக்கும் எண்ணிக்கண்ட இராசியே நவாம்சலக்கினம்.

4. கடகம், விருச்சிகம், மீனம் இந்தமூன்று இராசிகளில் எதில் ஜெனனமானவர்களுக்கும் கடகம் முதல் ஜனனமான அத்தனையாவ துபங்குவரைக்கும் எண்ணிக்கண்ட இராசியே நவாம்ச லக்கினமென் றும் காண்க.

உதாரணமாக ஒருவனுக்கு ஜன்மலக்கினம் கன்னி; அதில் ஜன னமானகாலத்தில் செல்லானது விநாடி சரு, 'இதற்கு நவாம்சலக்கி னங் காணவேண்டியதெப்படி யென்றால், ஷ்டி கன்னி இராசிக்குரிய மொத்த நாழிகை ரு இதை ஒன்பது பங்குசெய்தால் பங்கு ஒன்றுக் கு-ௗ௩-விநாடியாகிறது. ஜனனகாலத்தில் ஷ்டி இராசியில் செல்லான விநாடி சரு-ல் ஷ்டி இராசியில் முதலாவதுபங்குக்கு மேற்பட்டும் இரண்டாவது பங்குக்கு உட்பட்டு மிருப்பதினால் ஷ்டி இராசி

யின் இரண்டாவதுபங்கில் ஜனனமானதாககாணவேண்டியது மேற் கண்ட விதியின்படி கன்னிலக்கினத்தில் ஜனனமானவர்களுக்குமகா முதல் ஷ்டி இரண்டுபங்குக்கும் எண்ணிக்கண்ட இராசியாகிய கும் பம் நவாம்ச்லக்கினமென்றும் காண்க.

### நவாம்ச சக்கரத்தில் கிரகங்களைப்போடும் வகை.

ஜனனகாலத்தில் ஒவ்வொரு கிரகத்தையும் அது எந்த நக்ஷத் திரத்தின் எந்தப்பாதத்திலிருக்கிற தென்று தெரிந்து அசுவனி நட் சத்திர முதற்பாதமுதல் அந்தந்த கிரகமிருக்கும் நட்சத்திரபாதம் வரையிலும் உள்ள நட்சத்திரங்களுடைய பாதங்களை யெல்லாம் ஒன்றுய்க்கூட்டி கஉ-ல் கழித்து மிச்சம் எதுவோ அந்த தொகையை மேஷமுதல் எண்ணி கண்ட இராசிகளில் அந்தந்த கிரகங்களைப் போடுவதேயாம்.

### இராசிகளின் சரம், திரம், உபயம்.

மேஷம், கடகம், துலாம், மகரம் ஆக ச-ம் சரவிராசிகள் - துரிதம்.
விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆக ச - ம் ஸ்திரவிராசிகள். [தாமதம்.
மிதுனம், கன்னி, தனுசு, மீனம் - ஆக - ச-ம் உபயவிராசிகள்-சமம்.

### கிரகங்களின் சரம், திரம், உபயம்.

சந்திரன், செவ்வாய், ராகு, கேது ஆக-ச-ம் சரக்கிரகங்கள்.
சூரியன், சுக்கிரன்-ஆக-உ-ம் ஸ்திரக்கிரகங்கள்.
புதன், குரு, சனி-ஆக-ந-ம் உபயக்கிரகங்கள்.
இராசிகளின் உருவம் ஆண், பெண், நிறம், ஜாதி, நோக்குந்திக்கு.

### நோய், ஸ்தானம், அங்கம்.

மேஷம்=ஆட்டினுருவம், ஆண் அல்லது ஒற்றையிராசி, சிகப்பு நிறம், க்ஷத்திரியஜாதி, கிழக்குத்திச்கு, உஷ்ணநோய், ஸ்தா னம் காடு, அங்கம்-தலை.

விருஷபம்=எருதுஉருவம், பெண் அல்லது இரட்டையிராசி, வெண் மை நிறம், சூத்திரஜாதி, தெற்குதிக்கு, ஜலாதிநோய் ஸ்தானம்-விளைபுனம், அங்கம்-முகம்.

மிதுனம்=வீணைபிடித்த பெண்ணும் கதைபிடித்த புருஷனுமான உருவம் ஆண் அல்லது ஒற்றையிராசி, கறுப்புநிறம், ஜாதி, மேற்குதிக்கு, மேகாதிநோய், ஸ்தானம் சோலை யும் பட்டணமும், அங்கம்-கழுத்து.

கடகம்==நண்டு உருவம், பெண் அல்லது இரட்டையிராசி, வெண்மை நிறம், பிரமஜாதி, வடக்குதிக்கு, சலவிஷநோய், ஸ்தானம்-வயல், அங்கம்-தோள்.

சிம்மம்==சிங்கஉருவம், ஆண் அல்லது ஒற்றையிராசி, சிகப்புநிறம், க்ஷத்திரியஜாதி, தென்கிழக்கு; உஷ்ணவிரணநோய்,ஸ்தானம் மலைச்சார்பு, அங்கம்-மார்பு.

கன்னி==கன்னிகையாகி கதிர்க்குலையும் அக்கினியும் கையில் வைத்திருக்கின்ற உருவம், பெண் அல்லது இரட்டை இராசி, வெண்கறுப்புநிறம், சூத்திரஜாதி, தென்மேற்கு, வாதாதி நோய்கள், ஸ்தானம்-நகரம், அங்கம்-பக்கம்.

துலாம்==துலாக்கோல்பிடித்த புருடவுருவம், ஆண் அல்லது ஒற்றையிராசி, வெண்பொன்னிறம், வைசியஜாதி, வடமேற்கு, நீர் புகைச்சலானரோகங்கள், ஆற்றோரமும், கடை வீதியும், அங்கம்-முதுகு-வயிறு.

விருச்சிகம்==தேள்வடிவம், பெண் அல்லது இரட்டையிராசி, கறுப்பு நிறம், பிரமஜாதி, வடகிழக்கு, இரத்தவிரணநோய் விஷநோய்களாம், ஸ்தானம்-கிணறு, அங்கம்-பீஜம்.

தனுசு==அரைக்குமேல் புருடனாகக் கையில் பிடித்த வில்லுமாகி அரைக்குக்கீழ் குதிரையுருவமாகவுமிருக்கின்ற வுருவம், ஆண் அல்லது ஒற்றையிராசி, செம்பொன்னிறம், க்ஷத்திரியஜாதி, தென்கிழக்கு, வாய்வுநோய், ஸ்தானம்-போர்க்களமும் ஊரடுத்த கொல்லையும், அங்கம்-துடை.

மகரம்==மகரமீனுருவம், பெண் அல்லது இரட்டையிராசி, வெண்மைநிறம், சூத்திரஜாதி, தென்மேற்கு, பித்தவாதநோய். ஸ்தானம்-சமுத்திரக்கரை, அங்கம்-முழந்தாள்.

கும்பம்==கும்பஞ்சுமந்த புருடவுருவம், ஆண் அல்லது ஒற்றையிராசி கரும்பசுமைநிறம், வைசியஜாதி, வடமேற்கு, வாதநோய், ஸ்தானம்-ஜலம், அங்கம்-கணுக்கால்.

மீனம்==ஒருமீன்வாலை யொருமீன் கவ்விக்கொண்டு இரட்டை மீனாகச்சஞ்சரிக்கின்ற வுருவம், பெண் அல்லது இரட்டையிராசி, வெண்கறுப்புநிறம், பிரமஜாதி, வடகிழக்கு, ஜலவியாதி நோய், ஸ்தானம்-சமுத்திரம், அங்கம்-பாதம்.

மேஷம்——வேளாளகுலம், ரிஷபம்——இடையர்குலம், மிதுனம்——நீசசாதி, கடகம்——கன்னாரஜாதி, சிம்மம்——நாவிதஜாதி, கன்னி——ஓடஜாதி, துலாம்——செட்டிஜாதி, விருச்சிகம்——வேடஜாதி, தனுசு——தட்டாரஜாதி, மகரம்——வண்ணாரஜாதி, கும்பம்——குயவஜாதி, மீனம்——நீசஜாதியென்றுகூறும் சிலநூற்களுமுள.

## கிரகங்களின் வடிவம்-ஆண்-பெண்-அலி, நிறம், ஜாதி, நோய், நோக்குந்திக்கு, ஸ்தானம் அலங்கம்.

---

சூரியன்—சதுரம் ஆண், சிகப்புநிறம், க்ஷத்திரியஜாதி, சுரம் நேத்திரரோக முதலான உஷ்ணரோகங்கள், கிழக்குதிக்கு, ஸ்தானம்-காடு, அங்கம்-தலை.

சந்திரன்—வட்டம், பெண், வெண்மைநிறம், வைசியஜாதி, கபாதி ஜலபாதைநோய்கள், வடமேற்கு, ஸ்தானம்-ஜலம், அங்கம்-முகம்.

செவ்வாய்—தமருகம் (உடுக்கு) ஆண், சிகப்புநிறம், க்ஷத்திரியஜாதி, இரணரோகாதி இரத்தரோகம், தெற்குத்திக்கு ஸ்தானம்-பூமி, அங்கம்-மார்பு.

புதன்—அறுகோணவடிவம், அலி, பச்சைநிறம், வைசியஜாதி, பிரமியாதி மூளைநோய்கள், வடக்குத்திக்கு, ஸ்தானம்-உயர்ந்த இடம், அங்கம்-இடை-முதுகு.

வியாழன்—நெடும்பட்டம், ஆண், பொன்னிறம், பிராமணஜாதி, சேத்துமாதிநோய்கள், வடகிழக்கு, ஸ்தானம்-நகரம், அங்கம்-வயிறு.

சுக்கிரன்—ஐங்கோணம், பெண், வெண்மைநிறம், பிராமணஜாதி, பித்தம்-குளிர் முதலிய சன்னிநோய்கள், தென்கிழக்கு, ஸ்தானம்-ஜலதீரம், அங்கம்-அரை—ஆண் குறி.

சனி—வில்வடிவம், அலி, நீலநிறம், சூத்திரஜாதி, பித்தவாதநோய், மேற்குதிக்கு, ஸ்தானம்-புராதனநகரம், அங்கம்-துடை.

இராகு—மாலை, பெண், கறுப்புநிறம், பஞ்சமஜாதி, விஷநோய்கள், தேவதைநோய்கள், தென்மேற்கு, ஸ்தானம்-பறைச்சேரி, அங்கம்-கைகள்.

கேது—முறம், அலி, செங்கறுப்புநிறம், நீசஜாதி, விஷாதி சத்துரு நோய்கள், வடமேற்கு, ஸ்தானம்-பறைச்சேரி, அங்கம்-கால்கள்.

இராகு—ஆண் கிரகமென்றும், கேது-பெண் கிரகமென்றும் கூறும் நூல்களும் சிலவுள. அன்றியும் உச்சம் மூலத்திரிகோண க்ஷேத்திரம் பெற்ற கிரகம் பிரமஜாதியென்றும், சொக்ஷேத்திரம் பெற்ற கிரகம் க்ஷத்திரிய ஜாதியென்றும், மித்துரு க்ஷேத்திரம் பெற்ற கிரகம் வைசிய ஜாதியென்றும், சத்துரு க்ஷேத்திரம் பெற்ற கிரகம் சூத்திர ஜாதியென்றும். நீசக்ஷேத்திரம் பெற்ற கிரகம் பஞ்சம ஜாதியென்றும் கூறும் நூற்களும் சிலவுள-

அலியென்பதற்கு 'நபுஞ்சகம் அல்லது ஆணும் பெண்ணுமல்லாத உருவமென்று பெயர்.

## கிரகநோக்கு.

கிரகங்களெல்லாம் தாமிருக்குமிடத்தையும் அதற்கு ஏழாவது இடத்தையும் முழுப்பார்வையாகவும். வியாழன் தானிருக்குமிடத்துக்கு-ரு-ம் இடத்தைக் கால்பார்வையாகவும்-கூ-மிடத்தை முக்கால் பார்வையாகவும் செவ்வாய் தானிருக்குமிடத்துக்கு ச-மிடத்தை அரைப்பார்வையாக்வும் அ-மிடத்தை முக்கால் பார்வையாகவும், சனி தானிருக்குமிடத்துக்கு-ந-மிடத்தைஅரைப்பார்வையாகவும் க0-மிடத்தை முக்கால் பார்வையாகவும் நோக்கும். இவற்றில் அந்தந்தநோக்குக்குரிய கிரகம் பலவந்தரென்பதாம். நோக்கப்பட்ட இடத்தில் கிரகங்களிருந்தாலவர்களேயுஞ் சேர்த்து நோக்குமாம். குளிகனுக்கு எ-ம் இடமும் கஉ-ம் இடமும் பார்வையாம். குளிகன் நவக்கிரகத்தைச் சேர்ந்ததல்ல; இராகு கேதுக்கள் இடது பாரிசமாகவும் மற்றக் கிரகங்கள் வலது பாரிசமாகவும் நோக்கும். இதனடியிற்கண்ட கவியின்பிரகாரம் சூரியனுக்கு ந-க0-ம் சுக்கிரனுக்கு கூ-அ-ம் இராகு கேதுக்களுக்கு-ந-கக-ம் விசேஷபார்வை.

## கவி.

இரவிநிற்கும் ஒன்றுக்கு மூன்றேழ்பத்து, இனிய் புதன் திங்களுக்கு ஏழதாகும், பரவிவரும் செவ்வாய்க்கு நாலெட்டேழு, பகர் வெள்ளிதனக்குமே ஆறெட்டேழு, திருவிருந்த இராஜருக்கு ஐந்தேழ் ஒன்பான், ரெய்ய சனி பார்வைமூன் றெழுபத்து, மருவிவரும் கரும்பாம்புக்கேதுக் கேழு, மறுமூன்றும் பதினொன்றும் பார்வையாமே.

இதனால்-உ-ம்-கஉ-மிடமும் நவக்கிரகங்களுக்கு பார்வையில்லை யென்றறிக (க-ம்- எ-ம் முழுநோக்கு அ-கூ-முக்கால்நோக்கு, ரு அரை நோக்கு, ச-கய-கால்நோக்கு, ங-சு-கக-அரைக்கால் நோக்கென்றுங் கூறும் சில நூல்களுமுண்டு) கிரகங்கள் தந்தம்மாட்சி வீடுகளினின்ற போது இதிற்சொன்ன நோக்குத்தொகை முழுப்பலன். நட்புவீடு களில் நின்றபோது சொன்னதொகையில் நாலிலொன்று குறையும். பகைவீட்டில் நின்றபோது சொன்ன தொகையில் பாதிகுறையும் நீசவீட்டில் நின்றபோது சொன்னதொகையில் நாலில் மூன்றுபங்கு குறையும். மூலத்திரிகோணத்தில் நின்றபோது சொன்ன தொகை யில் இருபதிலொன்று ஏறும். உச்சத்தில் நின்றபோது சொன்ன தொகையில் பத்திலொன்று ஏறும். ஆகையால் இதை புத்தி யுக்தி நுட்பமாய்ப் பார்க்கவேண்டியது.

### சுபக்கிரகங்கள் (பொதுவிதி.)

வியாழன், பூர்வபட்சத்து சந்திரன், சுக்கிரன், புதன்.

### பாபக்கிரகங்கள் (பொதுவிதி.)

சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேதுஅமரபட்சத்துச் சந்திரன் சனிபாம்புகளுடன் சம்பந்தப்பட்ட வியாழன்.

### சுபக்கிரகங்கள் பாபக்கிரகங்கள் (விசேஷவிதி.)

பூர்வபட்சத்தில் ஜனனமான ஜாதகங்களுக்கு

வியாழனும், சந்திரனும், பூரணமான சுபக்கிரகங்கள்.
சுக்கிரன், முக்கால்பங்குவரை சுபக்கிரகம்.
புதன், அரைப்பங்கு சுபக்கிரகம்.
சூரியனும், செவ்வாயும், கால்பங்கு சுபக்கிரகங்கள்.
சனி, இராகு, கேது இவர்களுடன் சம்பந்தப்பட்ட வியா ழன் முழுப்பாபிகள்.
சூரியன், செவ்வாய், முக்கால்பங்கு பாபிகள்.
புதன், அரைப்பங்கு பாபி, சுக்கிரன், கால்பங்குபாபி.
அமரபட்சத்தில் ஜனனமான ஜாதங்களுக்கு

சனி, இராகு, கேது பூரணமானசுபர்கள்—சூரியன், செவ் வாய், முக்கால்பங்கு சுபர்கள்—புதன், அரைப்பங்கு சுபன்—சுக் கிரன் கால்பங்கு சுபன்—வியாழன், சந்திரன், முழுப்பாபிகள்—சுக் கிரன் முக்கால்பங்கு பாபி—புதன், அரைப்பங்கு பாபி—சூரியன், செவ்வாய், கால்பங்கு பாபிகளாம்.

அன்றியும் அமாவாசையில் புதனோடு சேர்ந்திருக்கும் சந்திரனும் முக்கால்பங்கு சுபனும். க்ஷீணசந்திரனும் பாவர்களுடன் சம்பந்தப்பட்ட புதனும் கால்பங்கு சுபர்களென்றும் பூர்வபட்சத்தில் சூரியன் முழுப்பாபியென்றும் கேது முக்கால்பாபியென்றும் அமரபட்சத்தில் சூரியன் முழுச்சுபனென்றும் கேது முக்கால்சுபனென்றுங் கூறும் நூல்களும் சிலவுள. அநேக நூல்கள் விசேஷவிதியை விட்டுவிட்டு பொது விதியைமட்டும் கூறுகின்றன.

## இன்ன கிரகத்துக்கு இன்ன இராசிகள் ஆட்சிவீடுகள் மூலத்திரிகோண வீடுகளென்பது.

| கிரகங்கள் | * ஆட்சிவீடுகள். | மூலத் திரிகோணவீடுகள். | மூலத்திரிகோண இராசியை ௩0-பங்குசெய்து அதிலித்தனை பங்குவரையில் அதிகபலமென்பது. | |
|---|---|---|---|---|
| சூரியன் | சிம்மம் | சிம்மம் | ௨0-பங்குவரையில் | |
| சந்திரன் | கடகம் | விருஷபம் | ௨௭ | ,, |
| செவ்வாய் | மேஷம் விருச்சிகம் | மேஷம் | க௨ | ,, |
| புதன் | மிதுனம், கன்னி | கன்னி | ரு | ,, |
| வியாழம் | தனுசு, மீனம் | தனுசு | க0 | ,, |
| சுக்கிரன் | விருஷபம், துலாம் | துலாம் | ரு | ,, |
| சனி | மகரம், கும்பம் | கும்பம் | க0 | ,, |
| இராகு | | } விருச்சிகம் | | |
| கேது | | | | |

ஒரு இராசியை-௩0-பங்கு செய்வதென்பது—அந்த இராசியின் நாழிகையை—௩0-பங்கு செய்வதாம். அதிலந்தக்கிரகமித்தனை பங்குக்குள்ளிருந்தால் அதிக பலமென்றறிக. கிரகங்களுக்கு ஆட்சிவீடுகளென்று சொல்லியிருக்கிற அந்தந்த ஸ்தானங்களுக்கு அந்தந்த கிரகங்கள் ஸ்தானாதிபதிகளாம். அதாவது அந்த ஸ்தானங்

*ஆட்சிவீடுகளென்பதற்குசொந்தவீடு சொக்ஷேத்திரமென்றும்பெயராம்.

களுக் குடையவர்களாம். உதாரணம் ஒருகுழந்தை பிறந்தலக்கினம் தனுசானல் அதற்கு லக்கினதிபதி யின்னரென்றும் மற்ற பாவாதிபதிகளின்னரென்றும் தெரிவதற்கு விபரம். தனுசு வியாழனுக்கு ஆட்சிவீடு (சொந்தவீடு) என்றும் அதற்கு அவர் அதிபதியாகையால் அவரே லக்கினதிபதி யென்றும் அதற்கு உ-ம் இடமாகிய மகரம் சனியினுடைய வீடாகையால்உ-க்குடையவன் சனியென்று மிப்படியே மற்ற பாவங்களுக்கும் பார்த்துக்கொள்ள வேண்டியது. இராகு, கேது, குளிகன் இவர்களுக்கு ஆட்சிவீடுகளில்லே. இவர்கள் எந்த ஸ்தானத்தி லெந்தக்கிரகத்துடன் சேர்ந்திருக்கிறர்களோ அல்லது எந்த கிரகத்தினல் பார்க்கப்படுகிறர்களோ அவர்களுக்கு அனுகூலமான சுப அசுப பலன்களைக் கொடுப்பார்கள். சில நூல்களில் இராகுவுக்கு கன்னியும். கேதுவுக்கு மீனமும், குளிகனுக்கு கன்னியும். சிலநூல்களில் இராகுவுக்கு மகரமும், கேதுவ்க்கு மேஷமும், ஆட்சிவீடுகளென்று பற்பலவிதமாய்ச் சொல்லியிருந்தாலும் அவர்களுக்கு ஸ்தானதிபத்தியம் கிடையாது. இராகுவுக்கு கும்பமும், கேதுவுக்கு சிங்கமும் மூலத்திரிகோணவிராசிகளென்று கூறும் நூல்களும் சில உண்டு. ஆனல் மற்ற கிரகங்களைப்போல் இவர்களுக்கு மூலத்திரிகோணத்தி லவ்வளவாய்ப் பலமில்லையாம்.

ஒரு ஜாதகத்தில் மூன்று கிரகம் ஆட்சியானல் ஜாதகன் சில பூமிகளையுடைய ஒரு சிற்றரசனவான். மூன்றுகிரகம் மூலத்திரிகோணமானல் ஒரு பெரியதேசத்துக்கு அரசனென்க. ஆனல் இலக்கினத்துக்கு கூ-அ-கஉ-மிடங்களுக்கு அதிபரானலும் நவாம்சையில் நீசமானலும் பூரணயோகத்தைக் கொடார்கள்.

---

இன்ன கிரகத்துக்கு இன்ன இராசிகள் உச்சவீடு, நீசவீடு என்பது.

| கிரகங்கள். | உச்சம் | உச்ச இராசியை ௩0-பங்குசெய்து அதிலித்தனைபங்குவரையில் அதிக உச்சமென்பது. | உச்சராசிக்கு ஏழாமிராசி நீசராசியாம். | நீசராசியை ௩0-பங்குசெய்து அதிலித்தனை பங்குவரையில் அதிக நீசமென்பது. |
|---|---|---|---|---|
| சூரியன் | மேஷம் | க0-பங்குவரை | துலாம் | க0-பங்கு வரையும் |
| சந்திரன் | விருஷபம் | ௩- ,, | விருச்சிகம் | ௩- ,, |
| செவ்வாய் | மகரம் | உஅ- ,, | கடகம் | உஅ- ,, |
| புதன் | கன்னி | கரு- ,, | மீனம் | கரு- ,, |
| வியாழன் | கடகம் | ரு- ,, | மகரம் | ரு- ,, |
| சுக்கிரன் | மீனம் | உஎ- ,, | கன்னி | உஎ- ,, |
| சனி | துலாம் | உ0- ,, | மேஷம் | உ0- ,, |
| இராகு | விருஷபம் | உஉ- ,, | விருச்சிகம் | உ0- ,, |
| கேது | விருச்சிகம் | உச- ,, | விருஷபம் | உஅ- ,, |
| குளிகன் | மகரம் | | கடகம் | |

குளிகன் நவக்கிரகத்தைச் சேர்ந்ததல்ல. இராகு கேதுகளுக்கு உச்சவீடுகள் நீசவீடுகளிருந்தாலும் அவ்வித வீடுகளினுல் மற்றக் கிரகங்களுக்குண்டாகும் அவ்வளவு பலமாவது துர்ப்பலமாவது, இவர்களுக்குகிடையாதாம், இவர்களிருவருக்கும் விருச்சிகம்ஒன்றே. உச்சவிராசியென்றும் விருஷபம் ஒன்றேநீசராசியென்றும், சில நூல்களிலும், இராகுவுக்கு மிதுனம் உச்சமாகவும் கேதுவுக்கு தனுசு உச்சம் மிதுனம்நீசமாகவும் சிலநூல்களிலும், இராகுவுக்கு கடகம் உச்சம், மகரம் நீசமாகவும் கேதுவுக்கு மகரம் உச்சம் கடகம் நீசமாகவும் சில நூல்களிலுங் கூறப்பட்டிருக்கின்றன.

ஒரு ஜாதகத்தில் ஒருகிரகம் உச்சமாகில் அந்தஜாதகனுக்கு துன்பநிவாரணம் உ-கிரகம் உச்சம்பெறில் இராஜ்ஜியாதிகாரம் (அரசன்) ௩-கிரகம்உச்சம்பெறில் இரத கஜ துரகபதாதிகளுக்குத்தலைமை ச-கிரகம் உச்சம்பெறில் லட்சுமிதாண்டவம், ரு-கிரகம் உச்சம்

சு-கிரகம் உச்சம்பெறில் லட்சுமிதாண்டவம், ரு-கிரகம் உச்சம் பெறில் தேவப்பிறப்பும் நீதியுடன் உலகமுழுமையும் காக்குந் தன்மையுமாம். ஆனால் உச்சமாயிருக்குங் கிரகங்களுள் ஒருவரையொருவர் பார்க்கலாகாது, பார்த்தால் அவ்வளவுக்கவ்வளவு யோகமுங் குறைவாம். மேலும் இலக்கினத்துக்கு சு-அ-கஉ-ல் ஸ்தானங்களில் உச்சமானாலும், இராசியில் உச்சமாகி அம்சையில் நீசமானாலும் பூரணயோகத்தைக் கொடார்கள்.

சூரியன் உச்சமாகப் பிறந்தவன் அரசுரிமையையும், மிகுந்த பலாட்டியமும், பராக்கிரமமும், நோயில்லாமையும், அங்கவீனமில்லாமையும், தனதானியமும், நானாவித வாகனங்களையுமுடையவன்.

சந்திரன் உச்சமாகப் பிறந்தவன் நல்ல மனதும், புத்திரவிருத்தியும் சகலமான பேர்களிடத்தில் வாஞ்சையும், நவதானிய லாபமும்; அதிக போகமும், அனேக ஸ்திரீகளைச் சேருதலுமுடையவன்.

செவ்வாய் உச்சமாகப் பிறந்தவன் உலகத்தின்கண் வெகுகாலம் உயிருடனிருத்தலும், அன்னியரிடத்தில் தயவும், பித்ததேகமும், பராக்கிரமமும், மிகுந்த விவேகமும், பிதாபாக்கியமும் பொருந்தி அரசனைப்போலிருத்தலுமாம்.

புதன் உச்சமாகப் பிறந்தவன் கலைக்கியானமெல்லாம் அறிதலும், மிகுந்த நற்குணமும், நல்லபுத்தியும், பந்துக்களிடத்திலும் கீதவாத்தியங்களிலும், சந்தோஷமும், கணக்கதிகாரமறிதலும், பூமியின்கண் ஒப்பற்ற அரசனைப்போலவும், நூறு வயதுவரை வாழ்வையுடைத்தாயிருப்பன்.

வியாழன் உச்சமாகப் பிறந்தவன் இராஜடீக்கும், அதிக ஐஸ்வரியமும், ஆடையாபரணமும், ஸ்திரீகள் நேசமும், மிகுந்த போகமும், கல்வியும், சகல வாகனங்களும் புத்திரர்களுமுடையவன்.

சுக்கிரன் உச்சமாகப் பிறந்தவன் திரவியமும், ஸ்திரீபோகமும், குழந்தைகளும், படிப்புமுடையவன்.

சனி உச்சமாகப் பிறந்தவன் ஆயுள்தீர்க்கமும், சவுக்கியமும், வன்மையும், இன்பமும், பொன், பதி, படை, இவைகளை யுமுடைத்தாயிருப்பன்.

இராகு உச்சமாகப் பிறந்தவன் மிலேச்சராஜதயவும், மிகுந்த வல்லமையும், இனி வரும் காரியத்தைச் சொல்லும்படிக்கான விவேகமான புத்தியும், இளைக்காத நெஞ்சமு முடையவன்.

கேது உச்சமாகப் பிறந்தவன் ஆயுள்வேத முதலிய வேதவேதாந்தங்களும் நன்றாயறிந்து சான்றோர்கள் சந்தோஷிக்கும்படி நடந்துகொள்ளும் மெய்ம்மையு முடையவன்.

☞ மூன்றுகிரகம் ஒரு ஜாதகத்தில் நீசமானல் துக்கமேயாம்.

## நீசபங்க ராஜயோகம்.

நீசக்கிரகமிருந்த வீட்டுக்குடையவன் தனக்குரிய உச்சவீட்டிலிருக்க, இதற்குடையவன் ௫-௯-ல் இருக்க, அல்லது சந்திரனுக்காகிலும் அல்லது அந்த நீசனுக்காகிலும் கேந்திரத்திலிருக்க, அதோடு குருவர்க்கமேறில் நீசபங்க ராஜயோகமாம், இதன்பலன் அரசன் என்க.

## இன்ன கிரகத்துக்கு இன்ன இராசிகள் நட்புவீடுகள் பகைவீடுகளேன்பது.

கிரக நட்பு பகை இராசிகளைப்பற்றி அனேக நூல்களைப்பற்றி ஒன்றுக்கொன்று பல வித்தியாசமாய்க் கூறப்பட்டிருந்தாலும் இதில் இதனடியிற்கண்ட கணித ஆதாரத்தின்படி ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. அதாவது ஒரு கிரகத்துக்கு இன்ன இராசிகள் நட்பு வீடுகள் என்று அறிவதற்கு அந்த கிரகத்தினுடைய மூலத்திரிகோண இராசிக்கு ௨-௫-௭-௮-௯௨-ம் இடங்கள் அந்தக் கிரகத்துக்கு நட்பு வீடுகளாம். இது பொதுவிதி. மேற்கண்ட இலக்கமுள்ள வீடுகளில்எந்த வீடுகளாவது அந்த கிரகத்துக்கு ஆட்சி, உச்சம் நீசம்என்றுவந்தால் அவ்வித வீடுகளைநீக்கி மற்ற இலக்கமுள்ள வீடுகளை அந்தக் கிரகத்துக்கு நட்புவீடுகளென்று அறியவேண்டியது. இது விசேஷவிதி. திருஷ்டாந்தம். சூரியனுக்கு மூலத்திரிகோண இராசி சிம்மம் அதற்கு ௩-ம் இடமாகிய துலாம் அந்தக் கிரகத்துக்கு நீசவீடாகையால்

அதைத்தள்ளி மற்ற ரு-எ-அ-கஉ-ம் இடங்களாகிய தனுசு, கும்பம், மீனம், கடகம் இந்த இராசிகள் அந்த கிரகத்துக்கு நட்பு வீடுகளாம். இவ்விதமாகவே மற்றக் கிரகங்களுக்கு அவரவர்களுடைய மூலத்திரிகோணவிராசியிலிருந்து பார்க்குமிடத்தில் தள்ளவேண்டிய இடங்களாவன, சூரியனுக்கு ௩-ம், சந்திரனுக்கு ௩-எ-ம், செவ்வாய்க்கு அ.ம், புதலுக்கு எ-ம், வியாழனுக்கு அ-ம், சுக்கிரனுக்கு அ-கஉ-ம், சனிக்கு ௩-கஉ-ம், இராகு கேதுக்களுக்கு எ-ம் தள்ளவேண்டியவிடங்களாம். இனி பகைவீடுகளைப்பற்றிய பொதுவிதியாவது அந்தந்தக்கிரகத்துக்குரியமூலத்திரிகோணஇராசிக்குஉ-ச-சு-கூ-க0-கக-ம் இடங்கள் அந்தந்த கிரகங்களுக்கு பகைவீடுகளாம். விசேஷ விதியாவது, சூரியனுக்கு கூ-ம் செவ்வாய்க்கு ச-க0-ம், புதனுக்கு-க0ம், வியாழனுக்கு உ-ம்-ச-ம், சுக்கிரனுக்கு சு-ம், சனிக்கு கூ-ம் தள்ளவேண்டியவிடங்களாம்.

---

## செவ்வாய்தோஷம்.

ஜென்ம இலக்கினம், சந்திரலக்கினம், சுக்கிரலக்கினம் இம்மூன்றுக்கும் உ-ச-எ-அ-கஉ இந்த ஸ்தானங்களில் செவ்வாய் புருஷனுடைய ஜாதகத்திலிருக்கில் பெண்சாதி வியோகமாவாள். பெண்சாதியினுடைய சாதகத்தி லிப்படி இருக்கில் புருஷன் இறந்து விதயாவாள். இருவருக்கும் இப்படி யிருந்தாலும் இல்லாவிட்டா நல்லதேயாம்.

---

## புத்திரபாவம்.

ஐந்தாமிடத்துக்குடையவன் பாபர்சம்பந்தமின்றி சுபக்ஷேத்திரத்திலிருக்க, ஐந்தாமிடத்தில் பாபரன்றி சுபாளிருக்கப்பார்க்க புத்திரகாரகனாகிய வியாழன் சுபக்ஷேத்திரங்களில் சுபாள் சம்பந்தம் பெற்று பலவானாயிருக்க புத்திரருண்டு.

ஷெ வ[illegible]ட்பு பகை இராசிகளாவன.

| கிரகங்கள். | நட்பு வீடுகள். | பகை வீடுகள். |
|---|---|---|
| சூரியன் | தனுசு, கும்பம், மீனம், கடகம் | மகாம், விருஷபம், மிதுனம், கன்னி, விருச்சிகம் |
| சந்திரன் | கன்னி, தனுசு, மேஷம் | மிதுனம், சிம்மம், துலாம், மகாம், கும்பம், மீனம் |
| செவ்வாய் | மிதுனம், சிம்மம், துலாம், மீனம் | விருஷபம், கன்னி, தனுசு, கும்பம். |
| புதன் | விருச்சிகம், மகாம், மேஷம், சிம்மம் | துலாம், தனுசு, கும்பம், விருஷபம், கடகம் |
| வியாழன் | கும்பம், மேஷம், மிதுனம், விருச்சிகம் | விருஷபம், சிம்மம், கன்னி, துலாம் |
| சுக்கிரன் | தனுசு, கும்பம், மேஷம் | விருச்சிகம், மகாம், மிதுனம், கடகம், சிம்மம் |
| சனி | மிதுனம், சிம்மம், கன்னி | மீனம்,விருஷபம்,கடகம், விருச்சிகம், தனுசு |
| இராகு-கேது | மகாம், மீனம், மிதுனம், துலாம் | த்னுசு, கும்பம், மேஷம், கடகம், சிம்மம், கன்னி |

மூன்று கிரகம் ஒருஜாதகத்தில் நட்பாகில் யோகவான், ஆனால் இலக்கினத்துக்கு சு-அ-கஉ-ம் இடங்களிலிருந்தாலும் அவ்விடங்களுக்கு அதிபானாலும், அம்சையில் நீசமானாலும் யோகத்தைக்கொடார்கள்.

**கிரகவக்கிரம் அஸ்தமனம்.**

செவ்வாய், வியாழன், சனி, இவர்களுக்கு நு-ல் சூரியன்வந்தால் இவர்களுக்கு வக்கிரம் எ-ல் சூரியன் வரில் அதிகவக்கிரம் சு-ல் வந்தால் வக்கிரநிவர்த்தியாம், இரவிபாகை கஎ-க்குள் செவ்வாயும், கங-க்குள் புதனும், கக-க்குள் வியாழனும், அ-க்குள் சுக்கிரனும், கரு-க்குள் சனியும்வரில் செவ்வாய்முதல் சனிவரை அஸ்தமனமாம். இரவிக்கு முன்பில் கஉ-பாகைக்குள் சந்திரன்வரில் சந்திராஸ்தமனம், அஸ்தமனத்துக்கு மூடமென்றும்பேர், இன்னகிரகத்துக்கு இன்னகாலத்தில் வக்கிரம், வக்கிரநிவர்த்தி, அஸ்தமனம், உதயம். இவைகளைப்பற்றி பஞ்சாங்கத்திலுள்ள கிரகசாரங்களைக்கண்டு தெரிந்துகொள்ளவேண்டியது. ஒரு ஜாதகத்தில் மூன்றுகிரகம் வக்கிரமானாலும் அல்லது மூன்றுகிரகம் அஸ்தமனமானாலும் துன்பமாம்.

இன்னகிரகத்துக்கு இன்னகிரகம்-சத்துரு, மித்துரு, சமம் என்பது.

| கிரகம். | சத்துரு. | மித்துரு. | சமம். |
|---|---|---|---|
| சூரியன் | சனி, சுக்கிரகு, இராகு, கேது | சந்திரன், செவ்வாய், குரு | புதன் |
| சந்திரன் | இராகு, கேது | சூரியன், புதன் | செவ், குரு, சுக்கிரன், சனி |
| செவ்வாய் | புதன், இராகு, கேது | சூரியன், சந்திரன், குரு | சுக்கிரன், சனி |
| புதன் | வியாழன் | சுக்கிரன், சனி | சூரி, செ, சந், இராகு, கேது |
| வியாழன் | புதன், சுக்கிரன் | சூரி, சந்திரன், செவ்வாய் | சனி, இராகு, கேது |
| சுக்கிரன் | சூரியன், சந்திரன் | புதன், சனி, இராகு, கேது | செவ்வாய், வியாழன் |
| சனி | சூரி, சந்திரன், செவ்வாய் | புதன், சுக், இராகு, கேது | வியாழன் |
| இராகு } கேது } | சூரி, சந்திரன், செவ்வாய் | சனி, சுக்கிரன் | புதன், வியாழன் |

சத்துரு, மித்துரு இல்லாதது சமம்.

## கிரக குணம்.

சந்திரன், வியாழன்—சாத்மீககுணமுடையவர்கள்
சுக்கிரன், செவ்வாய்-இராசத குணமுடையவர்கள்
புதன், சூரியன்-இராகு, கேது, தாமதகுணமுடையவர்கள்.

## கிரக வலிமை.

எல்லாக் கிரகங்களிலும் புதன் குறைந்த பலத்தை யுடையவன் புதனைப்பார்க்கிலும் செவ்வாயும், செவ்வாயைப்பார்க்கிலும் சனியும் சனியைப்பார்க்கிலும் வியாழனும், வியாழனைப்பார்க்கிலும் சுக்கிரனும், சுக்கிரனைப்பார்க்கிலும் சந்திரனும், சந்திரனைப்பார்க்கிலும்சூரியனும், சூரியனைப்பார்க்கிலும் இராகு கேதுக்களும் மேற்பட்ட பலத்தையுடையவர்கள்.

மேற்பட்ட பலத்தையுடைய கிரகங்கள் அவரவர்கள் கீழ்மையுள்ள கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் அந்தக் கீழ்ப்பட்ட கிரகபலன்களையும் அவர்கள் கொடுக்கிற சுபம் அல்லது அசுப பலன்களையும் அவர்களிடமிருந்து வாங்கி தாங்களே கொடுப்பார்களாம்.

## பஞ்சவித ஸ்தானப்பேர்.

இலக்கினத்துக்கு, க-மிடம், ச-மிடம், எ-மிடம், க0-மிடம், ஆக ச-ம் கேந்திரம்.
,, உ-மிடம், ரு-மிடம், அ-மிடம், கக-மிடம், ஆக ச-ம் பணபரம்.
,, ங-மிடம். சு-மிடம், கூ-மிடம், கஉ-மிடம், ஆக ச-ம், ஆபோக்கிலீபம்.
,, ங-மிடம், சு-மிடம், க0-மிடம், கக-மிடம், ஆக ச-ம், உபஜெயம்.
,, க-மிடம், ரு-மிடம், கூ-மிடம், ஆக ங-ம் திரிகோணம் என்றும்பேராம்.

இவற்றுள்.

க, ச, எ, க0, என்னும் கேந்திர இடங்களும் ரு-கூ-என்னும் திரிகோண இடங்களுமாகிய சு-இடங்களும் முற்றிலும் சுபஸ்தானங்களாகும்.

உ, கக, என்னும் இடங்கள் முக்கால்பங்கு சுபஸ்தானங்களும் கால்பங்கு அசுபஸ்தானமுமாகும்.

ரு, என்னும் இடமானது அரைப்பங்கு சுபஸ்தானமும் அரைப்பங்கு அசுபஸ்தானமுமாகும்.

சு, அ, கஉ, என்னும் இடங்கள் முற்றிலும் அசுபஸ்தானங்களாம் ரு, மிடம் முக்காற்பங்கு அசுபஸ்தானமென்றறிக.

சுபர்கள் க-உ-ச-ரு-எ-கூ-க0-கக-ஆகிய இவ்விடங்களிலிருந்தால் உத்தமசுபபலன்களையும், ரு-மிடத்தி லிருந்தால் மத்திமபலனையும், சு-அ-கஉ-இவ்விடங்களிலிருந்தால் தீமையான பலன்களையுங் கொடுக்கும் கிரகங்களாம். பாவிகள், ரு-சு—அ-கஉ-இவ்விடங்களிலிருந்தால் சுபபலன்களையும்,க-உ-ச-ரு-எ-கூ-க0-கக இவ்விடங்களிலிருந்தால் அசுபபலன்களையுங் கொடுப்பார்களாம்.

## கிரகமறைவு.

சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது, இவர்கள் இலக்கினத்துக்கு அ-மிடம், கஉ-மிடத்திலிருந்தாலும், சந்திரன், புதன், வியாழன், இவர்கள், ரு-சு-அ-கஉ-விருந்தாலும் சுக்கிரன், ரு-ல் அ—ல்-இருந்தாலும் மறைவு பெறுவார்களாம்.

## கிரககேந்திரபலன்.

---

க-ச-எ-க0-ஆகிய-ச-கேந்திரங்களும் முறையே இலக்கினகேந்திரம், சதுர்த்தகேந்திரம், சப்தமகேந்திரம், தசமகேந்திரம், என்றும் பேராம். புதன், குரு, இலக்கினகேந்திரத்திலும், சந்திரன் சுக்கிரன் சதுர்த்தகேந்திரத்திலும், சனி, இராகு, கேது, சப்தம கேந்திரத்திலும், சூரியன் செவ்வாய் தசமகேந்திரத்திலுமிருந்தால் அதிக பலம் பொருந்தியவர்களாம். கேது தசமகேந்திரத்தி லிருந்தால் வலிமையுடையவர். அன்றியும் இலக்கினகேந்திரம்தவிர மற்ற கேந்திரங்களுக்கு அதிபதியாய் வியாழனாகில் முழுப்பாபமென்றும், சுக்கிரனாகில் முக்கால் பாபமென்றும், புதனாகில் அரைப்பாபமென்றும், மற்றக்கிரகங்களாகில் விசேஷசுபபலன் என்றும் காண்க. அன்றியும் பாபிகள் கேந்திராதிபதிகளாகில் விசேஷ சுபபலத்தையும் யோகத்தையும் அவர்கள் தசாபுத்திகாலத்தில் கொடுப்பார்களென்றுங் காண்க.

கேந்திராதிபதிகளுக்குள் ஒருவருக்கொருவர் அதிக பிரபலாவார். அதாவது இலக்கினாதிபதிக்கு ச-ம் இடத்ததிபதி பிரபலன், அவனுக்கு எ-ம் இடத்ததிபதி பிரபலன், அவனுக்கு க0-ம் இடத்ததிபதி பிரபலன்.

## எல்லாக்கிரகங்களுடைய நன்மை துன்மையை பொதுவில் கூறுகின்றது.

இலக்கினத்துக்கும், ரு-ம் இடத்துக்கும் கூ - ம் இடத்துக்கும் அதிபராய் எந்தக்கிரகங்கள் வந்தாலும் அளவில்லாத இன்ப பலனைக் கொடுப்பார்கள். ங-ம் இடத்துக்கும் சு-ம் இடத்துக்கும் கக-ம் இடத்துக்கும் அதிபராய் எந்தக்கிரகங்கள்வந்தாலும் அளவில்லாத துன்பபலனைக் கொடுப்பார்களாம். ஆனால் ங—சு-கக-ம் இடங்களி லிருப்பவர்கள் பாபபலனைக் கொடார்களென்றறிக.

முன்சொன்ன எல்லாக்கிரகங்களும் ஒருவருக்கொருவர் அதிக பிரபலராவர். அதாவது இலக்கினாதிபதிக்கு ரு - ம் இடத்ததிபதி பிரபலன். அவனுக்கு கூ—ம் இடத்ததிபதி பிரபலன் ங-ம் இடத்ததிபதிக்கு சு-ம் இடத்ததிபதி பிரபலன், அவனுக்கு கக-ம்-இடத்ததிபதி பிரபலன்.

எட்டாம் இடத்ததிபதி பாக்கியத்தானத்துக்கு விரயத்தானாதிபதியான பாவகத்தினாலே நன்மை பெருக்கமில்லாத துன்பத்தைக் கொடுப்பான், அந்த அ-ம் இடத்ததிபதிதானே இலக்கினாதிபதியானால் மாறுபட் டின்பத்தைக் கொடுப்பான். (அ-ம் இடத் ததிபதியை போல மிகவுந் துன்பத்தை கொடானென்று காண்க.)

## கிரக க்ஷேத்திரபலம்.

நீசக்ஷேத்திரம்பெற்ற கிரகபலம் பூச்சியம், சத்துருக்ஷேத்திரம்பெற்ற கிரகபலம்-வ - மித்துரு க்ஷேத்திரம்பெற்ற கிரகபலம்—உ கேந்திரம்பெற்ற கிரகபலம் ௨௱ - திரிகோணம்பெற்ற கிரகபலம்-௩- சொச்சேத்திரம்பெற்ற கிரகபலம் ௩௱- மூலத்திரிகோணக்ஷேத்திரம்பெற்ற கிரகபலம்-௪. உச்சக்ஷேத்திரம்பெற்ற கிரகபலம்-௪வ.

## இலக்கினமுதல் துவாதசபாவக விபரம்.

1. இலக்கினமாகிய முதலாவது இராசி, ஜீவன், தேகம்,காந்தி, வடிவம், பொக்கிஷம், கேந்திரம்,உதயம், நிறம், இரத்தம்,சிரசு, நினைப்பு, மனவாட்டம், பிரதியமிசம், லக்ஷணம், கீர்த்தி, மூர்த்திகரம்

(கடவுள்வணக்கம்.) சுபகரம், சந்தோஷம், ஐம்புலன்பொறி, நாளாமி ஜன்மம், ஆயுள்முதலியவைகளைத் தெரியச்சொல்வதற்கு லக்கி கினத் அல்லது இந்த முதலாவது இடமாகும்.

(2) தனம், குடும்பம், நேத்திரம். கல்வி, பெருத்தசொ ாக்ஷே பூரணபாக்கியம், வசனம் (வாக்கு) சாஸ்திரவிசாரணை,கமனப் ரகள்வி உத்தேசம், மேம்பாடடைதல்,பொன்னுபரணம், இரத்தினப் பார்க்க பூச்செல்வம் யோகவிஷயம் முதலியவை தெரியச்சொல்லுமிட ரகங் இலக்கினத்துக்கு இரண்டாமிடமாம்.

(3) சகோதரம்,(சகோதரன்,சகோதரி.) இராஜகாரியம் வெற்றி, வைபோகம், ஆளடிமை, சங்கீதம், பராக்கிரமம்,சாந்தம், அணிகலம், காதுநோய், கர்ணபூஷணம், (காதுநகைகள்,) போசன பாத்திரம், வீரம், உத்தியோகம், தைரியம், கடன், ஆயுள், தேவதாபக்தி முதலியவை தெரியச்சொல்லுமிடத்து லக்கினத்துக்கு மூன்றாமிடமாம்.

(4) மாதுரு, வாகனம், கிரகம்,பூமி,கல்வி,சுபகரம், வியாபாரம் வெல்லத்தகுந்த மேன்மை, சுகம், விருந்து, பந்துக்கள், சுற்றம், நிக்ஷேபம் (புதைபொருள்,) பரஸ்திரீகவனம், வாசனைத் திரவியம், பாலுள்ள பசுமாடும் கன்றும், தேவாலயம், கிராமம், தானியம், ஏரி,குளம், கிணறு, தோப்பு, காடு, நவரத்தினம், சிநேகம் முதலியவை தெரியச்சொல்லுமிடத்து இலக்கினத்துக்கு நான்காமிடமாம்.

(5) புத்திரன்புத்திரி, தாய்வழி, அம்மான்வர்க்கம், தகப்பன் வர்க்கம், முன் ஜன்மத்தில் செய்த நல்வினை, மகாவித்துவான்களால் பிரபந்தம்பெறல்,கர்ப்பாதானம், மந்திரோபதேசம், சத்காலக்ஷேபம் விதரணம், இராஜன்தானம், பிரபு, யோகாப்பியாசம், மறுஜன்மம், புத்தி. முதலானவைகளைத்தெரியச்சொல்லுமிடத்து இலக்கினத்துக்கு ஐந்தாமிடமாம்.

(6) வியாதி, சத்துரு, தாயாதிவிரோதம்,துக்கம், ஆயுதகாயம், பங்காளிவழக்கு, பயம், துன்பம்,சண்டை, தேகநோய், பொல்லாத ஆபத்து, கடன், திருடராலும் ஜலத்தாலும் ஸ்திரீகளாலும் சர்ப்பத்தாலும் அபாயம்; தேகவாதை, மரணவாதை, அதிகாரஞ்செலுத்தல் காவல்படல், முதலியதை இலக்கினத்துக்கு ஆறுமிடத்தைக்கொண்டு சொல்லுதல்.

(7) களத்திரம், கலியாணம், பெண்டுபிள்ளைகளுக் குண்டாகுஞ்சுகம், சுகபோகம், அலங்காரம், பந்துக்கள்வரவு,விபகாரவிசாரணை இராஜபிரபுசன்மானம், யாத்திரை, வியாபாரம், ஓர்தொழிலுமின்றி

வரும்வசியம், பின்தாரம், பின்தார புத்திரர்கள் புத்திரவிரோதம் ...லியதை இலக்கினத்துக்கு ஏழாமிடத்தைக்கொண்டு சொல்லு...

(8) ஆயுதபீடை, யுத்தகளமாணம், மலையேறிவிழுதல்,வியாதி ... விக்கினம், கிலேசம், மிருதியானபலதுக்கம், விரணம், தன ... நஷ்டம், பகைநேரல், அபஜெயம், விஷபயம், மாணம், முய ...கடுதல், பதனம், வழக்குவிவகாரம், ஆயுசு, முதலியதை இலக்...த்துக்கு எட்டாகுமிடத்தைக் கொண்டுசொல்லுதல்.

(9) பிதுர் (தகப்பன்) பாக்கியம், யாகாதிகிருத்தியம்,தானதர்மம், சத்திரம், சாவடி, தடாகமுண்டாக்கல், தேவாலய பிரதிஷ்டை, பேர்விளங்கத் தண்ணீர்பந்தல்வைத்தல், தர்மத்துக்கு கிணறு வெட்டுவித்தல், பாடகசாலையேற்படுத்தல்முதலிய புண்ணியகருமம்குருவினிடத்தில் உபதேசம்பெறல், ஜிவகாருண்யம்,பக்தி, போகம்,கீர்த்தி, அஷ்டமாசித்தி,ஞானம், வனம், மலை யிவைகளிற் சஞ்சரிக்க விரும்புதல், பிதாபொருள், நினைத்தசெல்வமனுபவித்தல், முதலியவற்றை இலக்கினத்துக்கு ஒன்பதாமிடத்தைக்கொண்டு சொல்லுதல்.

(10) ஜீவனம், பற்பலதருமம், சத்கருமம், வியாபாரம், கிராம பூமிக்ஷேத்திரலாபம், இராஜாதிக்கம், தன்பேரால் நாடுநகரமுண்டாக்கல், அவ்வியகவ்வியம், தயை, ஞானம், தெய்வபூசை, தகப்பன் செய் பாவமொழித்தல், தெய்வபக்தி, பராக்கிரமம், பேரும்பிரதாபமும், இரவில்சையோகம், வஸ்திராபரணம், போஜனருசி, மனை வீடு தேசசஞ்சாரப்பிரியம் முதலியதை இலக்கினத்துக்கு பத்தாகுமிடத்தைக்கொண்டு சொல்லுதல்.

11. லாபம், மூத்தச்சகோதரம், மூத்தசகோதர யோகபாகங்கள், கல்வி, பொன்வரும்படி,பயிர்பச்சைவரும்படி, நிட்சேபம்,புதைபொருள், சுயார்ஜிதவரும்படி, ஆடையாபரணம், பூமி யர்ள்விர்த்தி, பலதாரசம்போகம், அஸ்வம், கெஜம், தண்டிகைவாகனங்கள், மனோவியாகுலம்போக்கல், ஞானம், சேவகஞ்செய்பவர், பலவிதத்திலும் ஐஸ்வரியமுண்டாகுதல் முதலியன இலக்கினத்துக்கு பதினோராமிடத்தைக்கொண்டுசொல்லுதல்.

(12) விரயம், தனவிரயத்தோடு உண்டாகும்போகம், மோக்ஷம் நித்திரை சவுக்கியம், பிரதேச உத்தியோகம், மலைநாடு பூமிபிரதக்ஷணசஞ்சாரம், விவாகமுண்டாகுதல், தானதர்மம்,பரவுபகாரம், யாகாதிகிருத்தியம், கொடை, மந்திராதிபலவகைதொழிற்றுறைச்செய்கை

கப்பல் வியாபாரம் முதலியன இலக்கினத்துக்கு பன்னிரண்டாமிடத்தைக்கொண்டு சொல்லுதல்.

மேற்சொல்லிய ஸ்தானங்களுக்குரிய அதிபதிகள் இலக்கினத்துக்குகேந்திரம், திரிகோணம்,உச்சம், மூலத்திரிகோணம்,சொக்ஷேத்திரம், மித்துரு, தனலாபஸ்தானங்களிலிருந்தால் ஷை பலன்கள்விர்த்தியாக நடக்கும், ஷை ஸ்தானங்களில் சுபக்கிரகங்களிருக்கப் பார்க்க உத்தமம்.

புத்திரகளத்திர ஸ்தான முதலானவைகளுக்கொத்த சுபக்கிரகங்களுடைய தசாபுத்திகளிற் புத்திரதாராதி சுபபலன்களைப் பெறும்படிக்கொடுப்பார்களாம், புத்திரதாராதி ஸ்தானங்களுக்கொத்த சுபராரெனில் அத்தானுதிபதிகளும் காரகாளுந்தான்.

துவாதசபாவகம் என்றால்-கஉ-பாவகம்-பாவகமென்பது இலக்கினமுதல்-கஉ-இராசிகளிருப்பதில் ஒவ்வொன்றுக்கும் பாவகமென்றேபேராம்.

ஷை ஸ்தானங்களில் பாபிகளிருக்கப் பார்க்க ஷை பலன்கள் விர்த்திக்குவராமல் குறைவுபடுமாம், ஷை ஸ்தானுதிபர்கள் பாவக்கிரகங்களுடனும் சத்துருக்கிரகங்களுடனும், சம்பந்தப்பட்டும் பார்க்கப்பட்டும், இலக்கினத்துக்கு ௬-௮-அ-கஉ, இந்த துர்ஸ்தானங்களிலாவது பகை க்ஷேத்திரம் அல்லது நீசக்ஷேத்திரத்திலாவதிருந்தாலும் ஷை பலன்கள் குறைவாம்.

புத்திரஸ்தானம் சகோதரஸ்தானம் இந்தஇடங்களிலாவது இந்தஇடத்ததிபதிகளுடனாவது ஆண்கிரகம்கூடியிருக்கினும்பார்க்கினும் புத்திரபலன் அல்லது சகோதரபலனில் ஆணதிகமாம். பெண்கிரகங்களிருந்தாலும் பார்த்தாலும் கூடினாலும் பெண்சகோதரமல்லது புத்திரிகளதிகமாம், அலிக்கிரகங்களிருந்தாலும்,பார்த்தாலும்கூடினாலும் சகோதரமல்லது புத்திரபாவங்களுக்குக்குறைவாம். அப்படிப்பட்ட அலிக்கிரகங்களை சுபர்பார்த்தால் தாமதலாபமும் அகாலவிருத்தியும் முன்னடுத்துண்டாகி மரணமடைந்தும், பின்லாபசகோதரம் புத்திராதி தீர்க்கமாயிருக்கும்,

## நவக்கிரக காரகங்கள்.

### சூரியன்.

பிதுர் (பிதா,) ஆத்மா, சிரசு, தந்தம், வலதுநேத்திரம், சிலும்பினமயிர், பைத்தியசரீரம், வைத்தியம், ஒருதலைநோவு முதலிய சிரோரோகம், சுரம், வியாதிஸ்திரீ அல்லது சித்தசுவாதீன மில்லாத

ஸ்திரீபோகம், சௌரியம், பிரதாபம், தைரியம், இராஜசேவை, உத்தியோகம், சைவாநுஷ்டானம், தபசு, சதாசிவன், பஞ்சலோகம், வச்சிரரத்னம், இரசவாதம், ஆணை, கோதுமை, பால், மிளகு, யாத்திரை, பகற்பொழுது, ஒளி இவைகட்கெல்லாம் சூரியனே காரகன்.

### சந்திரன்.

மாதுர் (மாதா) பராசத்தி, கணபதி, சுகபோசனம், வஸ்திரம், குதிரை, நித்திரை, சிறிதுநாள் பருத்து மெலித்து இருக்கும் சரீரம், சித்தசுவாதீனமின்மை, க்ஷயரோகம், சிலேத்தும சீதள நோய்கள், இடக்கண், புருவம், குடை, உத்தியோகம், கீர்த்தி, முத்து, முத்தாபரணம், வெண்கலம், வெண்ணெய், அரிசி, பனிப்பயறு, உப்பு, மச்சம், உழவன், உப்பளவர், வண்ணார், சத்திரம், கந்தபுஷ்பம், சாமரம் பலம், ஸ்நாநாதிகம், இவைகட்கெல்லாம் சந்திரனே காரகன்.

### செவ்வாய்.

சகோதரம், பூமி, சுப்பிரமணியர், விக்கினேசுவரர், பத்திரகாளி கோபவான், குலாலன், அக்கினிமுகமாகச் செய்யுந் தொழிலினர், யுத்தம், இரத்தம், காயம், சாகசம், செம்பு, சிவந்த ரத்னமுதலானவை பவளம், துவரை, அக்கினிபயம், விரணம், துவேஷம், கடன், சோரம், சுயம்பாகம், வீரியம், உத்சாகம், ஆட்டுவர்க்கம், சேனாதிபத்தியம், விதவஸ்திரீபோகம், சும்பனம், பிளவை, சடுதி மரணம், இவைகட்கெல்லாம் செவ்வாயே காரகன்.

### புதன்.

மாதுர் வர்க்கம் (அம்மான் முதலானவர்கள்) கல்வி, ஞானம், விஷ்ணுபகவான், வைசியன், கணக்கன், தானாபதி, தூதுவன், தேர்ப்பாகன், வாக்குசாதுரியம், கதைகாவியம், உபாசனை, யுக்தி சத்தியவசனம், வைஷ்ணவகர்மம், வியாபாரங்கள், விகிதத்தொழில், சிற்பத்தொழில், அலி, தேர், தாதன், அந்தரநாட்டிய முதலானவை அண்டரோகம், வாதநோய், விஷையசோரன், தாசிபரன், சகல பிரபஞ்சமுமறிந்தவன், திறவசனாதிகன், புத்திரக்குறைவு, பச்சைரத்தினமுதலானவை சேங்கன்றுவர்க்கம், இலைமுதலானவை பாசிப்பயறு தாரா வெந்தயம் இவைகட்கெல்லாம் புதனே காரகன்.

### வியாழன்.

புத்திரர், பிர்மா, ஞானம், யோகாப்பியாசம் ஆசாரியத்துவம் அஷ்டமாசித்திகள், உபதேசம் புத்தியுத்தி விவகார ஆலோசனை

முதலானவை, இராச்சியாதிபத்தியம்,இராசசன்மானம், பட்டபேர், சுருதி, ஸ்மிருதி, சத்விஷயம், சாந்தம், சொர்ணம், வைடூரியம், புட்பராகம், கோமேதகம், புஷ்பம், தித்திப்பு, நேத்திரங்கள், விப்பிரவர்க்கம், ஆண்டிவர்க்கம், ரிஷயவர்க்கம், தேன், கடலை, சீரகம், இவைகட்கெல்லாம் வியாழனேகாரகன்.

சுக்கிரன்.

களத்திரம், கிரகம், பட்டப்பேர், பகற்காலமாதுரு, வெகுஸ்திரீசங்கம், தாசிதாசனமுதலானவர், சங்கீதவாத்தியம், பரதநாட்டியமுதலானவைகளிற்பிரியம், கெந்தபுஷ்பம், புனுகு, கஸ்தூரி, முதலாகியநானாவித பரிமளவாசனாதிகள், கட்டில், மெத்தை, சப்பிரமஞ்சமுதலானவை, வெண்சாமரை, இராஜஸ்திரீ, ரூபவதி, போகபோக்கியம், அழகு, இளமை, கருவிழி, சம்பத்து, வாகனம், மாலை, கொடி, டால்முதலானவை, ரத்னம், வெள்ளி, கப்பல்வியாபாரம், எப்போதும் விகடவிநோதபரியாசப்பிரசங்கப் பிரியம், ஆசை, ஸ்ரீதேவதையுபாசனை, சனாரக்ஷகம், மித்திரம், பசு, பால், தயிர், அன்னம்மொச்சை, புளி, ஈயம், தேவப்பெண்கள், இலட்சுமிகடாக்ஷம், இவைகட்கெல்லாம் சுக்கிரனேகாரகன்.

சனி.

தீர்க்காயுசு-நிசிகாலத்துபிதா, சாத்தான் (ஐயனார்) உபாயம், ஜீவனம், எருமைவிர்த்தி, இரும்பு, ஆளடிமை, சேவகாவிர்த்தி, வயற்களம், கிருஷித்தொழில், நீலரத்னமுதலானவை, மரவேலை, களவு, ஆத்ம இம்சை, சிறைப்படல், இராஜதெண்டனை, வீண்வார்த்தை வெட்க மில்லாதவை, துன்பம், வாயடித்தல், கடன், அசுபகர்மம் மயக்கபோசனம், நீசஸ்திரீ விதவைஸ்திரீ திவாந்தரபிரவேசஸ்திரீ அல்லது ஊனமானஸ்திரீபோகம், அலி, அவையவக்குறைவு, சித்தபிரமை, மேகநீர் உபத்திரவம், பிந்தரோகம், கடுகு, உளுந்து, எள்ளு, எண்ணெய், இவைகட்கெல்லாம் சனியேகாரகன்.

இராகு.

ஞானம், பிதாமகி, (பிதுர்பாட்டன்வம்சம்,) பிரதாபம், செப்பிடுவித்தை, களவு, நானாவிதவேடத்தொழில், சேவகத்தொழில், பரதேசவாசம், சாதிக்குவிரோதமாய்செய்யாததொழில்கள் செய்தல், விகடவிநோதவித்தைகள், வியாதிஸ்திரீபோகம், விஷபயம், ஜலகண்டம், அங்கவீனம், வெகுபேச்சு, வாயுவு வலிப்பு, பித்தம், குன்மம், வெட்டுக்காயம் பிளவைமுதலிய ரோகங்கள். விலங்கு உக்ரகுடிலும், சிறைப்படல் இவைகட்கெல்லாம் ராகுவேகாரகன்.

## கேது.

ஞானம், மாதாமகி (மாதுர்வழிபாட்டன்வம்சம்) கபடத்தொழில், சும்பனம், கீழ்க்குலத்தொழில், விபசாரம், பாபத்தொழில், பரதேசஜீவனம், விரணம், விஷபாண்டு, குஷ்டம், உதாவலிமுதலாகிய ரோகங்கள், அக்கினிகண்டம், அகங்காரம், அசுகம், சிறைப்படல் இவைகட்கெல்லாம் கேதுவேகாரகன். பிதாமஹீக்குகேதுவும்காரகனென்றுகூறும்நூல்களும் சிலவுள.

நவக்கிரககாரகமென்முல் இன்னின்னகிரகங்கள் இன்னின்ன பலன்களைக்கொடுக்க அதிகாரிகளாயிருக்கிறார்களென்பதாம், ஷுகாரகர்கள் சுபர்சம்பந்தம்அல்லது சுபர்பார்வைபெற்று சுபஸ்தானங்களிலிருந்தால் ஷுபலன்கள் விர்த்தியாய் நடக்கும். பாவர் அல்லது சத்துரு சம்பந்தம் அல்லது பார்வைபெற்றும் பாபஸ்தானங்களிலிருந்தால் ஷு பலன்கள் குறைவாம் (சுபஸ்தானமாவது உச்சம், சொச்சேத்திரம், திரிகோணம்-நட்புராசிகள், தனலாபஸ்தானங்களுமாம், பாபஸ்தானங்களென்பது-பகை, நீசம் இவ்விடங்களும் ௩-௬-அ-௰௨-இவ்விடங்களுமாம்.)

## இலக்கினபலன் முதலியன.

### மேஷம்.

இராஜவெகுமானம், வெகுசனப்பிரியன், தைரியவான், அடிமையுள்ளவன், மூர்க்கன், சாமார்த்தியன், மோகி, மெலிந்ததேகவான் அடக்கமுடையவன், தனவான், புத்திமான், அனுசாரன், சஞ்சாரி, பொறுமை, அறிவு, அழகு, மனோபயம் இவைகளையுடையவன், உபயகளத்திரம், ஆயுதம், நெருப்பு, மரம், கல் சுவர் விழுதல்இந்தவகைகளிலெதினுலாவதுவிரணமுள்ள சரீரம், சகோதரசிரேஷ்டன், அற்பபுத்திரருடையவன், ச-ரு-எ-௧0-௨0-௨௨-௨ரு-௨அ- இந்த வயதுகளில் அக்கினி, சுரம், ஜலம், சிரங்கு வைசூரி, விஷம், அல்லது பார்க்க, ௱-வயதுவரையிலிருப்பான். இந்த இலக்கினத்துக்கு சூரியன், வியாழன்இவர்கள் சுபர்கள் சனிசம்பந்தப்பட்ட வியாழன் எப்போதும் அவனுக்கேற்ற பாபபலனைக்கொடுப்பான். வியாழன், சூரியன், யோககாரகாள், இவர்கள்ஒரோராசியிலிருந்தால் பிரபலயோகம்.புதன் சுக்கிரன், சனி, இவர்கள் பாபிகள்சனிபுதன் மாரகாள். துதியாதிபதியாயிருந்தாலும் கொல்லான். சனிமுதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய-௨-௩-எ—அ-௧௨—ல், இருந்தால், மாரகத்துக்கொப்பாகிய கண்டத்தைக்கொடுப்பார்கள்.

## விருஷபம்.

ஸ்தூலதேகவான், களத்திரதோஷம், சத்தியவான், சுயகாரிய பரன், பிறர்சொத்தைகிரகிக்கவல்லவன், மனோகபடி, புருஷவசியன், வஸ்திராபரணமுள்ளவன், குணதோஷமறிவன், அடிமையுள்ளவன், பிற்காலபுத்திருடையவன், ரு-ய௲-யகூ-யகூ-உய-உஎ - இந்தவயதுக ளில் சுரம், கண்டத்தில்வியாதி, க்ஷயம், சிரங்கு, இவைகளாற் பீடை இந்த இலக்கினத்தை சுபக்கிரகங்கள் பார்த்தால் வயது-எஎ வரையி லிருப்பான்; சூரியனும்சனியும்நல்லவர்கள்சனியொருவனே மேலான இராஜயோகம்கொடுப்போன், சந்திரனும், வியாழனும், சுக்கிரனும் பாபிகள், சந்திரன், வியாழன், செவ்வாய், மாரகாள், புதன் கொல் லான், வியாழன் முதலானவர்கொல்வர், மாரகஸ்தானமாகிய உ-௲-எ அ-கஉ-ல் இருந்தால் மாரகத்திற்குச் சமானமாகியகெண்டத்தைக் கொடுப்பார்கள். சந்திரன், வியாழன், சுக்கிரன்செவ்வாய், இவர்களு டன் சம்பந்தப்பட்ட கிரகங்களை ஆராய்ந்து அவர்கள் நிலைகளறிந்து ஞ்சொல்லவும்.

## மிதுனம்.

சுயகாரியபரன், உதிரரோகி, இனியவார்த்தை யுடையவன், வார்த்தைசோர்வில்லாதவன், கபடி, மைதுனஅபேட்சி, களத்திரத் தின் சொல்லைக்கேட்பவன், ரோககளத்திரமுடையவன், வெட்க முடையவன், கணக்கன், மூத்திர கிரிச்சனன், புகழுடையவன், விஷ யாதிகன், வழக்கறிவன், உ-௲-ச-ரு-அ-கூ-ய-யஅ-உரு-உஅ-இந்தவயது களில் நெருப்பு, ஆயுதம், சுரம், கண்ணோய்இவைகளாற்பீடை,இந்த இலக்கினத்தை சுபக்கிரகம்பார்க்கில்-கூரு-வயசு வரையில் வாழ்ந்திரு ப்பான். இந்த இலக்கினத்துக்கு சூரியன், செவ்வாய், வியாழன், கொடியபாபிகள், வியாழன் சனியுடன் சேருவானாகில் மேடராசியிற் பிறந்தோர்க்கொத்தபடி அவயோககாரனாவான். சுக்கிரன் ஒருவனே சுபன். சந்திரன் துதியாதிபத்திய தோஷத்தை யுடையவனாயிருந் தாலும் மாரகங்கொடான். சூரியன், செவ்வாய், வியாழன், இவர்கள் மாரகஸ்தானங்களிலிருந்தால் மாரகசமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள் குருவும் சனியும் தருமகருமாதிபதிகளாகையால் யோககாரகாள் வலியறிந்து சொல்லவும்.

## கடகம்.

தனவான், களத்திரசுகவீனன், கபடுள்ள அவமானகளத்திரமு டையவன், சமர்த்துள்ளவன், குரு விசுவாசன், அற்பபுத்திருடை யவன், வேசையர்மேலெண்ண முடையவன், வெகுகாமி சதாதுக்கி

பிதாவுக்கடங்காமை, ரு-அ-மச-மகூ-உம-உரு-சம-இந்த வயதுகளில் சுரத்தால் பேதியால்பீடை, நன்மையானகிரகம்பார்க்கில்-கூம-வயது வரையிலிருப்பான், வியாழனும் செவ்வாயும்சுபாள், செவ்வாய் ஒருவனேயோககாரகன், செவ்வாயும்வியாழனுங் கூடியிருந்தால் பிரபல யோகம் சூரியன்கொல்லான், சுக்கிரன்புதன் பாபிகள், புதன், சுக்கிரன், சனி, மாரகாள் இவர்கள் மாரகஸ்தானமாகிய உ-ரு-எ-அ-கஉ-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## சிம்மம்.

கெம்பீரவசனமுள்ளவன். நல்லபுசிப்பை யுடையவன், திடவான், பசியுடையவன், பாவகர்மி, மாதுர்பிதுர் துவேஷி, கோபி, தயிரியவான், தனவான், புத்திமான், சகலவல்லவன், ஜனவசியன், கபடி, நேத்திர சிர முகரோகி, வேலைசெய்ய விருப்பமுடையவன், ரு-ம-உஎ-ருய-இந்தவயதுகளில் சுரத்தால்பீடை, இந்தலக்கினத்தை சுபக்கிரகம்பார்த்தால் அம-வயதுவரையிலிருப்பான். சூரியன்செவ்வாய் சுபாள், புதன் சுக்கிரன் பாவிகள், செவ்வாய்சுக்கிரன்யோககாரகாள் செவ்வாயும் சுக்கிரனுங் கூடியிருந்தால் தீயபலனைக்கொடுப்பார்கள் செவ்வாய் யோககாரகனெனபோதிலும் சதுர்த்தகேந்திராதிபதி சம்பந்தத்தினல் தீயபலனைக்கொடுப்பா ரென்றதாயிற்று இவர்கள் இருவரும் கூடியிருந்தால் நல்லபலனைக்கொடுப்பார்களென்று கூறுநூல்களும்சிலவுள. சனி-சுக்கிரன்-மாரகாள். புதன்கொல்லான் மாரகஸ்தானமாகிய உ-ரு-எ-அ-மஉ-ல் இருந்தால் மாரகசமான மாகியகெண்டத்தைக்கொடுப்பார்கள்.

## கன்னி.

தருமவான், பின்னிரக்கமுள்ளவன், ஆசாரமுடையவன், நல்லநடத்தையுடையவன், சுயகாரியபரன், மனோவஞ்சகன், பிறரால் தொழில் தனம்பெற்றுடையோன், சனப்பிரியன், இதமகிதம்இரண்டுஞ்செய்பவன், பின்வயதில் அதிகதனம் சம்பாதித்தலு முடையவன்-ரு-அ-கூ-ம-மஅ-மகூ-இந்தவயதுகளில் நெருப்பு, பேதி, சுரம், வைசூரி, இவைகளால்பீடை-சுபக்கிரகபார்வை யுண்டாகில்-எஎ-வயதுக்கு-குறையாமலிருப்பான், இந்தஇலக்கினத்துக்கு சுக்கிரனும் சனியும்-சுபர்கள். சந்திரன் செவ்வாய் வியாழன் இவர்கள் பாபிகள் புதனும் சுக்கிரனும்யோககாரகாள். இவர்களிருவருங்கூடியிருந்தால் பிரபலயோகம், சந்திரன், செவ்வாய், வியாழன்மாரகாள்-சுக்கிரன் துதியாதிபதியாயிருந்தாலுங் கொல்லான்-மாரகஸ்தானமாகிய உ-ரு-எ-அ-மஉ-ல் இருந்தால் மாரகசமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## துலாம்.

இராஜபூஜிதன், நல்லகுணம், நல்லபுத்தி, பொறுமை, வல்லமை, அறிவு, புகழ், இவையுடையவன், சம்பத்துடையவன், மன்மதசுகி, பரிமளப்பிரியன், தனவான், இரக்கமுடையவன், அபிமானி, சனப்பிரியன், சுகவான், மனோபீதி, எ—கூ-க0-கஉ-ககூ-உஅ - இந்த வயதுகளில், அக்கினி, பேதி, சத்துரு, வைசூரி, ஜலம், இவைகளால்பீடை இந்த லக்கினத்தை சுபக்கிரகம்பார்த்தால் அ௫-வயசுவரையில் வாழ்ந்திருப்பான். இந்த லக்கினத்துக்கு சனி, புதன், சுக்கிரன், சுபர்கள் சூரியன், செவ்வாய், வியாழன், பாவிகள், சந்திரனும் புதனும் யோககாரகாள்-இவர்களிருவருங் கூடியிருந்தால் பிரபலயோகம், சூரியன் வியாழன் மாரகாள். செவ்வாய் துதியை சப்தமாதிபதியாயிருந்தாலுங்கொல்லான் மாரகஸ்தானமாகிய உ-௩-எ-அ-கஉல் இருந்தால் மாரகத்துக்கொப்பாகிய கெண்டத்தைக்கொடுப்பார்கள்.

## விருச்சிகம்.

புத்திமான், தனவான், வெகுமானி, வஞ்சகன், அவமானி, இனிமையாகப்பேசுவான், பந்துஜனதுவேஷி, எடுத்தகாரியத்தை முடிப்பான் வறையற்ற விஷயப்பிரியன், மனைவியிடத்தில் அதிகப் பிரியமுள்ளவன், ச-௫-க0--கஉ-கஅ-ச0 இந்த வயதுகளில் கண்டதோஷம், சுரம், அக்கினி, சன்னி, இவைகளாற்பீடை. இந்தலக்கினத்தை உத்தமகிரகம் நோக்கில் கூ0-வயதுவரையிலிருப்பான். சூரியன், சந்திரன் வியாழன் சுபர்கள். செவ்வாய், புதன், சுக்கிரன் பாவிகள். சூரியனும் சந்திரனும் யோககாரகாள், இவர்களிருவருங் கூடியிருந்தால் பிரபல யோகம், புதன் செவ்வாய் சுக்கிரன் மாரகாள். வியாழம் சனி கொல்லார்கள். புதன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய உ-௩-எ-அ-கஉல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமான கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## தனுசு.

சத்தியவான், நற்குணமுடையவன், அபிமானி, நல்லவசனமுள்ளவன், சுகவான், தனவான், போகவான், மித்திரன், வித்தையுடையவன், சஞ்சாரி, சதா உத்தியோகபரன் ௩—ச-௫-கஉ-க௫-கஅ-௩உ-ச0-சஎ இந்த வயதுகளில் கண்ணோயாலும், உஷ்ணரோகத்தாலும் பீடை, லக்கினத்தைச் சுபக்கிரகம்பார்த்தால் எஎ—வயதுவரையிலிருப்பன், சூரியனும் செவ்வாயும் சுபர்கள், சுக்கிரன் ஒருவனே பாவி சூரியனும் புதனும் யோககாரகாள். சூரியனும் புதனும் கூடியிருந்

தால் பிரபலயோகம். சுக்கிரன் புதன் மாரகாள். சந்திரன் சனிகொல்லார்கள். சுக்கிரன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய ௨-௩-௭-௮-௧௨ல் இருந்தால் மாரகத்துக்குச்சமானமாகிய கெண்டத்தைக்கொடுப்பார்கள்.

### மகரம்.

துராசையுடையவன் திடபுத்திமான், சுபகாரியபான், உபாயமுள்ளவன், கோபி, வாய்ச்சாலகன், அபிமானி, பரிமளப்பிரியன், மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், ௩-௪-௫-௭-௮-௧0-௧௨-௩௨-௩௭ — இந்த வயதுகளில் ஜலம், சுரம், விஷம் இவைகளால் பீடை, இந்தஇலக்கினத்தை சுபக்கிரகம்பார்த்தால் ௬௭-வயதுவரையிலிருப்பான். செவ்வாய், புதன், சுக்கிரன் சுபர்கள், சந்திரன் வியாழன் பாவிகள். சுக்கிரன் ஒருவனே யோககாரகன், சுக்கிரனும் புதனும் கூடியிருந்தால் இராஜயோகம், சூரியன் சனி கொல்லார்கள், சந்திரன் வியாழன் மாரகாள் மாரகஸ்தானமாகிய ௨-௩-௭-௮-௧௨ல் இருந்தால் மாரகத்துக்குச்சமானமாகிய கெண்டத்தைக்கொடுப்பார்கள்.

### கும்பம்.

சினேகிதர்களை யுபாதிப்பவன், ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவன் அகண்டவயிறுடையவன், சுகவான், திடசித்தமுள்ளவன், தரித்திரன், தன்னையே புகழ்ந்து பேசுவன், குள்ளன், சிவந்தகண்ணையுடையவன், ஒருவர்செய்யும் உபகாரத்தை யுடனே மறந்துவிடுகிறவன், அற்பகல்வியுடையவன், பைத்தியசரீர முடையவன், ௬-௧0-௧௧-௨0-௩௨-இந்த வயதுகளில் சுரம், பிருந்தசன்னி, வாதசுரம், பித்தசுரம், இவைகளாற் பீடை. இந்த இலக்கினத்தை சுபர்கள்பார்த்தால்- ௮0 வயதுவரையிலிருப்பான். சுக்கிரன், புதன், சனி, சுபர்கள். சந்திரன், செவ்வாய், வியாழன் பாவிகள். சுக்கிரன் ஒருவனே யோககாரகன். சுக்கிரன் செவ்வாய் கூடியிருந்தால் பிரபலயோகத்தைக் கொடுப்பார்கள். வியாழன் துதியாதிபதியாயிருந்தாலுங் கொல்லான், சந்திரன் செவ்வாய் மாரகாள். மாரகஸ்தானமாகிய ௨-௩-௭-௮-௧௨ல் இருந்தால் மாரகத்துக்குச்சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

### மீனம்.

ஞானி, பிராமணர், பெரியோரிடத்தில் பக்தி விசுவாசமுடையவன், சத்தியவான், சௌந்தரியரூபமும், சௌரியமும், திரவியமுமுடையவன், பரிமளப்பிரியன், வெகுசெலவாளி, இரக்கமுள்ளவன் முன்ஜாக்கிரதையுள்ளவன், குளிர்ச்சியான கண்களும் கர்ணரோகமு

முடையவன் ௩-௪-௭-௧௨-௨0-௨௮-இந்த வயதுகளில் இருமல், சுரம் உஷ்ணரோகம் இவைகளாற் பீடை, இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால், ௧00-வயதுவரையிலிருப்பான். சந்திரன், செவ்வாய், சுபர் கள், சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் பாவிகள். செவ்வாயும் குருவும் யோககாரகாள், செவ்வாயும் வியாழனும்கூடியிருந்தால் பிர பலயோகத்தைக் கொடுப்பார்கள். சூரியன், புதன், சுக்கிரன், சனி, இவர்கள் மாரகாள், செவ்வாய் கொல்லான். சூரியன் முதலானவர்க ள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய ௨-௩-௭-௮ - ௧௨ல் இருந்தால் மாரகத்துக்குச்சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

கிரகங்களுடைய வலிமையை யூகித்துச் சொல்லுக.

## மாரகஸ்தானம் மாரகாள்.

இலக்கினத்துக்கு-௮-ம்-இடமும் அதற்கு ௮-ம் இடமான ௩-ம் இடமும் ஆயுர்த்தானமென்று பேர். இவைகளுக்கு விரயத்தானங்க ளாகிய ௭-ம்இடத்தையும் ௨-ம்இடத்தையும் ஜாதகர்களுக்கு மாரக த்தானமென்றும்காண்க. பாவம்-௧௨க்கும் இப்படியேபகுத்தறியவும்.

கேத்திராதிபத்தியதோஷத்தில் வியாழனும் சுக்கிரனும் மிகவும் பலவான்கள். இவர்கள் ஷை ௨-௭-ம் இடங்களில்நின்றாராகில் மாரக த்தைக்கொடுப்பார்கள். மாரகத்தானதிபதியைப்பார்க்கிலும் மாரக த்தானத்திலிருப்பவர்கள் பலவான்களெனக்காண்க. இது மாரகத்தா னவிலக்கின்மேல் கேந்திராதிபத்தியதோஷத்தாற் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இலக்கினம் சரராசியானால் | ௨-௭-க்கு அதிபர்கள் | மாரகாள். |
| ஸ்திரராசியானால் | ௩-௮-க்கு அதிபர்கள் | மாரகாள். |
| உபயராசியானால் | ௭-௧௧-க்கு அதிபர்கள் | மாரகாள். |

இலக்கினத்துக்கு ௧௨-ம் இடத்தாதிபத்தியம் சுக்கிரனுக்காவது சனிக்காவதிருந்தால் ஜாதகனுக்கு மாரகம்.

„ ௭-ஆமிடத்தாதிபத்தியம் சூரியனுக்கிருந்தால் ஜாதகனுக்கு மாரகம்.

„ ௯-மிடத்தாதிபத்தியம் செவ்வாய்க்கிருந்தால் ஜாதகனுக்கு மாரகம்.

„ ௪-௧0ல் குளிகனிருந்தால் ஜாதகனுக்கு மாரகம்.

„ ௨-ல் இராகுவும் ௮-ல் கேதுவுமிருந்தால் மாரகம்.

இலக்கினத்துக்கு அ-ல் இராகுவிருந்தால் பிதுர்மாரகம்.
,, ச—எ-ரு—மாதுருமாரகம்.
,, ரு-கக-சகோதரமாரகம்.
,, சு-மிடத்தாதிபத்யம் சூரியனுக்கிருந்தால் பிதுர்மாரகம்.

இலக்கினத்துக்கு உ-எ-க் கதிபர்கள் உச்சம், சொக்ஷேத்திரம் கேந்திரம் திரிகோணம் இந்த இராசிகளிலிருந்தாலும் மித்திராளுடன் சம்பந்தப்பட்டாலும், சுபக்கிரகங்களுடன்சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் நல்ல பலன்களையும் உ-ங-எ-அ-கஉ-மிடங்களில் இருந்தாலும், சத்துரு, பாவி இவர்களுடன் சம்பந்தப்பட்டாலும் கண்டத்துக்குச்சமானமாகிய மிகவும் கஷ்டபலன்களையுங்கொடுப்பார்கள்.

லக்கினத்துக்கு ங-அ-க்கதிபர்கள் தங்களுடைய தசைகளில் மாரகத்துக்கொப்பாகிய கண்டத்தையும் மிகவும் கஷ்டபலன்களையும் கொடுப்பார்கள். இவர்கள் உ—ங—எ-அ-கஉ மிடங்களிலிருந்தால் மாரகத்தைக்கொடுப்பார்கள். சுபர்களுடன் சம்பந்தப்பட்டாலும் பார்க்கப்பட்டாலும் மத்திமபலனைக்கொடுப்பார்கள்.

மாரகஸ்தானாதிபர்கள் மாரகஸ்தானாதிபர்களுடன்சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் மாரகத்தைக் கொடுக்கமாட்டார்கள். ஆனால் அவர்களுடன் சேர்ந்த பாபிகள் அல்லது மாரகஸ்தானத்திலிருக்கிற பாபிகள் மாரகத்தைக்கொடுப்பார்கள்.

தீர்க்காயுசு ஜாதகனுக்கு எ—சு-ம் தசை மாரகம்.
மத்திம ஆயுசு ஜாதகனுக்கு ங—ரு-சு-ம் தசைகள் மாரகம்
அற்பாயுசு ஜாதகனுக்கு க-ங-ம் தசைகள் மாரகம்.
ச—வது தசை சனிதசையானால் மாரகம்.
ரு-வது தசை செவ்வாய்தசையானால் மாரகம்.
சு-வது தசை வியாததசையானால் மாரகம்.
எ-வது தசை ராகுதசையானால் மாரகம்.
சந்திரன் நின்ற இராசிக்கு ச-க0 ஆமிடங்களி லிருக்கும் பாபர் தசைகளும் மாரகம்?
குளிகன் நின்ற இராசிக்கு திரிகோணத்தில் சனி வருங்காலம் மாரகம்.

இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்களிருக்க அல்லதுபார்க்க இலக்கினாதிபதியும் வியாழனும் பாபக்கிரகங்களும் ஒரே இராசியிலிருக்க எட்டில் இராகுவிருக்க விஷத்தினால் பீடை.

## மாரகதசாபுக்தி விபரம்.

இலக்கினபதியுடைய தசையில் சப்தமாதிபதி புக்தி.

சப்தமாதிபதியுடைய தசையில் இலக்கினதிபதி புக்தி.

இலக்கினத்திலிருக்கிறவன் தசையில் சப்தமஸ்தானத்தி லிருக்கிறவன் புக்தி.

சப்தமஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் லக்கினத்திலிருக்கிறவன் புக்தி.

லக்கினதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் தசையில் சப்தமாதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் புக்தி.

சப்தமாதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் தசையில் லக்கினதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் புக்தி.

லக்கினதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் தசையில் சப்தமாதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி.

சப்தமாதி பார்வை சம்பந்தப்பட்டவன் தசையில் லக்கினதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி.

துதியாதிபதியினுடையதிசையில் விரயாதிபதியினுடைய புக்தி.

விரயாதிபதியினுடையதசையில் துதியாதிபதியினுடையபுக்தி.

துதியஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் விரயஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

விரயஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் துதியஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

துதியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் தசையில் விரயாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

விரயாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் தசையில் துதியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

துதியாதிபதியுடன் பார்வை சம்பந்தப்பட்டவன்தசையில் விரயாதிபதியின் பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி.

விரயாதிபதியின் பார்வை சம்பந்தப்பட்டவன் தசையில் துதியாதிபதியின்பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி.

திரியாதிபதியினுடையதசையில் லாபாதிபதியினுடைய புக்தி.

லாபாதிபதியினுடைய தசையில் திரியாதிபதியினுடைய புக்தி.

திரிதியஸ்தானத்திலிருக்கிறவன்தசையில் லாபஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

லாபஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் திரிதியஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

திரிதியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் தசையில் லாபாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

லாபாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் தசையில் திரிதியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

திரிதியாதிபதியினது பார்வைபெற்றவன் தசையில் லாபாதிபதியினது பார்வைபெற்றவன் புக்தி.

லாபாதிபதியினது பார்வை சம்பந்தப்பட்டவன் தசையில் திரிதியாதிபதியினதுபார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி.

சதுர்த்தஸ்தானாதிபதியினுடைய தசையில் தசமாதிபதியினுடைய புக்தி.

தசமாதிபதியினுடைய தசையில் சதுர்த்தஸ்தானாதிபதியினுடைய புக்தி.

சதுர்த்தஸ்தானத்திலிருக்கிறவனுடையதசையில் தசமஸ்தானத்திலிருக்கிறவனுடைய புக்தி.

தசமஸ்தானத்திலிருக்கிறவனுடைய தசையில் சதுர்த்தஸ்தானத்தி லிருக்கிறவனுடைய புக்தி.

சதுர்த்தஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன்தசையில் தசமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

தசமாதிபதியோடு சம்பந்தப்பட்டவனதுதசையில் சதுர்த்தஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவனது புக்தி.

சதுர்த்தஸ்தானாதிபதியினது பார்வைபெற்றவன்தசையில் தசமாதிபதியினது பார்வைபெற்றவனது புக்தி.

தசமாதிபதியினது பார்வைபெற்றவனதுதசையில் சதுர்த்தஸ்தானாதிபதியினது பார்வைபெற்றவன் புக்தி.

பஞ்சமஸ்தானாதிபதியினது தசையில் பாக்கியாதிபதியினது புக்தி.

பாக்கியாதிபதியினுடைய தசையில் பஞ்சமஸ்தானாதிபதியினுடைய புக்தி.

பஞ்சமஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் பாக்கியஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

பாக்கியஸ்தானத்திலிருக்கிறவன்தசையில் பஞ்சமஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

பஞ்சமஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் தசையில் பாக்கியாதிபதி சம்பந்தப்பட்டவன் புக்தி.

பாக்கியஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன்தசையில் பஞ்சமஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

பஞ்சமஸ்தானாதிபதியினால் பார்வைபெற்றவன் தசையில் பாக்கியஸ்தானாதிபதியினால் பார்வைபெற்றவன் புக்தி.

பாக்கியஸ்தானாதிபதியினால் பார்வைபெற்றவன் தசையில் பஞ்சமஸ்தானாதிபதியினால் பார்வைபெற்றவன் புக்தி.

சஷ்டமாதிபன்தசையில் அஷ்டமாதிபனது புக்தி.

அஷ்டமாதிபனது தசையில் சஷ்டமாதிபனது புக்தி.

சஷ்டமஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் அஷ்டமஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி.

அஷ்டமஸ்தானத்திலிருக்கிறவன் தசையில் சஷ்டமஸ்தானத்திலிருக்கிறவனது புக்தி.

சஷ்டமாதிபதியோடு சம்பந்தபபட்டவன் தசையில் அஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

அஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் தசையில் சஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி.

சஷ்டமாதிபதியினால் பார்வைபெற்றவன் தசையில் அஷ்டமாதிபதியினால் பார்வைபெற்றவன் புக்தி.

அஷ்டமாதிபதியினால் பார்வைபெற்றவன் தசையில் சஷ்டமாதிபதியினால் பார்வைபெற்றவன் புக்தி. அரிஷ்டதோஷங்கள்.

## அரிஷ்ட தோஷங்கள்.

(1) லக்கினத்தில் சனியும் ௪-ஆமிடத்தில் செவ்வாயும் ௭-ஆமிடத்தில் சூரியனும் இருந்தாலும், (2) லக்கினத்தில் இராகு கேதுக்களும் ௪-ல் செவ்வாயும் ௭-ல் சூரியனும் இருந்தாலும், (3) லக்கினத்தில் அல்லது ௭-௮-௧௨ ஆமிடங்களிலாவது அமாபட்சத்துச் சந்திரன் பாவிகளுடன் கூடி யிருந்தாலும், (4) லக்கினத்துக்கு ௭-ஆமிடத்தில் செவ்வாயும் ௮-ஆமிடத்தில் சூரியனும்இருந்தாலும்(5) லக்கினத்தில் சூரியன் சனி கூடியிருக்க செவ்வாய்பார்த்தாலும் (6) லக்கினத்துக்கு ௭-ஆமிடத்தில் செவ்வாய் சுக்கிரன் சனி இருந்தாலும் (7) லக்கினத்துக்கு ௭-௮-ஆமிடங்களில் செவ்வாய் சனி யிருந்தாலும் (8) லக்கினத்துக்கு ௪-மிடத்தில் செவ்வாயும்-௮-மிடத்தில் இராகுவும் ௧௨-ஆமிடத்தில் சனியும் இருந்தாலும் (9) லக்கினத்துக்கு ௮-௯-௧௨-ஆமிடங்களில் சூரியன் க்ஷீண சந்திரன் செவ்வாய் சனி யிருந்தாலும் (10) லக்கினத்துக்கு ௪-௮-ஆமிடங்களில் பாபக்கிரகங்களிருந்தாலும், (11) லக்கினத்துக்கு ௫-௯-௧௨-ஆம் இடங்களில் சூரி

யன் அமாபட்சத்து சந்திரன் இவர்கள் அந்த இராசிகளில் கூடியா வது தனித்தனியாக வாவது இருந்தாலும், (12) லக்கினத்துக்கு சு-எ-அ-கஉ-மிடங்களில் க்ஷீணசந்திரன் பாவர்களுடன்கூடியிருந்தா லும், (13) லக்கினத்துக்கு ரு-ல் ௯-ல் சனியிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம்.

(1) லக்கினத்துக்கு சு-ஆமிடத்தில் சந்திரனும் அதற்கு எ-ஆமி டத்தில் செவ்வாய் சனி இருந்தாலும் (2) லக்கினத்தில் சந்திரனும் அதற்கு ச-எ-அ-ஆமிடங்களில் பாவிகளும் இருந்தாலும் (3) லக்கின த்துக்கு இருபுறமும் பாவிகளிருந்தாலும் தாய்க்கும் சிசுவுக்கும் அரி ஷ்டம்.

லக்கினத்துக்கு சு-ஆமிடத்தில் சூரியனிருக்க அதற்கு எ-ஆமி டத்தில் செவ்வாய் சனியிருக்க பிதாவுக்கும் சிசுவுக்கும் அரிஷ்டம்.

(1) லக்கினத்துக்கு ரு-அல்லது கo-ஆமிடத்தில் சந்திரன்இருந் தாலும், (2) சந்திரனின்ற இராசிக்கு எ-ஆமிடத்தில் செவ்வாய் அல் லது சனி இருந்தாலும் பார்த்தாலும் மாதாவுக்கு அரிஷ்டம்.

(1) லக்கினத்துக்கு ரு-அல்லது கo-ஆமிடத்தில் சூரியன் இரு ந்தாலும் (2) சூரியனின்ற இராசிக்கு எ-ஆமிடத்தில் செவ்வாய்அல் லது சனிஇருந்தாலும் பார்த்தாலும், (3) லக்கினத்துக்கு சு-ஆமிட த்தில் இராகு கேதுக்களிருந்தாலும் (4) லக்கினத்துக்கு சு-கக-ஆமி டங்களில் சனிசெவ்வாயிருந்தாலும் பிதாவுக்கு அரிஷ்டம்.

இலக்கினத்துக்கு ந-ஆமிடத்தில் செவ்வாயிருக்க சகோதர அரிஷ்டம்.

இலக்கினத்துக்கு ரு-அல்லது கo-ஆமிடத்தில் செவ்வா யிருக்க அம்மாமனுக்கு அரிஷ்டம்.

அன்றியும் சந்திர இலக்கினத்திலும் ஜெனனஇலக்கினத்திலும் அசுபகிரகங்களிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம்.

மேற்கண்ட அரிஷ்டதோஷங்கள் சுபக்கிரகம் இருக்கப் பார்க்க நீங்கும்.

## அரிஷ்டபாகம்-ரு-க்கு விபரம்.

| | |
|---|---|
| க-வது முதல் கஉ-வயதுவரையில் | பாலாரிஷ்டம் |
| கந-வயதுமுதல்-உo-வயதுவரையில்யௌவன | அரிஷ்டம் |
| உக-வயதுமுதல்-நஉ-வயதுவரையில் கௌமார | அரிஷ்டம் |
| நந-வயதுமுதல்-எo-வயதுவரையில் | விருத்தாரிஷ்டம் |
| எக-வயதுமுதல் -கஉoவயதுவரையில் | பூரணஆயுசு. |

## உத்தம மத்திம அற்ப ஆயுசுக்கு விபரம்.

க-வயதுமுதல் ௩௨-வயது வரையில்.................அற்பாயுசு
௩௩-வயதுமுதல் ௬0 - வயதுரையில்...............மத்திமஆயுசு
௬௧-முதல் ௱௨0-வயதுவரையில்...உத்தமம்அல்லதுதீர்க்காயுசு.

## ஆயுள்.

இலக்கினதிபதி, அஷ்டமாதிபதி, தசமாதிபதி இம்மூவரும் பெலன் பெற்றிருந்தால் (நவக்கிரகதசாவும் ௧௨0) ஆகியஉத்தம வயதும், இருவர் பெலன்பெற்றிருந்தால் அதில்பாதி ௬0—ஆகிய மத்திமவயதும், ஒருவர் பெலம்பெற்றிருந்தால்அதில்பாதி௩௨-ஆகிய அதமவயதும், மூவரும் பெலவீனராகில் ௧௨-க்குள்ளே அதமாதம வயதுமாகும்.

இலக்கினதிபதி சராசியிலிருக்க அஷ்டமாதிபதியும் சராசியிலிருந்தால் தீர்க்காயுசு.

இலக்கினதிபதி சராசியிலிருக்க அஷ்டமாதிபதி திராசியிலிருந்தால் மத்திமஆயுசு.

இலக்கினதிபதி சாராசியிலிருக்க அஷ்டமாதிபதி உபயராசியிலிருந்தால் அற்பாயுசு.

இலக்கினதிபதி திராசியிலிருக்க அஷ்டமாதிபதி உபயராசியிலிருந்தால் தீர்க்காயுசு.

இலக்கினதிபதி திராசியிலிருக்க அஷ்டமாதிபதி சராசியிலிருந்தால் மத்திமஆயுசு.

இலக்கினதிபதி திராசியிலிருக்க அஷ்டமாதிபதி திராசியிலிருந்தால் அற்பாயுசு.

இலக்கினதிபதி - உபயாராசியிலிருக்க அஷ்டமாதிபதி திராசியிலிருந்தால் தீர்க்காயுசு.

இலக்கினதிபதி உபயராசியிலிருக்க அஷ்டமாதிபதி உபயராசியிலிருந்தால் மத்திமஆயுசு.

இலக்கினதிபதி உபயராசியிலிருக்க அஷ்டமாதிபதி சராசியிலிருந்தால் அற்பாயுசு.

இலக்கினதிபதி பலவானுயிருக்க ௬-அ-௧௨ இந்த இடங்களில் பாபிகளிருக்க திரிகோணங்களில் சுபர்களிருக்க தீர்க்காயுசு.

இலக்கினதிபதி திரிகோண கேந்திரங்களிலிருக்க மித்துருகிரகங்கள் பார்க்க ஆயுசுகாரகனுகிய சனிபலக்க ஆயுசுவிர்த்தி.

## யோகபாக முதலியவை.

கேந்திராதிபதியும் திரிகோணதிபதியும் ௩-௬-அ-௧௧-ம் இடங்களுக்குரிய அதிபதிகளுடன் கூடாமல் தங்கள் தங்கள்சம்பந்தமான

வேறேரிடத்து ஆதிபத்திய தோஷமில்லாமல் இருவருங்கூடியிருந் தாலும், ஒருவரையொருவர் பார்த்தாலும், ஒருவர் வீட்டில்ஒருவ ரிருந்தாலும் அதிகசுப பலனைக் கொடுப்பார்கள்.

பாபிகள் ங-ரு-அ-கஉ-ல் இருந்தாலும் அல்லது பாபிகள் சுபாள் சம்பந்தம் அல்லது பார்வை யுடையவர்களாய் ங-ரு-அ-ல் மித்துரு இராசிகளில் அல்லது கேந்திரங்களிலிருந்தாலும் சுப பல னைத் தருவார்கள்.

இராகு கேதுக்கள் கேந்திரத்திலிருந்தால் திரிகோணுதிபதியு டனும் திரிகோணத்திலிருந்தால் கேந்திராதிபதியுடனும் சம்பந்த முற்றுராகிற் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள்.

தருமாதிபதியும், கருமாதிபதியும் ஒரே இராசியில் சேர்ந் தாலும் ஒருவரையொருவர் பார்த்தாலும் தங்கள் இராசிகளில்மாறி யிருந்தாலும் மேலான யோக பலனைக் கொடுப்பார்கள்.

பூர்வபட்சத்துச் சந்திரனும் வியாழனும் ச-ம் ௰-ம் ஆக மீனம் இடபம், தனுசு, கும்பம் இந்த இராசிகளிலிருக்கிலும் இலக்கினம் மித்துருராசிகளில் பூர்வபட்சத்துச் சந்திரனும் சந்திரனுக்கு ச—எ- ௰-ல் மித்திராசிகளில் வியாழனும் சுக்கிரனுமிருந்தாலும் ஆயுசுபரி யந்தம் மேலான யோகத்தைக் கொடுப்பார்கள்.

தருமாதிபதியும் கருமாதிபதியும் ங-ரு-அ-கக-க்கு அதிபர்களு டன் சேராதிருந்தால் சுப பலனைத் தருவார்கள்.

பூர்வ பட்சத்துச் சந்திரன் மித்திர ராசியிலிருந்து வியாழன் சந்திரனுக்கு கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் சுகவானுயிருப்பான்.

இலக்கினத்தில் சுபக்கிரகம் இருக்கப்பார்க்க சுகவானும்.

இலக்கினமுதல் நாலுகேந்திரங்களில் சுபக்கிரகங்கள் சந்திர னுடனிருந்தால் யோகவானு யிருப்பான்.

பாபர் சம்பந்தமில்லாமல் சுபக்கிரகங்கள் நட்பு இராசிகளி லிருந்தால் யோகவான்.

இலக்கினுதிபதிஉச்சசொக்ஷேத்திரமித்துரு இராசிகளிலிருக்க ச-௰-க்குடையவர்கள் அல்லது ச-கக—க்குடையவர்கள் தங்கள் இராசி களில் மாறியிருந்தாலும் யோகவான்.

சுபக்கிரகங்கள் உச்சஸ்தானங்களிலிருந்து ஒருவருக்கொருவர் பாராதிருந்தால் யோகவான்.

வியாழனும் பூர்வபட்சத்துச் சந்திரனும் கடக இராசியில் ஆதிபத்திய தோஷமில்லாமல் கூடியிருந்தால் யோகவான்.

பூர்வபட்சத்துச்சந்திரனுக்கு ஏழாமிடத்தில் செவ்வாயிருக்க சுபக்கிரகங்கள் உச்சசொக்ஷேத்திர மித்துருராசிகளிலிருக்க பாபிகள்சேராமலும் பாராமலுமிருக்க யோகவான்.

இலக்கினத்துக்கு ௨-௪-௫-௯-௰-௧௧-க்குடையவர்களும் இலக்கினாதிபதியும் உச்சம், சொக்ஷேத்திரம், கேந்திரம், திரிகோணம், மித்துரு, இராசிகளிலிருந்து சுபாள் பார்வை அல்லது சேர்க்கையுண்டானால் யோகவான்.

இலக்கினம் மித்துரு இராசியாய்வியாழனிருக்க பூர்வபட்சத்து சந்திரன் பார்க்க அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் வியாழனிருக்க யோகவான்.

இலக்கினமும் சந்திரலக்கினமும் ஒன்றாகி இலக்கினாதிபதிசுபக்கிரகமாயிருந்து லாபஸ்தானத்திலிருக்க இலக்கினாதிபதிக் கிருபுறமும் சுபக்கிரகங்க்ள் நட்பு ஆட்சியாயிருக்கில் யோகவான்.

திரிகோணாதிபதிகள் திரிகோண ஸ்தானங்களில் சுபர்சகிதமாயிருக்க அல்லது சுபக்கிரகங்கள் பார்க்க திரிகோணாதிபதிக்கிருபுறமும் சுபக்கிரகங்க ளிருக்க யோகவான்.

திரிகோணாதிபதியும் கேந்திராதிபதியும் ஒருவராகில் நிறைந்திரமாயிருக்கப்பட்ட யோகபலனைக் கொடுப்பார். அவர் மற்றொரு திரிகோணாதிபதியுடன் சம்பந்தமுற்றால் மேலான ராஜயோகத்தைக் கொடுப்பார்.

சுபக்கிரகங்கள் கேந்திர திரிகோண லாபத்திலிருந்தாலும் திரிகோண கேந்திராதிபர்களுடன் சேர்ந்தாலும் சந்திரனுக்குக் கேந்திர திரிகோணத்திலிருந்தாலும் யோகத்தைத் தருவார்கள். பாபிகள் மாரகாதிபர்களுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் கஷ்டபலனைத் தருவார்கள்.

தருமகருமாதிபதிகள் அட்டம இலாபதிபதிகளா யிருந்தாலும் அட்டம இலாபாதிபதிகளுடைய சம்பந்தம்வந்தாலும் சுபபலனைக் கொடார்கள்.

வியாழன் சுக்கிரன் இவ்விருவரும் உபயகேந்திராதிபதிகளானால் பலமானதோஷமுண்டு. இவர்கள் உச்சம் சொக்ஷேத்திரம், திரிகோணம் அல்லது மித்துரு இராசியிலிருந்தால் மத்திம பலனையும் ௫-௬-௮-௧௨-ஆம் இராசிகளிலிருந்தால் அதிககஷ்டபலனையுந்தருவார்கள்.

வியாழனிருந்த இராசிக்கு ௬-௮-௧௨-ஆம் இராசிகளில்சந்திரனின்றால் சகடயோகம் அதாவது சிலகாலம் சுகமும் சில்காலம் கஷ்டமுமாகஇருக்கும்.

இலக்கினுதிபதி சுபக்ஷேத்திரங்களி லிருக்க சுபக்கிரகங்கள் சேர அல்லது பார்க்க ஆயுள்விர்த்தியுடன் கீர்த்திமானுகவும் சுக வானுகவுமிருப்பான்.

இலக்கினத்துக்கு க-உ-ச-கூ-கக-க்குடையவர்கள் கேந்திரங் களில் சுபர்சகிதமாகவிருந்தால் வெகுதனவான்.

இலக்கினத்துக்கு இரண்டாம் இராசிக்கதிபன் சுபக்ஷேத்திரங் களில் மித்திராள் சேர்க்கை யல்லது பார்வை யுண்டானுல்வித்தை யுடையவனுய் ஆயுள்பரியந்தம் சுகஜீவியாயும் பாக்கியவானுகவு மிருப்பான்.

பாக்கியாதிபதியும் நாலாமிடத்துக்குடையவனும் கேந்திரதிரி கோணங்களிலிருக்க சுபக்கிரகங்கள்சேரபார்க்க வாகனம் பூமி சம் பத்துடையவனுயிருப்பான்.

விரயஸ்தானமாகிய பன்னிரண்டில் சுபக்கிரகங்களிருக்க அல் லது பார்க்க சத்கருமங்களில் செலவும் சயனசுகமுமாம். பாபக் கிரகங்கள் இருக்கப்பார்க்க துற்கருமங்களில் செலவுசெய்வான்.

## சகோதரபாவம்.

மூன்ருமிடத்துக்குடையவனும் சகோதரகாரகனுகிய செவ்வா யும் உச்சம், சொக்ஷேத்திரம் கேந்திரம் திரிகோணம் மித்துருராசி களிலிருக்க மூன்ருமிடத்தைப்பாபரன்றி சுபாள் பார்க்க சகோதர முண்டு.

## களத்திரபாவம்.

ஏழாமிடத்தில் பாபிகள் இல்லாமலும் பாராமலும்ஏழாமிடத் துக்குடையவன் சுபக்ஷேத்திரங்களில் மித்துருக்களுடன் சேர்ந் தும், மித்துருக்களால் பார்க்கப்பட்டும், ஏழாமிடத்திற்கிருபுறமும் சுபர்களிருக்க சரராசியாயிருந்தாலும், களத்திரகாரகனுகிய சுக் கிரன் பலவானுயிருக்க களத்திரதோஷமில்லை.

ஏழாமிடத்துக் குடையவனும் சுக்கிரனும் பாபக்ஷேத்திரங் களில் பாபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் களத்திரதோஷம்.

ஏழாமிடத்தில் சூரியனிருந்தால் மலடியைச்சேர்வான்.
,, சந்திரனிருந்தால் சங்கீதப்பெண்ணைச்சேருவான்.
,, செவ்வாயிருந்தால் க்ஷத்திரியப்பெண்ணைச்சேருவான்.
,, புதனிருந்தால் வேசியைச்சேருவான்.
,, வியாழனிருந்தால் பிராமணப்பெண்ணைச்சேருவான்.
,, சுக்கிரனிருந்தால் கர்ப்பஸ்திரீயைச்சேருவான்.

ஏழாமிடத்தில் சனியிருந்தால் விதவையைச்சேருவான்.

,, இராகுகேதுவிருந்தால் தூஸ்திரீயைச்சேருவான்.

சுக்கிரனுடன் புதன்சேர்ந்தால் தாசியைச்சேருவான்.

சுக்கிரனுடன் சனிசேர்ந்தால் விதவையைச்சேருவான்.

சுக்கிரன் நீசனாய் ஏழாமிடத்திலிருந்தால்தன்வயதுக்குமூத்தவளைச் சேருவான்.

ஏழாமிடத்தை சுபக்கிரகங்கள்பார்த்தால் தோஷமில்லை,

## இருப்பிடம்.

ஜென்மலக்கினம் சரமாகில் பிரதேசவாசம், திரமாகில் சுதேச வாசம், உபயமாகில் பிரதேசத்தில் சிலகாலமும் சுதேசத்தில் சில காலமும் வாசமாம்.

அன்றியும்வேறுசிலநூல்களில் இலக்கினாதிபதிசராசியிலிருந் தால் பிரதேசவாசம், திராசியிலிருந்தால் சுதேசவாசம், உபய ராசியிலிருந்தால் பிரதேசத்தில் சிலகாலமும் சுதேசத்தில் சிலகால மும் வாசஞ்செய்வானென்றுங் கூறுகின்றன.

## மரிப்பிடம்.

சனி சராசியிலிருக்க அன்னியதேசத்தில் மரணம். ஸ்திர ராசியிலிருக்க தன்வீட்டில் மரணம்.

உபயராசியிலிருந்தால் தூதன்வீட்டில் மரணம்.

## நவக்கிரகதசாபுக்தி.

இதனடியிற்கண்டபடி நவக்கிரகதசை வருஷங்களின் மொத்த தொகையாகிய-௱உ௰-மானிடர்களுடைய சம்பூரணமானவயதாம்,

தசாபுக்திபார்ப்பதற்கு சூரியன் ஆதியாகவும் சுக்கிரன் அந்த மாகவுங்கொள்ளவேண்டியது. இதனடியிற்கண்ட திரிகோணநட்சத் திரங்களில் ஒவ்வொருவருடையஜென்மநட்சத்திரம் எதுவாகுமோ அதற்கு எதிரே கண்டிருக்கிற கிரகதசைசேயே அவரவருடைய ஜென்மகாலத்தின் திசையாம்.

மூன்றுநட்சத்திரங்கள் ஒன்றுக்கொன்று பத்தாவது நட்சத் திரமாகவருவதே ஒன்றுக்கொன்று கோணமாகுல். அம்மூன்றும் ஒரேகிரகத்துக்குரிய திரிகோணநட்சத்திரங்களென்றுகாண்க.

| கிரகநட்சத்திரங்கள் | கிரகதசை | தசைவரு |
|---|---|---|
| அசுவனி, மகம், மூலம் | கேதுதசை | வரு எ |
| பரணி, பூரம், பூராடம் | சுக்கிரதசை | ,, உ௰ |
| கார்த்திகை, உத்திரம், உத்திராடம் | சூரியதசை | ,, சு |
| ரோகணி, அஸ்தம், திருவோணம், | சந்திரதசை | ,, ௰ |

| | | | |
|---|---|---|---|
| மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் | செவ்வாய்தசை | வருஷம் | எ |
| திருவாதிரை, சுவாதி, சதயம் | இராகுதசை | ,, | கஅ |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | வியாழதசை | ,, | கசு |
| பூசம், அனுஷம், உத்திரட்டாதி | சனிதசை | ,, | ககூ |
| ஆயில்யம், கேட்டை, ரேவதி | புதன்தசை | ,, | கஎ |
| | ஆக மொத்தம் வருஷம் ௱உ௰ | | |

சுவை சு-வாயு ௰-சமுத்திரம் - எ-புராணம்-கஅ சந்திரகலை-கசு,ஸ்மிருதி ககூ-பெயர்விகுதி கஎ, புயல்-எ-இராவணேசுரன் கை-உ௰ இவையே வரிசைக்கிரமமாக சூரியன் ஆதியாக சுக்கிரன் அந்தமாகவுள்ள நவக்கிரகங்களுக்கு தசை வருஷக்கணக்காம்.

ஒரு குழந்தை பிறந்தகாலத்தில் எந்ததசை ஆரம்பமாயிற்றோ அந்ததசைக்குரிய வருஷத்தொகையில் கெற்பத்தில் செல்லுப்போக பாக்கி யிவ்வளவென்றறியவேண்டிய விபரம். ஜென்ம நட்சத்திரம் குழந்தை ஜெனனமானதேதியிலாவது அதற்குமுன் தேதியிலாவது எப்போதும் ஆரம்பித்து, ஜெனனமான தேதியிலாவது அதற்கு மறுதேதியிலாவது எதுவரைக்கு மிருக்கிறதோவென்று பஞ்சாங்கத்தைப்பார்த்து ஒன்றுசேர்க்கப்பட்ட மொத்த நாழிகை விகடிகையே அந்த நக்ஷத்திரத்துக்கு ஆதியந்தம் என்றுபேராம். அந்த ஆதியந்தநாழிகைவிகடிகைபேருக்கு அந்த நட்சத்திரத்துக்குரிய தசை வருஷத்தைப்பங்கிட்டு நாழிகை ஒன்றுக்கு இவ்வளவு வருஷம். மாதம், நாள், நாழிகை, விகடிகையென்று தெரிந்துகொள்ள வேண்டும். இதை ஜெனனகாலம்வரையில் ஷைநட்சத்திரத்திற்செல்லானநாழிகையினால் பெருக்கிவந்து எவ்வளவுவருஷம். மாதம் முதலியதையறிந்து அதை கெற்பச்செல்லாகவைத்துக்கொண்டும். அந்ததசையின் மொத்தவருஷத்தில் கழித்துவந்த மிச்சமானது வருஷம் மாசம் முதலியவை அந்ததசையில் பாக்கியாயிருந்தகாலம் என்றும் அதற்குமேல் முன்கூறியகிரமப்படிக்குள்ள தசைகளையும் வயசுகளையுங்காணுவதே தசையாகும். ஒருவருக்கு ஜெனனகாலத்தில்தசைசெவ்வாயானால் அதற்கடுத்ததசைகள் இராகு, வியாழன், சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் என்று வரிசையாயறியவேண்டும். மேற்சொல்லியபடி கெற்பத்தில் செல்லானது போகபாக்கியறிவதற்கு கணக்குவிபரம். ஜெனனநட்சத்திரத்ினுதியந்த நாழிகைத்தொகையில் ஜனனம்வரை சென்றநாழிகைக்கும் அந்த நட்சத்திரத்தின் கிரகதசைவருஷத்துக்கும்பெருக்கி ஆதியந்த நாழிகைத்தொகைக்குக்கொடுக்கவந்த வருஷ மீ த்தை-கஉ-ல்பெருக்கி

முன்போல் கொடுக்கவந்தது ஸ்ரீ மாசத்தை ௩0 - ல் பெருக்கி முன் போல்கொடுக்கவந்ததுநாள் மாசத்தை-௬0-ல் பெருக்கி முன்போல கொடுக்கவந்தது நாழிகை மாசத்தை ௬0 - ல் பெருக்கி முன்போல் கொடுக்கவந்தது விநாடியாம்.

ஒவ்வொரு கிரகத்தின் தசையில் அந்தக்கிரகமுதலிய நவக்கிரகங்களும் பலனை பகுந்துண்ணவந்திருக்கும் உட்பிரிவுகளாவன. ஒவ்வொருதிசைக்கும் ஒன்பது புக்திகளென்றும் புக்தியொன்றுக்கு ஒன்பது அந்தரமென்றும் அந்தரம் ஒன்றுக்கு ஒன்பது சூக்ஷமாந்தரமென்றும் சூக்ஷமாந்தரமொன்றுக்கு ஒன்பது பிராணபிரிவுகளென்றும் வரும்.

புக்திக்கு அபகாரமென்றும் அந்தரத்துக்குச் சித்திரமென்றும் பெயராம்.

## கிரகாதிபருடைய மகாதசையில் அபசாரம் சித்திரம் க்ஷேமம் பிராணன் இவற்றையறியும் முறைமை கூறுகின்றது.

ஒவ்வொரு தசாநாதனுடைய மகாதிசை வருஷத்தையும் மகாதிசையின் மொத்தவருஷத்தொகையாகிய கஉ0 - க்குக் கொடுத்துக் கண்டஈவு அந்தந்தத் தசைக்கும் அபகாரத்துருவமாம், ஒருதசையில் வந்த அபகாரத்துருவத்தை ஒவ்வொருவனுடைய மகாதசை வருஷத்திற்பெருக்கிக்கண்டதொகை அந்ததசையில் அவனவனுடைய அபகாரகாலமாம்.

ஒவ்வொருவனுடைய அபகாரகாலத்தையும் - கஉ0க்குக் கொடுத்துக் கண்டஈவு அவனவன் அபகாரத்துக்கும் சித்திரத்துருவமாம் ஒருவனுடைய அபகாரத்தில்வந்த சித்திரத்துருவத்தை ஒவ்வொருவனுடைய மகாதசைவருஷத்திற் பெருக்கிக்கண்டதொகை அந்த அபகாரத்தில் அவனவனுடைய சித்திரகாலமாம்.

ஒவ்வொருவனுடைய சித்திரகாலத் திறத்தையும் கஉ0 - க்குக் கொடுத்துக் கண்டஈவு அவனவனுடைய சித்திரத்துக்கும் சூக்ஷ்மத் துருவமாம். ஒருவனுடைய சித்திரத்துக்குவந்த சூக்ஷ்மத் துருவத்தை ஒவ்வொருவனுடைய மகாதசைவருஷத்திற் பெருக்கிக்கண்டதொகை அந்தச் சித்திரத்தில் அவனவனுடைய சூக்ஷ்மகாலமாம்.

ஒவ்வொருவனுடைய சூக்ஷமகாலத்தையும்-கஉ0-க்குக் கொடுத்துக் கண்டஈவு அவனவனுடைய சூக்ஷ்மத்துக்கும் பிராணத்துருவமாம், ஒருவனுடைய சூக்ஷ்மத்துக்குவந்த பிராணத் துருவத்தை

ஒவ்வொருவனுடைய மகாதசைவருஷத்திற் பெருக்கிக்கண்ட தொகை அந்த சூக்ஷ்மத்தில் அவனவனுடைய பிராணகாலமாம்.

சூரியன் இலக்கினத்துக்கு-௩-௬-௧0 - இந்த ஸ்தானங்களிலும் சந்திரன் இலக்கினத்துக்கு ௧-௬-௭-௧0-இந்த ஸ்தானங்களிலும் செவ்வாய் இலக்கினத்துக்கு-௩-௬ இந்தஸ்தானங்களிலும் இராகு இலக்கினத்துக்கு-௩-௬-இந்த ஸ்தானங்களிலும் வியாழன் இலக்கினத்துக்கு ௨-௫-௭-௯-இந்தஸ்தானங்களிலும் சனி இலக்கினத்துக்கு ௩-௬-இந்தஸ்தானங்களிலும் புதன் இலக்கினத்துக்கு ௨-அ-௧0-௧௧ இந்தஸ்தானங்களிலும் கேது இலக்கினத்துக்கு ௩-௬-இந்த ஸ்தானங்களிலும் சுக்கிரன் இலக்கினத்துக்கு ௧-௨-௩-௪-௫-அ-௯-௧௧-௧௨-இந்த ஸ்தானங்களிலுமிருந்தால் அவரவர்கள் தசையில் பொதுவாய் சுபபலன்களுண்டாம்.

சூரியதசையில் சந்திரன் செவ்வாய் வியாழன் இவர்களுடைய புக்திகளும், சந்திரதசையில் சூரியன் வியாழன் இவர்களுடைய புக்திகளும் செவ்வாய்தசையில் சூரியன் சந்திரன் வியாழன் இவர்களுடையபுக்திகளும். இராகுதசையில் செவ்வாய் வியாழன் இவர்களுடையபுக்திகளும், வியாழதசையில் சூரியன் சந்திரன் செவ்வாய்இவர்களுடைய புக்திகளும், சனிதசையில் புதன் சுக்கிரின் இவர்களுடைய புக்திகளும். புதன்தசையில் சனி சுக்கிரன் இவர்களுடைய புக்திகளும். கேதுதசையில் சுக்கிரன் சனி இவர்களுடையபுக்திகளும், சுக்கிரன்தசையில் புதன் சனி இவர்களுடைய புக்திகளும் பொதுவாய் நல்லபலன்களாம்.

## சுக்கிரன் சனிபலன்.

சுக்கிரன் தன்னுடையதசையில் சனியினுடையபுக்தியில் தான் கொடுக்கவேண்டிய சுபம் அல்லது அசுபபலன்களை விசேஷமாய்க் கொடுப்பான். சனியும் தன்னுடையதசையில் தான்கொடுக்கவேண்டிய சுபம் அல்லது அசுபபலனை சுக்கிரனுடைய புக்தியில் விசேஷமாய்க்கொடுப்பான்.

## கிரகங்கள் தங்கள் தசைகளில் நற்பலன் கொடுக்குங்காலம்.

சூரியனும் செவ்வாயும் முன்பங்கிலும்,வியாழனும் சுக்கிரனும் நடுப்பங்கிலும், சந்திரனும் சனியும் கடைப்பங்கிலும் புதன் ராகுகேது சுயஅந்தரத்துக்குமேலும் யோகபலன்களை கொடுக்கவேண்டிய காலங்களாம். இவர்கள் சுயபுக்தி ஆரம்பத்தில் விசேஷமான யோகபலன்களைத் தருவார்களானால் தங்கள்தசை முழுவதிலும் நல்லபலன்களைத் தரமாட்டார்களாம்.

சராசிக்கு-கக-ஆமிடத்துக்குடையவன் சுபபலனைக்கொடான் திராசிக்கு-கூ-ஆமிடத்துக் குடையவன் சுபபலனைக்கொடான். உப யராசிக்கு-எ-ஆமிடத்துக்குடையவன் சுபபலனைக்கொடான்; ஷேஸ் தானதிபதிகள் சுபக்ஷேத்திரங்களில் சுபர்கள் மித்துரு இவர்களு டைய சம்பந்தம் அல்லது பார்வைபெற்றிருந்தால் சுபபலன்களைக் கொடுப்பார்கள்.

மாரகாதிபர்கள் தங்களுடையதசைகளில் தங்களுடன் சம்பந் தம்பெற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புக்திகளில் மாரகத்தைக் கொடார்கள், தங்களுடன் சம்பந்தமில்லாதிருக்கிற பாபக்கிரகங்களு டைய புக்திகளிலே மாரகத்தைக்கொடுப்பார்கள்.

அஷ்டமாதிபதியினுடைய தசையில் மாரகாதிபர்களுடைய புக் திகளில் விரயம், பகை, பிணி, கஷ்டம், முதலிய கொடிய கஷ்டபல னும், அஷ்டமாதிபதி தசையில் பிரபலயோக பலனுண்டானல் தப் பாமல் மாரகத்தைக்கொடுப்பான்.

இவக்கினதிபதி அஷ்டமாதிபதி, சந்திரன், சனி, இவர்கள் சே ர்ந்திருந்தாலும், சனியும் இராகுவும் சேர்ந்திருந்தாலும் சனியும் இ ராகுவும் ச—எ-இந்த இடங்களில் சேர்ந்திருந்தாலும், சூரியனுக்கு எ-ல் சனியும், சந்திரனுக்கு எ—ல் புதனும், செவ்வாய்க்கு எ-ல் சனி யும், புதனுக்கு எ-ல் சந்திரனும், சனிக்கு ச—எ-ல் செவ்வாயுமாகவிரு ந்தாலும் பொதுவாய் தங்கள் தசைமுழுவதும் நல்ல பலன்களைக் கொடார்கள்.

திசர்நாதனுக்கு புக்திநாதன் மித்திரனாக கேந்திரம் திரிகோண ம் சொக்ஷேத்திரம் உச்சம் தனலாபஸ்தானங்களி லிருந்தால் அந்த புக்தியில் பூமி, தனம், சம்பத்து புத்திரமித்திரகளத்திர சுபசோப னங்களுண்டாம்.

புக்திநாதன் சுபர்கள் யோககாரகர்களாகிய கிரகங்களுடைய ச ம்பந்தம் அல்லது பார்வைபெற்றிருந்தால் மேற்சொல்லிய சுபபலன் களைத்தருவான்.

புக்திநாதன் மாரகர் அல்லது பாபக்கிரகங்களுடன் சேர்ந்தா லும் பார்க்கப்பட்டாலும் அல்லது துதிகை சப்தம் அதிபதியாய்-உ- ௩-சூ-எ—அ-கஉ-ல் இருந்தாலும் கஷ்டபலனுண்டாகும்.

சுபக்ஷேத்திராதிபதிகள் சுபக்ஷேத்திரங்களில் சுபாள் யோக காரகாளுடைய சம்பந்தம் பார்வை எவ்வளவுக்கதிகமாய் பெற்றிருக் கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அந்த சுபக்ஷேத்திரத்துக்குரிய

சுபபலன்களை அவர்களுடைய தசாபுக்தி முதலிய காலங்களில் விசேஷமாய்க்கொடுப்பார்கள். பாபக்ஷேத்திரங்களில் பாபிகள் மாரகாளுடைய சம்பந்தம் பார்வை எவ்வளவு பெற்றிருக்கிறார்களோ அதற்குத்தக்கபடி சுபபலன்கள் குறைந்து பாபபலனுண்டாம்.

பாவிகள் மித்திரராசியில் சுபாள் யோககாரகாளுடைய சம்பந்தம் அல்லது பார்வைபெற்றிருந்தால் அதற்குத்தக்க சுபபலன்களையும், மாரகாள் அல்லது பாவிகளுடைய சம்பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தால் அதற்குத்தக்க கெட்டபலன்களும் தருவார்கள்.

இலக்கினத்துக்கு-க0-க்குடையவன் தசையில் கூ-க்குடையவன் புக்தியிலும் கூ-க்குடையவன் தசையில் க0-க்குடையவன் புக்தியிலும் ஒருவருக்கொருவர் மேலானயோகத்தைத்தருவார்கள்.

பாபிகள் மாரகாள் இவர்களுடன் சம்பந்தப்படாமல் கேந்திரம் திரிகோணம்முதலிய சுபக்ஷேத்திரத்திலிருக்கின்ற இராகுகேதுக்கள் தங்களுடைய தசாபுக்தி காலங்களில் மேலான யோகத்தைத் தருவார்கள்.

தசாபுக்திகாலங்களில் கோட்சாரத்தையும் அனுசரித்து பலன்கள் பார்க்கவேண்டியது. கோட்சாரரீதியாய் வியாழன் சனி நல்லஸ்தானங்களிலிருந்தால் தசாபுக்திக்குரிய நல்லபலன்கள் பிரபலமாயிருக்கும். கோசாரரீதியாய் அவர்கள் கெட்டஸ்தானங்களி லிருந்தால் தசாபுக்திகாலத்தில் அதற்குரிய நல்லபலன்கள் மத்திமபலனாகும்.

### போதகன், வேதகன், பாசகன், காரகன் என்பது.

இராகுகேதுக்கள்தவிர மற்ற ஒவ்வொருகிரகத்தின் தசையில் வரும் புக்திக்கிரகங்களில் தனது பாகப்பலனைக் கொடுக்கச்செய்யும் கிரகம்போதகனென்றும், அப்பாகப்பலனை மாறுபடுத்துங்கிரகம்வேதகனென்றும், தேறியபலனை கிடைக்கச்செய்யுங் கிரகம் பாசகனென்றும் சம்பாதித்தபொருளைப் பெறச்செய்யுங் கிரகம் காரகனென்றும் சொல்லப்படும்.

1. சூரியனுடைய தசையில் சனி பாசகன். சுக்கிரன் வேதகன் வியாழன் காரகன், செவ்வாய் போதகனும்.

2. சந்திரனுடைய தசையில் சுக்கிரன் பாசகன், சூரியன் வேதகன், சனி காரகன், செவ்வாய் போதகனும்.

3. செவ்வாயினுடைய தசையில் சூரியன் பாசகன், சந்திரன்–போதகன், புதன்-வேதகன், சனி காரகனும்.

4. புதனுடைய தசையில் சந்திரன் பாசகன், வியாழன் போதகன், செவ்வாய்—வேதகன், சுக்கிரன் காரகனும்.

5. வியாழனுடைய தசையில் சனி-பாசகன், சூரியன் வேதகன் செவ்வாய்-போதகன், சந்திரன் காரகனும்.

6. சுக்கிரனுடைய தசையில் புதன் பாசகன், வியாழன் போதகன். சனி வேதகன், சூரியன் காரகனும்.

7. சனியினுடைய தசையில் சுக்கிரன் பாசகன், சந்திரன் போதகன், செவ்வாய் வேதகன், வியாழன் காரகனும்.

இவ்விதமாக நான்குபேரும் ஒவ்வொரு கிரகத்தின் தசையில் அவரவருக்குள்ள பாகபலனைப் புசிப்பர், இதை விபரந்தெரிந்துயோசித்துப் பலனைச்சொல்லில் பொருந்தியிருக்கும்.

**உயிர் - உடல்.**

சூரியனுடைய ராசி சிங்கமுதல் மகரம்வரையில் ஆறும் உயிரென்றும், மகரமுதல் சந்திரனுடையராசி கடகம்வரையில் ஆறும் உடலென்றும் இவ்விருவகைராசிகளில் சுபக்கிரகமிருக்கப் பிறந்த குழந்தைகள் சுகமாகவும் பாபக்கிரக மிருக்கப் பிறந்த குழந்தைகள் அசுகமாகவுமிருக்கும். இவ்விருவகைராசிகளில் முன்சொன்னதை வெற்றியென்றும் பின்சொன்னதை தோல்வியென்றும் கூறப்படும்.

அன்றியும் குழந்தைபிறந்த நாழிகைக்குரிய இராசியை (ஜென்மலக்கினம்) உயிரென்றும், குழந்தைபிறந்த நட்சத்திரத்துக் குரிய இராசியை (சந்திரலக்கினம்) உடலென்றும் சொல்லப்படும்.

**கோட்சாரம்.**

இதை ஜென்மலக்கினத்தைக்கொண்டுபார்க்காமல் ஒவ்வொருவருடைய ஜென்மநட்சத்திரத்துக்குரிய சந்திரலக்கினத்தை முதலாகக்கொண்டு பார்க்கவேண்டியது (சந்திரலக்கினத்தைத் தெரிந்துகொள்வதற்கு ஏ-வது பக்கத்திலுள்ள கிரகசாரநட்சத்திறக்கால்கள் பார்க்க) கோட்சாரம்பார்க்குங்காலத்தில் ஜென்ம நட்சத்திரத்துக்குரிய சந்திரலக்கினத்துக்கு கிரகங்கள் எந்தஸ்தானங்களில் வந்திருக்கின்றார்களென்பதை அந்தந்தக் காலத்திலுள்ள பஞ்சாங்கத்தில் கண்ட கிரகசாரங்களைக்கண்டும் இதனடியிற்கண்ட அட்டவணையில் சொல்லிய பலாபலன்களையுந் தெரிந்துகொள்ளவும் வேண்டியது.

## சந்திரலக்கின கோட்சாரபலாபல அட்டவணை.

| இன்ன கிரகம் | சந்திரலக்கினத்துக்கு இன்னின்ன ஸ்தானங்களில் வந்தால். | இன்னின்ன பலன்களுண்டாம். |
|---|---|---|
| சூரியன் | (சந்திரலக்கினம்) ௧, ௨, ௪, ௫, ௭, ௮, ௯, ௧௨ | எடுத்தகாரியம் முடியாது தலைவலி, கண்வலி, சிரங்கு, வயிற்றுவலி, சுரம், உஷ்ணம். திரிச்சல். |
| ,, | ௫ ... ... ... | கொடிய தீயபலன்கள்-காவல், வியாதி, நஷ்டம், சாவு, வியாச்சியம். |
| ,, | ௩, ௬, ௰, ௰௧ ... ... ... | சரீரசுகம், லாபம், தனதான்னியசம்பத்து முதலிய சுபபலன். |
| சந்திரன் | ௨, ௪, ௬, ௮, ௰௨ ... ... | துயரம், விரயம், வியாதி. நினைத்தகாரியம் முடியாது பொல்லாப்பு. |
| ,, | ௮ ... ... ... | கொடியதீயபலன்கள்-காவல், வியாதி, வியாச்சியம், நஷ்டம், சாவு. |
| ,, | ௩, ௬, ௰, ௰௧ ... ... | சரீரசுகம், லாபம். சந்தோஷம், வாகனம், தனதான்னியசம்பத்து சுபபலன்கள். |
| செவ்வாய் | ௧, ௨, ௪, ௬, ௭, ௮, ௰, ௰௨ ... | துயரம், நாலாவிதத்திலும் கெடுதி, பொருள்விரயம், உஷ்ணரோகங்கள். |
| ,, | ௭ ... ... ... | கொடியதீயபலன்கள் — கலகம். காவல், வியாதி, நஷ்டம், வியாச்சியம், சாவு. |
| ,, | ௩, ௬, ௰௧ ... ... | சரீரசுகம், சந்தோஷம், தனதானியசம்பத்து சுபபலன்கள் |
| புதன் | ௧, ௩, ௩, ௬, ௮, ௰, ௧௨ ... | துயரம், தனவிரயம் சண்டை, வழக்கு, உஷ்ணம், வியாதி |
| ,, | ௪ | கொடியதீயபலன்கள்-கலகம், வியாச்சியம், நஷ்டம், சாவு. |
| ,, | ௨, ௯, ௰௧ ... ... | சரீரசுகம், கல்வி, தன்தான்னியசம்பத்து சுபபலன்கள். |
| வியாழன் | ௧, ௩, ௪, ௬, ௮, ௰, ௧௨ | அலைச்சல், ஜீவனமில்லாமை பொருள்விரயம் துயரம். |
| ,, | ௬, ௮, ௰, ௧௨ ... ... | கஷ்டபலன் - நிலைபிரிவு இடம்விட்டுப்போதல் - மனவியாகூலம்-பகை. |

## சந்திரலக்கின கோட்சாரபலாபல அட்டவணை.

| இன்ன கிரகம் | சந்திரலக்கினத்துக்கு இன்னின்ன ஸ்தானங்களில் வந்தால். | இன்னின்ன பலன்களுண்டாம். |
|---|---|---|
| வியாழன் | ௩ ... ... | கொடியதீயபலன்கள், காவல், வியாதி, பிராணபயம். |
| ,, | உ,ரு,எ,௯,கக ... ... | தேகசௌக்கியம்-சந்தோஷம், சம்வஸ்திரம், வாகனம், தனதானியசம்பத்து சுபம். |
| சுக்கிரன் | ௩,௬,எ,௯ | துயரம், தனவிரயம், பகை, வியாதி. |
| ,, | ௬ ... ... ... | கொடியதீயபலன்கள். |
| ,, | க,உ,ச,ரு,அ,கக,கஉ ... | சரீரசுகம், சந்தோஷம், தனதானியசம்பத்து, சுபபலன்கள். |
| சனி | க,உ,ச,அ,௰,௰உ ...... | துயரம், தனவிரயம், கடன், விரோதம், வியாதி, சத்துருபயம், மனக்கிலேசம். |
| ,, | அ,௰ ... ... | இடம்விட்டுப்பேர்தல், தனவிரயம், கடன், தண்டம், பயம், அதிக கஷ்டம். |
| ,, | ௰உ,க ... ... | கொடியதீயபலன்கள் (ஏழ-நாட்டுச்சனியில் முதல்-ரு-வருஷத்துக்கு கொடியகஷ்டம். |
| ,, | ௩,௬,௯,௰க ... ... | நினைத்தகாரியம், கைகூடுதல், சரீரசுகம், கடன்நிவர்த்தி சந்தோஷம், உத்தியோகம், வாகனம், தனதானியசம்பத்து சுபபலன்கள். |
| இராகுகேது | க,உ,அ,௯,௰உ — ... | துயரம், பயம். விரோதம், பிணி, விரயம் இடம் பேர்தல்—நஷ்டம் கொடியதீயபலன்கள். |
| ,, | ௯ ... ... | |
| ,, | ௩,௬,எ.௰க ... ... | சரீரசுகம், தனதானியசம்பத்து-சுபபலன்கள். |

மேல்கண்ட அட்டவணையில் சுகதுக்கங்களைப்பற்றி குறிக்கப்படாதிருக்கும் ஸ்தானங்களில் வந்தால் மத்திம பலன்களென்று அறிக.

சௌமியம் அல்லது வலவோட்டு நட்சத்திரங்களில் (அதாவது அஸ்வநி, பரணி, கார்த்திகை, புனர்ப்பூசம், பூசம், ஆயில்யம், அஸ்தம் சித்திரை, சுவாதி, மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி) பிறந்தவர்களுக்குக் கோசார ரீதியாய் மேற்சொல்லிய நல்ல ஸ்தானங்களில் சூரியன், செவ்வாய், வியாழன் சனி முதலானவர்கள் நல்ல சுபபலன்களைக் கொடுப்பார்கள்என்றும்,

அபசௌவியம் அல்லது இடவோட்டுநட்சத்திரங்களில் (அதாவது உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், விசாகம், அனுஷம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம்) பிறந்தவர்களுக்கு கோசாரரீதியாய் மேற்சொல்லிய கெட்ட ஸ்தானங்களில் நல்ல சுபபலன்களைத் தருவார்கள் என்றும் சிலநூலுள.

அன்றியும் பூர்வபட்சத்தில் பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய நல்லஸ்தானங்களுக்கு நல்லபலன்களென்றும் அமரபட்சத்தில் பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய கெட்டஸ்தானங்களுக்கு நல்ல பலன்களென்றும் சிலநூல்கள் கூறுகின்றன.

சந்திரலக்கினத்துக்கு-அ-ஆமிடத்தில் சனிவருங்காலத்தில் அஷ்டமத்துச்சனியாம்-அதிககஷ்டம்.

சந்திரலக்கினத்துக்கு - கஉ-ஆமிடத்தில் சனிவருங் காலத்தில் ஏழரைநாட்டுச்சனி ஆரம்பம் கஉ-க-உ-இந்த மூன்றுவிடத்தும் இந்தச்சனி ஏழரைவருஷமிருந்து இடைவிடாமல் கஷ்டபலனைக் கொடுப்பதினால் ஏழரைநாட்டுச்சனியென்று பேர், இதில் முதல் - ரு-வருஷம் கொடூரமாகிய தீயபலன்களாம், இந்தச்சனி சந்திரலக்கினத்துக்கு மூன்றும் இராசியில் பிரவேசிக்கும்போது கஷ்டங்கள்நீங்கிச் சுகமுண்டாகும். முப்பதுவருஷத்துக்கு ஒருதடவையாக ஏழரைநாட்டுச்சனிவந்துக்கொண்டிருப்பதில் முதல்தடவையில் பிதாவுக்கு சுகபலனும் ஜாதகனுக்கு கஷ்டபலனுமாம். இரண்டாவதுதடவையில் ஜாதகனுக்கு கொஞ்சம் நஷ்டபலனும் கொஞ்சம் சுகபலனுமா யிருக்கும் மூன்றுவது தடவைக்குள் அல்லது மூன்றுவதுதடவையில் மரணம் இரண்டாவது தடவையில் கொஞ்சம் சுகமென்று கூறியிருந்தாலும் மேஷம், கடகம், சிம்மம், விருச்சிகம், கும்பம், மீனம், இந்த ஆறு இராசிகளில் எதுவாவது ஜென்மலக்கினமாகவாவது அல்லது சந்திரலக்கினமாகவாவதிருக்கிற ஜாதகர்களுக்கு ஏழரைநாட்டுச்சனி அதிக கஷ்டபலனுயிருக்கும்.

வியாழன், சனி, சூரியன், செவ்வாய்முதலான கிரகங்கள் கெட்டஸ்தானங்களிலிருந்து பிணி முதலிய கஷ்டபலன்களைத்தரு வாராகில் அதற்காக இதனடியிற்கண்ட கிரகதானியங்களை தக்ஷிணை தாம்பூலத்தோடு அந்த கிரகத்தினங்காலையில். ஜாதகன்பிராமணருக் குத்தானம்செய்வதன்றி விஷ்ணுசிவ ஆலயங்களில் நெய்த்தீபமும் கிரகத்துக்குகந்தபுஷ்பத்தினால் அருச்சனையுஞ்செய்து வைப்பதினால் பிணிமுதலிய கஷ்டங்கள் நீங்கிச்சுகமாம்.

| கிரகம் | தானியம் | புஷ்பம் |
|---|---|---|
| சூரியன் | கோதுமை | செந்தாமரை |
| சந்திரன் | பச்சரிசி | மல்லிகை |
| செவ்வாய் | துவரை | செண்பகம் |
| வியாழன் | கடலை | முல்லை |
| புதன் | பச்சைப்பயறு | வெண்காந்தள் |
| சுக்கிரன் | மொச்சை | வெண்தாமரை |
| சனி | எள் | கருங்குவளை |
| இராகு | உளுந்து | மந்தாரை |
| கேது | கொள் | செவ்வரளி |

நஷ்ட ஜாதகம்.

இலக்கின திரிகோணத்தில் வியாழன் தப்பினால் இலக்கின நவாங்கிஷ திரிகோணத்தில் வியாழனை நிறுத்தி கேட்டவனுக்கு சென்றவருஷத்தைக்கண்டு இத்தனைவருஷமென்று சொல்லவும். இலக்கினத்தில் முன்னரையானால்உத்திராயணம், பின்னரையானால் தெக்ஷணாயனம்,சூரியன் பலவானாகி லக்கினம் சூரியன் வீடானாலும், லக்கினத்தில் சூரியனிருந்தாலும், சூரியன்பலவானாயிருந்து இலக்கி னத்தைப் பார்த்தாலும், ஆனி ஆடிமாதம் சூரியனுக்குசொல்லிய படி இருந்தாலும், செவ்வாய்க்கு ஆனிஆடிமாதம், சந்திரனுக்கு ஆவணிபுரட்டாசி, புதனுக்கு ஐப்பசி கார்த்திகை, வியாழனுக்கு, மார்கழி தை, சனிக்கு-மாசி-பங்குனி, சுக்கிரனுக்குசித்திரை வைகாசி மாதமென்று அறிந்து இவர்களிருந்த ஒற்றை இராசி நவாம்சை யானால் இரண்டில்முன்மாதம்-இரட்டை இராசிநவாம்சையானால் பின்மாதம். சூரியனிருந்த ஓரையறிந்து கண்டமாதத்தில் முன் 15 பின் 15-சொல்லவும். இலக்கினத்தில்சென்றபாகையறிந்து தேதி சொல்லவும். கலைக்குநாழிகை சொல்லவும். இலக்கினாதிபதி இலக் கினத்திலே பலத்திருந்தால் கண்ட அடியெல்லாம் விரலாக்கி 27-ல் கழித்து நட்சத்திரம் சொல்லவும். இலக்கினம் தொட்டுசந்திரன் எத்தனையாவது இடத்தி லிருக்கிறானோ அதற்கத்தனையாவது இடம் இலக்கினமென்று சொல்லவும்.

# புத்திரபாவம்.

☞ (இது இந்த சுந்தரசேகரம் முதல் பதிப்புகளில் இல்லாதது)

புத்திரஸ்தானாதிபதி ஒருவனாய் புதன்வீட்டில் இருந்தால் புத்திரோற்பத்தி கிடையாது. பிறந்தாலும் இருக்கமாட்டாது. அந்ததோஷம் நீங்குவதற்கு புதஜபம் செய்யவேண்டும்.

புத்திரஸ்தானாதிபதி புதனுடைய வீட்டிலிருந்தாலும் புதனால்பார்க்கப்பட்டாலும் புதனோடு சேர்ந்திருந்தாலும் புருஷகர்ப்பமானால் கர்ப்பத்துக்கு ஹானியுண்டாகும்.

மேற்சொன்னபடி புத்திர தோஷமுள்ள ஜாதகனுடைய களத்திரத்திற்கு சாந்திமுகூர்த்தம் செய்தது முதல் வருஷந்தோறும் தேகம் பெருத்துக்கொண்டேவரும்.

புத்திரஸ்தானாதிபதி மேல்சொன்னபடி தோஷமுள்ளதாயிருந்தாலும் அவனை குருவாவது லக்னாதிபதியாவது பார்க்கப்பட்டாலும் அல்லது சேர்ந்திருந்தாலும் பெண்களும் பிள்ளைகளும் பிறக்கும் ஆனால் அவைகளில் ஜீவித்திருக்கக் கூடியது ஒன்றுதான்.

புத்திரஸ்தானாதிபதி புதன் வீட்டிலிருக்க தெய்வபலமில்லாத தசை நடந்தால்கர்ப்பத்திலேயே சிசு ஜீரணமாகும்.

புத்திரஸ்தானாதிபதி நீசராசியிலிருந்து அந்த ராசிக்குடையவன்தன்னுடைய உச்சவீட்டில் இருந்தாலும் சுபக்ஷேத்திரத்திலிருந்தாலும் சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், சுபக்கிரகங்களோடு சேர்ந்திருந்தாலும் நல்லஅதிருஷ்டமும் வித்வானாயும் அழகும் குணமும் வாகனமும் முதலியவைகளால் நிறைந்த புத்திராள் உண்டு.

புத்திரஸ்தானாதிபதி நீசனாயிருந்தால் சிறியதகப்பன் பெரியதகப்பன் ஜாதகன் இவர்களின் மனைவி மலடியாவாள் அல்லநுபிறந்தாலும் ஜீவித்திராது.

புத்திரஸ்தானாதிபதியை சனிபார்த்தால் மலடியாவாள். அல்லது பிறந்துபோய்விடும், மேலும் தகப்பன் மிக்கத்துயரமுள்ளவனாய் புதல்வனுக்குக் கர்மம்செய்யும்படி நேரிடும் சந்தேகமில்லை.

காலங்கழித்தாவது பிள்ளையுண்டாகும் அல்லது இரண்டாவது பெண் சாதிக்காவது பிள்ளையுண்டாகும்.

புத்திரஸ்தானுதிபதி சனியால்பார்க்கப்பட்டால் கர்ப்பம்கரைந்து போய்விடும் அவன் உச்சனும் ஸ்வக்ஷேத்திரனும் இருந்தால் அநேகம் பிள்ளைஜனித்தாலும் ஒரேபுத்திரன்தான்ஜீவித்திருப்பான்.

புத்திரஸ்தானுதிபதியை சனி பார்த்தாலும் சனியோடும் கூடினலும் பெண்களது போகபாக்கியங்களும் குறைவுபடும். சாஸ்திரங்களில் புத்திரஸ்தானத்தைபும் புத்திஸ்தானத்தையும் பேதமாகச் சொல்லப்படாமையால் புத்திக்கும் சாஞ்சல்யம் ஏற்படும்.

புத்திரஸ்தானுதிபதி புருஷக் கிரகக்ஷேத்திரத்திலிருந்தாலும் கேந்திரஸ்தானத்தி லிருந்தாலும் நீசக்ஷேத்திரத்திலுள்ளவனுயிருந்தாலும் பெண்களும் பிள்ளைகளுமுண்டு.

புத்திரஸ்தானுதிபதி பாபியோடு சேர்ந்திருந்தால் புத்திரனுக்கு ஹானியைச்செய்வான். சுபனும் லக்னுதிபதியாலும் பார்க்கப்பட்டாலும் ஹானிசெய்யமாட்டான்.

திருவாதிரை நட்சத்திரத்திலாவது ஹஸ்தநட்சத்திரத்திலாவதுபுத்திரஸ்தானுதிபனிருந்தால் ஜாதகனுக்கு புத்திரனில்லை.

மிருகசீரிடம், புனர்ப்பூசம், இந்த நக்ஷத்திரங்களில் புத்திரஸ்தானுதிபனிருந்தால் வெகு காலங்கழித்துஒரேபிள்ளை யுண்டென்பதற்கு ஐயமில்லை.

மிதுனத்திலாவது கடகத்திலாவது கன்னியாராசியிலாவது புத்திரஸ்தானுதிபனிருந்தால் ஜாதகனுக்கு யாதொருதோஷமும் கிடையாது. ஸ்திரீப்பிரஜை தானுண்டாகும். (அதாவது ஸ்திரீப்பிரஜையுண்டானல் அதற்கு யாதொரு தோஷமும் ஏற்படாது. சில கிரந்தத்தில் முன்சொன்ன தோஷமானது அமங்கல்லியத்தையுமுண்டுபண்ணும் அல்லது பிரசவத்தில் சூசிகாவாயு உண்டாகும் அல்லது தரித்திரத்தன்மையையுமுண்டுபண்ணும் என்றுசொல்லப்படுகிறது. இவைகளுக்குப் பரிகாரம் கிலீபக்கிரக ஜபமும் அசுவத்தப் பிரதக்ஷிணமும் ஸேதுஸ்நானமும் செய்யவேண்டியது. மற்றுஞ்சிலர்கள் முற்குறிக்கப்பட்ட ராசிகளில் புத்திரஸ்தானுதிபனிருந்து லக்னுதிபதியால் பார்க்கப்பட்டால் பலவித சவுக்கியத்தையும் ராஜயோகத்தையும் தங்கசாமான் வெள்ளி சாமான்களும் பன்னிரண்டு வயதுமுதல் அவனது பிள்ளை பெண்களுக்குக்

கிடைக்கு மென்றும் சொல்லப்படும். ஜபம் ஹோமம் இவை களைச்செய்தால் அந்த பிள்ளைகளுக்குப் பூர்ணமான ஆயுளும் உண்டாகும்.

புத்திரஸ்தானாதிபதி சூரியக்ஷேத்திரத்தில் இருந்தால் கதலிவந்திய, பாவத்தை அடைவன். இந்ததோஷம் மிகுந்ததனிகனுக்கும் ராஜாவுக்கும் உண்டு. தரித்திரனுக்குக்கிடையாது.

புத்திரஸ்தானாதிபதி சனியோடு கூடியிருந்தாலும் ஸ்திரீசம்போக காலத்தில் தேகத்தில் தாபமுண்டாகும். வீரியமானது ஜலமாகப் போய்விடும் ஜாதகனுக்கு குன்மமுண்டாகும்.

புத்திரஸ்தானாதிபதி சனியோடு கூடியிருந்தால் மலடியாகவும் பிறந்ததற்கு நாசத்தையும்செய்யும். ருதுவாகி பத்துவருஷத்துக்கு மேல் பிறந்தால் ஒருபிள்ளை ஆயுளுடன் கூடியிருக்கும்.

புத்திர தோஷமிருந்தால் ருதுகாலம்முதற்கொண்டு ஒன்பது வருடத்திற்கு மேலுண்டாகும்.

புத்திரஸ்தானாதிபதி அலிக்கிரகத்தின் நடுவிலிருந்தால் மலட்டு தோஷத்தையடைவான்.

புத்திரஸ்தானாதிபதி எட்டாமிடத்திலிருந்தால் அவனுடைய ஞாதிகளுக்கும் புத்திரதோஷமுண்டு. அந்தஸ்தானம் உச்சமாகவாவது ஸ்வக்ஷேத்திரமாகவாவது இருந்தால் புத்திரதோஷங் கிடையாது.

புத்திரஸ்தானாதிபதி சத்துருவீட்டிலிருந்தாலும் சத்துருவினால்பார்க்கப்பட்டாலும் சத்துருவோடு சேர்ந்தாலும் புத்திரனுக்குத் தண்ணீர் நெருப்புமுதலியவைகளால் அபமிருத்தியு தோஷமுண்டாகும். அந்த தோஷத்துக்குப் பரிகாரம் மிருத்தியு மந்திரஜபம் லக்ஷம் செய்யவேண்டும்.

புத்திரஸ்தானாதிபதி பாபராசியிலிருந்தாலும் பாபிகளால் பார்க்கப்பட்டாலும் பாபிகளுடைய மத்தியத்திலிருந்தாலும் புத்திரனுக்கு அபமிருத்தியு தோஷமுண்டாகும். புத்திரர்கள் கோபமுள்ளவர்களாயிருப்பார்கள்.

குடும்பம் ஒன்றாகவிருந்து ஒருவனுக்குமாத்திரம் மேல் சொன்ன தோஷமிருந்தால் அத்தோஷமானது அக்காள் தங்கை அண்ணன் தம்பி சிற்றப்பன் பெரியப்பன் முதலானவர்களுக்கும் கூட சம்பவிக்கும்,

புத்தி சர்வத்திபதி பாபிகளோடு கூடியிருந்தாலும் நபும்சகக் கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் பிசாசினால் கர்ப்பத்தைச் சின்னபின்னமாக்கப்படும். பிறந்தாலும் ஜீவிக்கமாட்டாது.

ஆறு எட்டு பன்னிரண்டாம் இடங்களில் புத்திரஸ்தானாதிபதி சனி கேது மற்றைய பாபக்கிரகங்களோடு கூடியிருந்தால் ஜாதகனுக்குப் புத்திராரிஷ்டமுண்டாகும். அதற்குப் பரிகாரம் மிருத்தியுமந்திரஜபம் நான்கு லக்ஷம் செய்யவேண்டியது.

பிரதமைதிதியிலாவது துதிகைதிதியிலாவது சதுர்த்தசிதிதியிலாவது அமாவாசையிலாவது புத்திராதிபதி சந்திரனோடு கூடியிருந்தால் சிசுவுக்குக் கர்ப்பத்திலேயே மரணம். புத்திரேசன் சுபர்களால் பார்க்கப்படாமல் பாபிகளோடாவது சத்துருக்களோடாவது கூடியிருந்தால் இதுவே தோஷமென்று உள்ளமுடையான் அபிப்பிராயம். புத்திரதோஷமிருந்தால் களத்திரம்இரண்டு மூன்று ஏற்படும். சுக்கிரன் ஆறு எட்டு இவைகளிலிருந்து தசைவந்தாலும் புத்திரதோஷத்தால் சூதிகாவாயுவினால் அபமிருத்தியு தோஷமுண்டாகும்.

ஐந்தாமிடத்தில் க்ஷீணசந்திரனிருந்தால் புத்திரதோஷமுண்டாகும். ஷி தோஷத்தால் இரண்டு களத்திரம் ஏற்படும் புத்திக்கு மாறுபாடு உண்டாகும் பெண்குழந்தைபிறந்தால் அதற்கு தேகத்தில் அசவுக்கியமுண்டாகும் களத்திரம் இரண்டாகாதவிஷயத்தில் 12—18 வருஷத்தில் களத்திர தோஷமுண்டு ஆதலால் பரகளத்திரத்தில் காதலுள்ளவன்.

பெண்குழந்தைபிறந்தால் ஷி தோஷம்கிடையாது. ஆனால் பாலியத்தில் வியாதியுண்டாம்.

மூன்று, ஆறு, பதினொன்று, இவைகளில் புத்திராதிபன் க்ஷீண சந்திரனோடு கூடியிருந்தால் மூன்றுதினம் பிரசவ வேதனையையனுபவித்துப் பிரசவமாகும்.

மேல்சொன்ன மூன்று, ஆறு, பதினொன்றில் க்ஷீணசந்திரனோடு புத்திராதிபதி கூடியிருந்தால் புத்திரனுடைய பன்னிரண்டாவது வயதில் பிதாவுக்குப் பீடையுண்டாகும். அல்லது புத்திரனுக்குப் பீடையுண்டாகும். ஸ்திரீஜாதகத்தில் புத்திராதிபன் நீசனாயிருந்தாலும் புருஷ ஜாதகத்தில் புத்திராதிபன்புத க்ஷேத்திரத்திலாவது புதனோடுசேர்ந்தாவது சத்துருக்ஷேத்

திரத்திலாவது இருந்து சுபதிருஷ்டி யில்லாவிட்டால் இரண்டல்லது மூன்றுதினம் பிரசவவேதனையையடைவாளென்பது சில கிரந்தகர்த்தர்களி னபிப்பிராயம்.

புத்திராதிபதி கேந்திரஸ்தானங்களில் அஷிக்கிரகங்களோடு கூடியிருந்தால் புத்திரர்களுக்கு அசவுக்கியமும் புத்திக்குறைவுமுண்டாகும். பௌத்திரனுக்கு தோஷமுண்டென்று உள்ளமுடையான் அபிப்பிராயம்.

மேல்சொன்னபடி கேந்திரஸ்தானங்களில் புத்திராதிபதி அஷிக்கிரகத்தோடு சேர்ந்திருந்தால் பிள்ளையிருந்தால் பேரனுக்கு நாசமும் பேரனிருந்தால் புத்திரநாசமும் உண்டாகும்.

புத்திராதிபதி சத்துருவோடு கூடிப்பாபக்ஷேத்திரத்திலிருந்தால் இருந்தால் ஜாதகனுக்காவது அவன்களத்திரமாவது புத்திரசோகத்தை அனுபவிப்பார்கள் அல்லது அவனுடையஜேஷ்டபுத்திரனுக்கு புத்திரதோஷம் உண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி லக்னதிபதியோடு கூடி பாபிகளோடு சேர்ந்திருந்தால் ருதுகாலம் முதற்கொண்டு ஐந்து அல்லது ஏழுவருஷத்துக்கு மேலாவது ஏழுபிள்ளை அல்லது எட்டுப்பிள்ளைகளாவது உண்டாகும். அந்தப் புத்திரர்கள் இருபத்தைந்து வயதுக்கு மேல் பிச்சையெடுக்கும் யோகத்தைப் பெறுவார்கள். அதில் ஒருவனுக்கு மாத்திரம் ஆண் பெண் சந்ததியும் மற்றவர்களுக்கு பெண்சந்ததியுமாத்திரம் உண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி பாபிகளோடு சம்பந்தப்பட்டால் ஒருவன் மிகுந்த காமியாயிருப்பான் அவன் வைதீகனுல் தன்களத்திரத்தினிடத்திலேயும் லௌகீகனுல் அன்னிய ஸ்திரீகளிடத்திலேயும் ஆசையுள்ளவனு யிருப்பான். பெண்கள் பிறந்தால் ௩௰ வருஷத்துக்குமேல்பட்டு வைதவ்யம் வரும். புத்திரன், ஸ்திரீ நிமித்தமாக தகப்பனுல் தேடப்பட்டதை அழித்து விடுவான். பரிகாரம்செய்யாவிட்டால் பௌத்திரனுக்கு தோஷமுண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி புருஷ ராசியிலிருந்தால் ஆண்குழந்தை யுண்டாகும். ஸ்திரீராசியிலிருந்தால் பெண்குழந்தை உண்டாகும் ஆட்சி உச்சனுயிருந்தாலும் லக்னதிபதி அல்லது குருபார்த்தாலும் ஆண்பெண்கலந்துண்டாகும் பரிவர்த்தனையுடைய சனி திருஷ்டியிருந்தாலும் மேல்சொன்னபடி யுண்டாகும்.

சர்வசங்கிரகநாடியில் சனிபரிவர்த்திதனு யிருந்தாலும் சனியை குருபார்த்தாலும் அந்தச் சனியை சுபனுகச் சொல்லுகிறது. அப்படி சனி சுபனுகவிருந்தாலும் அவனுடைய திருஷ்டியானது புத்திரஸ்தானுதிபதிக்கு ஏற்பட்டால் அந்த ஜாதகனுடையபெண் பிள்ளைகளுக்கு பிசாசுகளின் உபத்திரவம் ஏவல் கட்டு உண்டாகும் ஆனுல் பிராணபயங் கிடையாது.

புத்திராதிபதிக்கு பாபிகளுடைய பார்வை யில்லாவிட்டால் புத்திரதோஷங் கிடையாது. புத்திரனுக்கு சரீரதோஷங் கிடையாது.

புத்திராதிபதி அலிக்கிரகராசியிலிருந்தாலும் சனியால் அல்லது அலிக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் கர்ப்பத்திலேயே சிசுவுக்கு மரணம் நேரிடும். பிரசவமும் கடினமாயிருக்கும் லக்கினுதிபதிபார்வையிருந்தால் சுகப்பிரசவமாயிருக்கும்.

புத்திராதிபதி அலிக்கிரகராசியி லிருந்தால் ஜாதகன் புத்திரனுக்கு கருமத்தைப் பண்ணுவான். பெண் பிறந்தால் சூசிகா வாயு உண்டாகும்.

புத்திராதிபதி பாபிகளோடு சேர்ந்தாலும் அல்லது பாபிகளால் பார்க்கப்பட்டாலும் அவனுடைய தசையிலாவது அவனுடைய மாசத்திலாவது வாரத்திலாவது மாசத்திலடுத்தமாசத்திலாவது வாரத்திலடுத்தவாரத்திலாவது ஒன்பதுக் குடையவனுடைய தசையிலாவது ஜாதகன் பிள்ளைக்குக் கர்மம் செய்வன். பரிகாரம் செய்யாவிட்டால் பௌத்திரதோஷமுண்டாகும். பரிவர்த்தனை யிருந்தாலும் தோஷமேற்படும். மிருத்திய மந்திரஜபமும் புத்திராதிபதியுடைய மந்திரத்தையும் ஜெபம் செய்யவேண்டும் செய்தால் தோஷங்கிடையாது.

புத்திராதிபதி கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது பலமுள்ள, வனுயிருந்தால் எழுபிள்ளை அல்லது ஒன்பது பிள்ளைகளாவது உண்டாகும் சந்தேகமில்லை.

புத்திரஸ்தானுதிபதி அலிக்கிரகராசியிலிருந்தாலும் ஷஷ்டி கிரகத்தோடுசேர்ந்தாவது அல்லது நீசனுகவிருந்தாலும் அஸ்தமனத்தையடைந்தவனுனலும் அந்த ஜாதகனுடைய பெண்சாதிக்கு ருதுவான ஆறு எழு வருஷத்துக்கு மேற்பட்டு மாசந்தோறும் பைஷ்டையாகிற தினத்துக்குமுன் ஐந்துதினங்களில் புருஷசம்பந்தத்தால் ஏற்படும் வீரியங்களை யுட்கொள்வதில் மிக்க ஆவ

ளுள்ள புழுக்களால் வயிற்றுவலி உண்டாகும், அதனால் கெர்ப்பந்தரிக்காது தவிரவும் ருதுகாலம்முதற்கொண்டு ஒன்பது வருஷத்துக்கு மேல்பட்டு ஸ்திரீயினுடையதேகத்தில் ரத்தக்குறைவும் ரூபநாசமும் உண்டாகும். அவையவங்கள் இளைப்பையடையும். அதற்கு ஒன்பது வருஷத்துக்கு முன்னமே பரிகாரம் செய்யவேண்டும் செய்யாவிட்டால் புத்திரோற்பத்தி கிடையாது. அடிவயிறு கல்லாகக் கனத்திருக்கும் இடுப்புவலி உண்டாகும். அடிவயிற்றின் கீழே வாழைக்காய்போல்கட்டும், இவைகள் புத்திரதோஷம் இது கேரளசாஸ்திரத்தில் சொல்லுகிறது. இதற்கு அவிக்கிரக ஜபமும் மிருத்தியு மந்திரஜபமும் செய்யவேண்டும்.

எவனுடைய பிதாமகன் ஜனனகாலத்தில் ஆறு எட்டு பன்னிரண்டுகளில் கிலீபராசியாயிருந்து அவைகளில் பாபிகளோடு புத்திராதிபன் கூடியிருந்தால் அவனுக்கும் அவனுடைய பிதாமகனுக்கும் மேல்சொன்ன தோஷமுண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி புத்திரகாரகன் லக்கினதிபதி இவர்கள் ஒருவருக்கொருவர் ஆறு, பன்னிரண்டுகளில் பாபிகளோடு கூடியாவது பாபக்ஷேத்திரத்திலாவ திருந்தால் அந்த ஜாதகன் புத்திரர்களோடு நியாயாதிபதி முன்பாக விவகாரம் உண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி பாபிகளோடுகூடியிருந்தால் அந்த புத்திரஸ்தானதிபதி தசையிலாவது நவமாதிபதி தசையிலாவது லக்கினதிபதி தசையிலாவது அவனுடைய பிள்ளைகள் தகப்பனால் சம்பாதிக்கப்பட்டதை அழித்துவிடுவார்கள்,

புத்திரஸ்தானத்தில் க்ஷீணசந்திரனிருந்தால் அந்த ஜாதகனுடைய களத்திரம் ஆறு மாசத்திலாவது ஏழுமாசத்திலாவது பிரசவிப்பாள். பிரசவகாலத்தில் அதிகமான பீடையுண்டாகும்.

புத்திரஸ்தானத்தில் செவ்வாயிருந்தால் கர்ப்பத்துக்கு சேதம் வரும் பிறந்தால் மரணத்தையடையும், ஜீவித்திருந்தால் பிதாவுக்குக் கெடுதலையுண்டுபண்ணும்.

புத்திரஸ்தானத்தில் சனி இருந்தாலும் அல்லது ராகு இருந்தாலும் இருவரும் சேர்ந்திருந்தாலும் அவனுடைய தசை வந்தால் புத்திராரிஷ்டத்தை உண்டுபண்ணும். புத்திக்கும் மாறுபாடு உண்டாக்கும். இதற்கு சனி ஜபம் எட்டு லக்ஷம் மிருத்தியு மந்திர ஜபம் எட்டு லக்ஷம் செய்யவேண்டியது. இந்த ஜாத

கனுக்கு சம்போகம் செய்யுங் காலத்தில் மூக்கிலிருந்து தண்ணீர்உண்டாகும், வயிற்றுவலிஉண்டாகும். அதிகசம்போகம் யேற்பட்டால் சுகசன்னியுண்டாகும் ஒருவருக் கொருவர் தேகத்தில் எரிச்சலுண்டாகும்.

ஏழாமிடத்ததிபன் நீசனோடு சேர்ந்தாவது அலியின் வீட்டிலிருந்தாவது சத்துரு க்ஷேத்திரத்திலாவது புத்திரஸ்தானாதிபதியும் நீசக்ஷேத்திரங்களிலிருந்தால் அவனுடைய பத்னி மலடியாகவிருப்பாள். கர்ப்பமே உண்டாகாது. தவிர மாசந்தோறும் பைஷ்டையாவதும் சரியாக உண்டாகமாட்டாது. அனேக களத்திரமிருந்தாலும் கர்ப்பமுண்டாகாது அவர்களுக்கு ரத்தக்குறைவு உண்டாகும்.

மேல்சொன்ன தோஷங்களோடு புத்திரஸ்தானாதிபதி கூடியிருந்தாலும் குருதிருஷ்டியாவது லக்கினாதிபதி திருஷ்டியாவது இருந்தால் சிலகாலம் கழித்து வேறொருதாரத்திற்கு புத்திரனுண்டாகும்.

புத்திரஸ்தானாதிபதி சத்துருராசியிலிருந்தால் புத்திரநாசமுண்டாம்

புத்திரஸ்தானாதிபதி கிலீபராசியி லிருந்து புருஷகிரக திருஷ்டியில்லாவிட்டால் அந்தஜாதகனுக்கு போனால் கர்மம் நடக்கும்.

சனி சப்தமத்திலிருந்தால் புத்திர தோஷமுண்டு ருது காலத்துக்கு பின் ஐந்து அல்லது ஏழு வருடத்துக்குமேல் பிரசவித்தால் புத்திர தோஷமில்லை.

சனி சத்துரு மித்திரனோடும் கூடி சப்தமத்திலிருந்தால் குடும்பத்துக்கே புத்திரதோஷமுண்டு. பாகமாய்விட்டால் தோஷமில்லை.

புத்திரஸ்தானாதிபதி புதக்ஷேத்திரத்திலிருந்தாலும் புதன் புத்திரஸ்தானாதிபதியுடைய வீட்டிலிருந்தாலும் ஜாதகனுக்குப்புத்திரலாப முண்டாகும். பரிகாரம் செய்யாவிட்டால் புத்திரனில்லை.

புத்திரஸ்தானாதிபதி மிதுனம் கடகம் சிம்மம் கன்னி இந்தராசிகளிலிருந்தாலும் இந்தராசிகள் லக்கினமாயிருந்தாலும் புத்திர தோஷமில்லை.

புத்திரஸ்தானாதிபதி பாபியாயிருந்தாலும் பாபியோடு சேர்ந்திருந்தாலும் புத்திரதோஷமில்லை.

புத்திரஸ்தானதிபதி கேந்திரத்திலிருந்தாலும் நீசனயிருந்தாலும் புத்திரனுண்டு.

புத்திஸ்ரஸ்தானதிபதி க்ஷீணசந்திரனோடு சேர்ந்து, ஆறு, எட்டு, பன்னிரண்டு, இந்த இடங்களிலிருந்தால் அவனுடையபிள்ளைகள் அங்க ஹீனர்களா யிருப்பார்கள் புத்திர தோஷமுமுண்டு.

புத்திரஸ்தானதிபதி சத்துருவோடு சேர்ந்து பாபிகளுடைய வீட்டில் இருந்தால் ஊமையாயிருப்பான். ஜெயிலில் வாசமுண்டு.

புத்திரஸ்தானதிப்தியை சுபனல்பார்க்கப்பட்டாலும் லக்கினதிபதியால் பார்க்கப்பட்டாலும் ஊமையாயிரான். ஜெயிலில் வாசமும் இல்லை.

புத்திரஸ்தானதிபதி பாபியானலும் பாபியோடுசேர்ந்து இருந்தால் முன்சொல்லிய தோஷமில்லை. தாமசித்துப்பிள்ளைஉண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி பாபியாயிருந்தாலும் பாபிகளோடு சேர்ந்து ௬—௯—௧௨—இந்த இடத்தில் இருப்பானகில் புத்திரவிருத்தியுண்டு.

புத்திரஸ்தானதிபதி எங்கே நீசனயிருக்கிறனே அந்தநீசஸ்தானதிபதியால் பார்க்கப்பட்டாலும் லக்கினதிபதியோடு சேர்ந்து இருந்தாலும் புத்திரதோஷமில்லை.

புத்திரஸ்தானதிபதி ௰உ—அ—௯—ல் லக்கினதிபதியோடுசேர்ந்து இருந்தாலும் லக்கினதிபதியால் பார்க்கப்பட்டாலும் நீசனயிருந்தாலும் அந்த ஜாதகனுக்குப் பிள்ளைகள் திருட்டு முதலானதோஷமுள்ளவர்களா யிருப்பார்கள்

புத்திரஸ்தானதிபதி பாபியோடு சேர்ந்து பாபிகளுடைய வீட்டில் இருந்தால் அவனுடைய பிள்ளைகள் சூத்திரஸ்திரீ யல்லது வைசியஸ்திரீ சம்போக முள்ளவர்களும் இரக்கம் சத்தியம் இவைகளில்லாதவர்களுமா யிருப்பார்கள் சந்தேகமில்லை.

களத்திரஸ்தானதிபதி பாபியோடு சேராமல் பலவானயிருந்தாலும் களத்திரக்காரகனும் பலவான யிருந்தாலும் புத்திர தோஷமிருந்தால் ஜனிக்கும் பிள்ளைக்கும் தாயாருக்கும் பிரஸவகாலத்திலேயே மரணமுண்டாகும். அந்த ஜாதகனுக்கு காலம்கழித்து அந்நியஸ்திரீயிடத்தில் புத்திரோற்பத்திஉண்டு-

துலாலக்கினத்தில் பிறந்தவனுடைய புத்திரஸ்தானதிபதி லக்னத்துக்கு பத்தாமிடமான கடகத்தில் இருக்க அவனைப் புருஷ கிரகம்பார்க்காவிட்டால் புத்திரனில்லை.

விருஷபலக்கினத்தில் ஜநித்தவனுடைய புத்திரஸ்தானுதிபதி புத்திரஸ்தானத்திலிருந்து அவனுக்கு புருஷகிரகபார்வை யில்லாவிட்டால் புத்திரனில்லை.

புத்திரஸ்தானுதிபதி க்ஷீரணசந்திரனோடு சேர்ந்திருந்தால் தன்னுடைய உச்சஸ்தானத்திலாவது தன்னுடையராசியிலாவதுஇருந்தால் அவனுடையபாரியைமலடி அல்லது இறந்துபோன பிள்ளையை யுடையவள். அவ்லது ஒரு பிள்ளையை உடையவளாயிருப்பள், புத்திரஸ்தானுதிபதி க்ஷீணசந்திரனுல் பார்க்கப்பட்டாலும் அதே பலன்.

புத்திரஸ்தானுதிபதி சனியோடுசேர்ந்திருந்தால் மேல்கண்டபலனும் வெகுநாள்சென்று வேறே களத்திரத்திற்கு ஒருக்கால் பிள்ளை பிறந்தாலும் பிறக்கும்.

ஐந்தில் பாபியிருந்தாலும் ஐந்தாமிடத்துக்காரன் பாபியோடு சேர்ந்திருந்தாலும் சுபனுடைய பார்வையில்லாவிட்டால் சித்தபிரமை யுண்டாகும்.

புத்திரஸ்தானுதிபதி புதனுடைய வீட்டிலிருந்தாலும் களத்திரஸ்தானுதிபதி சத்துருவுடைய வீட்டிலிருந்தாலும் அவனுடையஸ்திரீ அதிகரூபவதியாயிருந்தாலும் மலடியாயிருப்பாள்.

புத்திரஸ்தானுதிபதி தன்னுடைய உச்சஸ்தானத்தி லிருக்க புத்திரஸ்தானத்தில் சனி யிருந்தாலும் பார்த்தாலும் ஒரு பிள்ளை உண்டு.

புத்திரஸ்தானுதிபதி பாபியோடுசேர்ந்து இருந்தாலும் பாபியால்பார்க்கப்பட்டாலும் அவனுடைய பிள்ளை தாசியால் அபகரிக்கப்பட்ட தனத்தை யடையத்தக்கவனுயிருப்பன்.

புத்திரஸ்தானுதிபதி க்ஷீணசந்திரனோடுசேர்ந்து இருந்தாலும் லக்கினத்திலிருந்தாலும், தனஸ்தானத்திலிருந்தாலும் அவனுடைய ஸ்திரீ வந்தியார்தோஷமுண்டு.

புத்திரஸ்தானுதிபதி புதனுடைய வீட்டிலிருந்தாலும் லக்கினகேந்திரத்திலிருந்தாலும் சுபனுல் பார்க்கப்பட்டாலும் பெண்களும் பிள்ளைகளுமுண்டாகும்.

புத்திரஸ்தானாதிபதி வேறொருவனுடைய வீட்டிலும் அவன் புத்திரஸ்தானத்திலுமிருக்கிறவனுக்கு பிறக்கும் பிள்ளை மஹாயோகவானாயும், தேகசுகியாயும் எல்லாரிடத்திலும் பிரீதியுள்ளவனாயும், எல்லாருக்கும் நன்மையைச் செய்கிறவனாயும், எல்லாராலும் பூசிக்கத்தக்கவனாயுமிருப்பன்.

புத்திரஸ்தானாதிபதி ஒருவன்வீட்டில் ஒருகிரகமும் அந்த கிரகத்தின் வீட்டில் மற்றொருவனு மிருக்கிறவனோடு சேர்ந்திருந்தாலும் கிலீபகிரகத்தின்வீட்டில் இருந்தாலும் கிலீபகிரகத்தால் பார்க்கப்பட்டாலும் அவனுடைய பேரன் அல்லது பிள்ளைக்கு ஹானியுண்டு.

கிலீபக்ஷேத்திராதிபதியுடைய மந்திரத்தை நான்குலக்ஷம் ஆவர்த்தி ஜபித்தால் மேல்சொன்ன தோஷம்போகும்.

புத்திரஸ்தானத்தை சனி க்ஷீணசந்திரன் குஜன் இவர்கள் அடைந்திருந்தால் அவரவர்கள் தசையில் புத்திரனுக்கு மிருத்தியு உண்டாகும். அன்னிய கோத்திரத்திலிருந்து ஸ்வீகிருதனாயிருந்தாலு முண்டாகும். ஷை மூன்றுபேர்களுடைய மந்திரத்தை பன்னிரண்டுலக்ஷம் ஜபித்தால் அந்ததோஷம் போகும்.

புத்திரஸ்தானாதிபதி கிலீபராசியிலிருந்தாலும், அவர்களால் பார்க்கப்பட்டாலும் அவனுக்கு பிள்ளை ஸ்விகிருதனாயிருப்பன்.

புத்திரஸ்தானாதிபதி ராகுவோடு கூடியிருந்தாலும் பத்தாமிடத்தில் இருந்தாலும் அவனுடைய பெண்சாதி எவ்வளவு ரூபவதியாயிருந்தாலும் மலடியாயிருப்பள்.

புத்திரஸ்தானாதிபதி ஸ்திரீ கிரஹத்தோடு சேர்ந்து சுவக்ஷேத்திரத்திலாவது கேந்திரத்திலாவது இருந்தால் அந்த ஜாதகனுக்கு பிள்ளை ஒன்று இரண்டு.

புத்திரஸ்தானாதிபதி புதக்ஷேத்திரத்திலிருந்தாலும் புதனால் பார்க்கப்பட்டாலும் புத்திர சோகத்தை அடைவதில் ஸம்சயமில்லை.

புத்திரஸ்தானாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் புத்திரசோகமுண்டு.

புத்திரஸ்தானதிபதி கிலீபராசியிலிருந்தாலும் கிலீபனால் பார்க்கப்பட்டாலும் பேரனுக்கு ஹாநியைச்சொல்லவும்.

ரிஷபம், சிம்மம், கும்பம், மீனம், இந்த ராசிகளில் புத்திரஸ்தானதிபதி ஒருவனோடு சேராமலும் ஒருவனால் பார்க்கப்படாமலும் தனியாக இருந்தால் அவனுடைய களத்திரம் மலடி அல்லது இறந்துபோன பிள்ளையையுடையவளா யிருப்பள். இப்படிப்பட்ட ஜாதகனுக்கு சо - வயதுக்குமேல் ஸ்திரீஸம்போகத்தால் வீரியம் ஜலம்போலாய்விடும்.

புத்திரஸ்தானதிப்தி பாபிகளுடைய நடுவிலிருந்தால் அவனுடைய பெண்சாதி மலடியாயிருப்பள். வெகுநாள்கழித்து வேறுபெண்சாதியிடத்தில் புத்திரோற்பத்தியுண்டு.

புத்திரபாவம் முற்றிற்று.

## சந்தான முக்கிய கவனிப்பு,

புத்திரேசன் பலவானாயிருந்தால் பிள்ளைகளும் பெண்களும் பிறக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கு இசுவு, காசம், மாரடைப்பு இவைகளுண்டாகும்.

புத்திரஸ்தானதிபதி சந்திரனாகஇருந்து ராகுவோடு சேர்ந்து சுபக்கிரகத்தால் பார்க்கப்படாமலிருக்கும் பட்சத்தில் நெருப்பு ஜலம் இவைகளால் பயம் அவசியம் ஏற்படும்.

புத்திரஸ்தானதிபதி பலவானாய் புதக்ஷேத்திரத்திலிருந்தபோதிலும் புதனோடு சம்பந்தப்பட்டபோதிலும் முன்சொல்லப்பட்டவியாதிகள் ஜாதகனுடைய பிள்ளைக்கு உண்டாகும்.

கும்பலக்கினத்துக்கு புதன் அ - ல் இருக்க பிள்ளை பெண்களில்லை, பாவக்கிரகத்தோடு சேர சுத்த வந்தியை மிருதவந்தியை-கஉ-வயதுள் ஆயுளின் நிஷ்கர்ஷையைச் சொல்லக்கூடாது. ஆதலால் அதற்கு பரிகாரமாக மிருத்தியு மந்திர ஜபம் செய்யவேண்டும்.

கும்பலக்கினத்துக்கு 8 - ல் கூட்டக்கிரகங்கள் சேர்ந்தால் பெண்கள் பிள்ளைகளுடைய சமிருத்தியுண்டாகும், 12—லும் அப்படியே எவ்வித தோஷமிருப்பினும் பாராட்டாது.

புத்திரதோஷம் வந்த ஜாதகங்களுக்கு களத்திரம் 1—2—3—4—வரையில் ஏற்படக்கூடும். ஆதலால் அந்தந்தகிரகங்களின் மந்திரமும் மிருத்யு மந்திரஜபமும் செய்தால் களத்திரத்துக் கபாயம் ஏற்படமாட்டாது. பிரஸவமேற்பட்டால் மரணமேற்படும். பிரஸவம் ஏற்படாவிட்டால் மரணம் ஏற்படமாட்டாது.

கடகலக்கினத்துக்கு புத்திரஸ்தானுதிபதி அஷ்டமத்திலிருக்க பிள்ளையும் பெண்ணும் பிறக்கும். அஷ்டமத்திலிருப்பது தோஷமாகையால் களத்திரம் இரண்டுபண்ணிவைக்கும்.

மகர லக்கினத்துக்கு அஷ்டமத்தில் புத்திரஸ்தானுதிபதி யிருக்கப் பெண்களும் பிள்ளைகளும் யதேஷ்டமாய்ப் பிறக்கும். ஆனல் இவ்விருவர்களும் தகப்பனல் சம்பாதிக்கப்பட்ட சொத்தை சாப்பிடுவார்களே யொழிய சம்பாதித்து ஜீவிக்கத்தக்கவர்களல்ல.

புத்திரதோஷம் ஜாதகங்களுக்கு அந்தந்த கிரகங்களுக்குரிய ஜபம் செய்யவேண்டும்.

கேது சிகண்டி அந்தக் கேதுவோடுகூட புத்திரஸ்தானுதிபதி சேரலாம், தோஷங்கிடையாது. 1—2 சேதமாகும்.

புத்திரஸ்தானுதிபதி எவ்வீட்டி லிருக்கிருனே, அவ்வீட்டுக்காரனும் கூடத்துணையாயிருக்க பிள்ளையும் பெண்ணும் 5 - அல்லது - 7- பிறக்கும், அவைகளெல்லாம் மிகுந்த யோகமுள்ளனவா யிருக்கும், எது இருந்தபோதிலும் தோஷங்கிடையாது.

புத்திரஸ்தானுதிபதி லக்கினத்திலிருக்க 18—19—20—21—இந்த வயதில் பிள்ளை பிறக்கும்.

2-லும் அப்படியே, 3-ல் இருக்க 25 வயதுக்குமேலே.

புத்திரஸ்தானுதிபதியும் லக்கினுதிபதியும் சேர ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்ளத் தங்கம் வெள்ளி சாமான்கள் முதலாகிய திரவியங்கள் தாய்வழியாயும் பெண்சாதிவழியாயுங் கிடைக்கும்.

கன்னியில் புத்திரஸ்தானுதிபதியிருக்க தசைவந்தாலும் புத்திவந்தாலும் 12 - வரைக்கும் புத்திரதோஷமுண்டு. அதற்குத்தக்க மிருத்யு மந்திரஜெபம் முதலியன 7 இலட்சத்துக்குக் குறையாமல் செய்யவேண்டும்.

சிம்மலக்தினத்துக்கு 6-ல் புத்திரஸ்தானுதிபதி நீசனுயிருந்தால் சுய புக்தியில் பெண்ணையாவது பிள்ளையையாவது கெடுக்கும்.

ஜாதகனுடைய தகப்பன் - 40 - வயதுதா னிருப்பான். ஆதலால் தக்க பரிகாரம் செய்துக் கொள்ளாதவரையில் ஜாதகனுக்கு அரிஷ்டம்.

5-புத்திரஸ்தானம் - 9 இரண்டாவது புத்திரஸ்தானம். லக்கினம் 3-வது புத்திரஸ்தானம் இந்த மூன்றுஸ்தானத்திலும் சனி ராகு அங்காரகன் இவர்களிருந்தால் அந்த தசை நடந்தவன் புத்திரசோகத்தை யனுபவிக்கவேண்டும். ஸ்வீகாரம் செய்துகொண்டாலும் அந்தபுத்திரனுக்கும் விபரீதம் ஏற்படும்.

புத்திரஸ்தானுதிபதி லக்கினுதிபதி இன்னும் பாபக்கிரகங்கள் கூட இருக்க பார்க்க இவனுக்கு ஆண்சந்ததி கிடையாதென்பது இந்த கிரந்தகர்த்தரின் அபிப்பிராயம்.

துலாலக்கினத்தின் 12 - ல் புத்திரஸ்தானுதிபதி யிருக்க பிள்ளையும் பெண்ணும் பிறக்கும், அந்தப்பிள்ளை பெண்களுக்கு தரித்திர தசை மேலிட்டிருக்கும்.

விருஷபம் மீனம் சிம்மம் இவைகளில் புத்திரஸ்தானுதிபதி ஒருவனுயிருக்க முதற்களத்திரத்தில் சந்ததி கிடையாது. 2-வது களத்திரத்தில்தான் சந்ததியுண்டாகும், இந்த வசனம் ஹோராசாஸ்திரம் 32-வது அத்தியாயத்திலிருக்கிறது.

விருச்சிகலக்கினத்தில் புத்திரஸ்தானுதிபதி 3 - ல் ஒருவனுயிருக்க ஆண்பிள்ளைக்குதோஷம். கன்னியில் இந்தப்பிரகாரம் இருக்க அதுவும் ஆண்பிள்ளைக்கேயொழிய பெண்பிள்ளைக்குக் கிடையாது. இதில் சொல்லப்பட்டதோஷம் ஆண்களுக்கேயொழிய பெண்களுக்குக்கிடையாது.

## குளிகாதி நால்வர் வாரோதய இராப்பகல் நாழிகை யறியும் விபரம்.

பகலுக்கு பார்க்கிறகிழமை முதல் சனிக்கிழமைவரையிலும், இராவுக்கு செவ்வாய் கிழமை வரையில் எண்ணிவந்த தொகையை 4-ல்பெருக்கிவரும் தொகையில் இரண்டுதள்ளி பாக்கிவரும் நாழிகையில் பகல் இரவு குளிகன்கள் யென்று அறிக.

| வாரம். | குளிகன். | | அர்த்த பிரக. | | எமகண்டம். | | காலன். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பகல் | இரவு. | பகல் | இரவு. | பகல் | இரவு. | பகல் | இரவு. |
| ஞாயிறு | 26 | 10 | 14 | 26 | 18 | 2 | 2 | 14 |
| திங்கள் | 22 | 6 | 10 | 22 | 14 | 26 | 26 | 10 |
| செவ்வாய் | 18 | 2 | 6 | 18 | 10 | 22 | 22 | 6 |
| புதன் | 14 | 26 | 2 | 14 | 6 | 18 | 18 | 2 |
| வியாழன் | 10 | 22 | 26 | 10 | 2 | 14 | 14 | 26 |
| வெள்ளி | 6 | 18 | 22 | 6 | 26 | 10 | 10 | 22 |
| சனி | 2 | 14 | 18 | 2 | 22 | 6 | 6 | 18 |

சுபகிருதுவஸு ஆனிமீ 14உ வெள்ளிக்கிழமை பகல் 30 நாழிகைக்கு ஜெனனஜாதகருக்கு குளிகன் நிலைமை.

### உதாரணம்.

குளிகன் வெள்ளிக்கிழமை பகல் 6-நாழிகைக்கு உதயமானதால் ஆனி மாதத்திற்குரிய மிதுனலக்கினத்தில் செல்லுபோக பாக்கி நாழிகை 3 அப்பால் கடகலக்சினத்தில் சென்றநாழிகை 3 ஆ 6 நாழிகைக்கு மேஷாதி முதல் 4-வது கடகராசியில் குளிகன் நிலை.

இதுபோல மற்ற மூவருக்கு நிலையறிந்து ராசியில்போடவும்.

## ஒருவர் பிறந்த நட்சத்திரத்திற்குண்டான மகாதசையில் செல்லுபோக பாக்கிவஸு மீ நாள்-நாழிகைவிஞடி-தர்ப்பரை சுலபமாயறியும் விபரம்.

ஜெனனகால நட்சத்திரத்தின் பாக்கி நாழிகையை அந்ததசாதிபன் வஸுத்தொதுகையால் பெருக்கி அந்த நட்சத்திர பரமநாழிகையால் வகுத்து வ௩வு வருஷமும் பாக்கியை 12 ஆல்பெருக்கி அதை பரமநாழிகையால் வகுத்துவரும் ௩வு மீமும் பாக்கியை 30 ஆல் பெருக்கி அதை பரமநாழிகையால் வகுத்துவரும் ௩வு நாளும் பாக்கியை 60 ல் பெருக்கி பரமநாழிகையால் வகுத்துவரும் ௩வுநாழிகை விஞடிக்கும் தர்ப்பரைக்கும் இதுபோற் காண்க.

### உதாரணம்.

கலியுகாதி வஸு 5004ல் செல்லாநின்ற சுபகிருதுவஸு ஆனிமீ 14உ வெள்ளிக்கிழமை பூரட்டாதி நட்சத்திரம் உதயாதி நாழிகை 30க்கு ஜெனனமான ஜாதகருக்கு தசைபிரித்துவருமாறு காண்க.

அன்றுபூரட்டாதி நட்சத்திரம் நாழிகை 58 முன்தேதியில் ஷை நட்சத்திரம் செல்லானது நாழிகை 2 ஆக ஆதியந்தம் பரமநாழிகை 60க்கு ஷைநட்சத்திரத்தில் கெர்ப்பத்தில் செல்லுநாழிகை 32 போக பாக்கி செல்லவேண்டிய நாழிகை28-ஐ இந்தநட்சத்திரத்திற்குரிய குருமகாதசைவரு 16னல் பெருக்கவந்தமொத்ததொகை 448 ஷை பரமநாழிகையால் 7 தரம்கொடுக்க420க்கு வந்த ஈவுவரு 7பாக்கி 2ஐ 12 னல் பெருக்க336 இதை ஷை பரமநாழிகையால் 5 தரம்கொடுக்க 300க்கு வந்தஈவுமீ 5 பாக்கி 36ஐ 30னல் பெருக்க1080 இதை ஷை பரமநாழிகையால் 18தரம் கொடுக்க 1080-க்கு வந்த ஈவு நாள் 18ஷைகுருதிசையில் செல்லவேண்டியவரு 7மாசம் 5நாள் 18.

இதுபோல நாளுக்கும் நாழிகைக்கும் கொடுத்த் மிச்சதொகை வந்தால் அவைகளை 60னல்பெருக்கி ஷையால் கொடுக்கவந்த ஈவு நாழிகைவினடி தாப்பரையாகவும் காண்க.

## கணக்கு பிரயாசையன்றி மகாதசை புக்தி அந்தரம் பார்க்கும் விபரம்.

ஒருவர்ஜெனித்தகால முதல் எந்தகாலம் வரையிலாவது தசாபுக்தி அந்தரம் தெரியவேணுமானல் ஜெனித்தவரு மீ தேதி நாழிகை வினடிமுதல் பார்க்கும் காலம் வரையிலும் எண்ணி அத்துடன் சூரியமகாதசைவருமுதல் தான்ஜெனித்த நக்ஷத்திரத்திற்கு வந்த மகாதசை வரைக்கும் கூட்டி முன் ஜென்மாதிக்கு வந்த வரு மீ தேதி நாழிகை யுடன் சோத்து ஆகமொத்த தொகையில் தான் பிறந்த நக்ஷத்திரதசையில் கெர்ப்பத்தில் செல்லுபோக பாக்கி செல்லவேண்டிய வரு மீ நாள் நாழிகை வினடிகளைகழித்து மீதி வருகிற வரு மீ நாள் நாழிகை 120 வருத்திற்கு மேற்பட்டால் மட்டும் 120 வரு த்தை தள்ளி மீதி சேஷத்தைவைத்து இதன் பக்கத்தில் கண்டிருக்கிற எந்த மகாதசை புக்தி அந்தரங்கள் விபரத்தொகைக்கு பக்கத்தில் ஆகமொத்தம் வரு மீ நாள் நாழிகையில் இந்த லெக்கத்தொகை வருகிறதோ அதேதசை புக்தி அந்தாம் தற்காலம் நடக்குமென்று அறியலாம்.

### உதாரணம்.

சுபகிருதுவரு ஆனிமீ 14உ 30(நாழிகைக்கு ஜெனித்தவருக்கு பிரமாதீச வரு வைகாசிமீ 8உ 16୭ நாழிகை வரையில் தசாபுக்தி அந்தாம் வருமாறு. ஜென்மாதிக்கு வயது வரு 10 மீ 10 நாள் 8 நாழிகை 16୭ இத்துடன் சூரியதசை வரு 6 சந்திரதசை வரு 10 செவ்வாய்தசை வரு 7 ராகுதசைவரு 18 ஜென்மாதி பூரட்டாதி நட்சத்திரத்திற்குரிய குருதசை வரு 16 வரைக்கும் கூடிவந்த மொத்த வரு 57 யும் சேர்த்து ஆகவரு 67 மீ 10 நாள் 8 நாழிகை 16୭ இதில் ஷைகுருமகாதசையில் கெர்ப்பச்செல்லு போக பாக்கி வரு 7 மீ 5 நாள் 18போகபாக்கி வரு 60 மீ 4 நாள் 20நாழிகை 16½ அந்த தொகை வருகிற 78 வது பக்கம் சனிதிசை புதன் புக்தி புதனந்தாத்தின் லெக்கத்தொகையாகையால் இது போலெல்லா தசை புக்தி அந்தரங்களுக்கும் கவனிக்கவும்.

## தசாபுத்தி அந்தரமும் மொத்தமும்.

கார்த்திகை, உத்திரம், உத்திராடம். சூரியதிசை வரு 6-க்கு புத்தி அந்தரம் ஆகமொத்தம், வரு 6

| புத்தி | கி | மீ | நா | நா | ஆகமொத்தம். வரு | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியபுத்தி மீ 3 நா 18 | சூ | 0 | 5 | 24 | 0 | 0 | 5 | 24 |
| | சந் | 0 | 9 | 0 | 0 | 0 | 14 | 24 |
| | செ | 0 | 6 | 18 | 0 | 0 | 20 | 42 |
| | ரா | 0 | 16 | 12 | 0 | 1 | 6 | 54 |
| | குரு | 0 | 14 | 24 | 0 | 1 | 21 | 18 |
| | சனி | 0 | 17 | 6 | 0 | 2 | 8 | 24 |
| | பு | 0 | 15 | 18 | 0 | 2 | 23 | 42 |
| | கே | 0 | 6 | 18 | 0 | 3 | 0 | 0 |
| | சுக் | 0 | 18 | 0 | 0 | 3 | 18 | 0 |
| சந்திரபுத்தி மாசம் 6 | சந் | 0 | 15 | 0 | 0 | 4 | 3 | 0 |
| | செ | 0 | 10 | 30 | 0 | 4 | 13 | 30 |
| | ரா | 0 | 27 | 0 | 0 | 5 | 10 | 30 |
| | குரு | 0 | 24 | 0 | 0 | 6 | 4 | 30 |
| | சனி | 0 | 28 | 30 | 0 | 7 | 3 | 0 |
| | பு | 0 | 25 | 30 | 0 | 7 | 28 | 30 |
| | கே | 0 | 10 | 30 | 0 | 8 | 9 | 0 |
| | சுக் | 1 | 0 | 0 | 0 | 9 | 9 | 0 |
| | சூ | 0 | 9 | 0 | 0 | 9 | 18 | 0 |
| செவ்-புத்தி. மா 4 நா 6 | செ | 0 | 7 | 21 | 0 | 9 | 25 | 21 |
| | ரா | 0 | 18 | 54 | 0 | 10 | 14 | 15 |
| | குரு | 0 | 16 | 48 | 0 | 11 | 1 | 3 |
| | சனி | 0 | 19 | 57 | 0 | 11 | 21 | 0 |
| | பு | 0 | 17 | 51 | 1 | 0 | 8 | 51 |
| | கே | 0 | 7 | 21 | 1 | 0 | 16 | 12 |
| | சுக் | 0 | 21 | 0 | 1 | 1 | 7 | 12 |
| | சூ | 0 | 6 | 18 | 1 | 1 | 13 | 30 |
| | சந் | 0 | 10 | 30 | 1 | 1 | 24 | 0 |

| புத்தி | கி | மீ | நா | நா | ஆகமொத்தம். வரு | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| ராகுபுத்தி மா 10 நா 24 | ரா | 1 | 18 | 36 | 1 | 3 | 12 | 36 |
| | குரு | 1 | 13 | 12 | 1 | 4 | 25 | 48 |
| | சனி | 1 | 21 | 18 | 1 | 6 | 17 | 6 |
| | பு | 1 | 15 | 54 | 1 | 8 | 3 | 0 |
| | கே | 0 | 18 | 54 | 1 | 8 | 21 | 54 |
| | சுக் | 1 | 24 | 0 | 1 | 10 | 15 | 54 |
| | சூ | 0 | 16 | 12 | 1 | 11 | 2 | 6 |
| | சந் | 0 | 27 | 0 | 1 | 11 | 29 | 6 |
| | செ | 0 | 18 | 54 | 2 | 0 | 18 | 0 |
| குருபுத்தி மா 9 நா 18 | குரு | 1 | 8 | 24 | 2 | 1 | 26 | 24 |
| | சனி | 1 | 15 | 36 | 2 | 3 | 12 | 0 |
| | பு | 1 | 10 | 48 | 2 | 4 | 22 | 48 |
| | கே | 0 | 16 | 48 | 2 | 5 | 9 | 36 |
| | சுக் | 1 | 18 | 0 | 2 | 6 | 27 | 36 |
| | சூ | 0 | 14 | 24 | 2 | 7 | 12 | 0 |
| | சந் | 0 | 24 | 0 | 2 | 8 | 6 | 0 |
| | செ | 0 | 16 | 48 | 2 | 8 | 22 | 48 |
| | ரா | 1 | 13 | 12 | 2 | 10 | 6 | 0 |
| சனிபுத்தி மா 11 நா 12 | சனி | 1 | 24 | 6 | 3 | 0 | 0 | 6 |
| | புத | 1 | 18 | 27 | 3 | 1 | 18 | 33 |
| | கே | 0 | 19 | 57 | 3 | 2 | 8 | 30 |
| | சுக் | 1 | 27 | 0 | 3 | 4 | 5 | 30 |
| | சூ | 0 | 17 | 6 | 3 | 4 | 22 | 36 |
| | சந் | 0 | 28 | 30 | 3 | 5 | 21 | 6 |
| | செ | 0 | 19 | 57 | 3 | 6 | 11 | 3 |
| | ரா | 1 | 21 | 18 | 3 | 8 | 2 | 21 |
| | குரு | 1 | 15 | 39 | 3 | 9 | 18 | 0 |

| புத்தி | கி | மீ | நா | நா | ஆகமொத்தம். வரு | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதபுத்தி மா 10 நா 6 | பு | 1 | 13 | 21 | 3 | 11 | 1 | 21 |
| | கே | 0 | 17 | 51 | 3 | 11 | 19 | 12 |
| | சுக் | 1 | 21 | 0 | 4 | 1 | 10 | 12 |
| | சூ | 0 | 15 | 18 | 4 | 1 | 25 | 30 |
| | சந் | 0 | 25 | 30 | 4 | 2 | 21 | 0 |
| | செ | 0 | 17 | 51 | 4 | 3 | 8 | 51 |
| | ரா | 1 | 15 | 54 | 4 | 4 | 24 | 45 |
| | குரு | 1 | 10 | 48 | 4 | 6 | 5 | 33 |
| | சனி | 1 | 18 | 27 | 4 | 7 | 24 | 0 |
| கேதுபுத்தி மா 4 நா 6 | கே | 0 | 7 | 21 | 4 | 8 | 1 | 21 |
| | சுக் | 0 | 21 | 0 | 4 | 8 | 22 | 21 |
| | சூ | 0 | 6 | 18 | 4 | 8 | 28 | 39 |
| | சந் | 0 | 10 | 30 | 4 | 9 | 9 | 9 |
| | செ | 0 | 7 | 21 | 4 | 9 | 16 | 30 |
| | ரா | 0 | 18 | 54 | 4 | 10 | 5 | 24 |
| | குரு | 0 | 16 | 48 | 4 | 10 | 22 | 12 |
| | சனி | 0 | 19 | 57 | 4 | 11 | 12 | 9 |
| | புத | 0 | 17 | 51 | 5 | 0 | 0 | 0 |
| சுக்கிரபுத்தி மாசம் 12 | சுக் | 2 | 0 | 0 | 5 | 2 | 0 | 0 |
| | சூ | 0 | 18 | 0 | 5 | 2 | 18 | 0 |
| | சந் | 1 | 0 | 0 | 5 | 3 | 18 | 0 |
| | செ | 0 | 21 | 0 | 5 | 4 | 9 | 0 |
| | ரா | 1 | 24 | 0 | 5 | 6 | 3 | 0 |
| | குரு | 1 | 18 | 0 | 5 | 7 | 21 | 0 |
| | சனி | 1 | 27 | 0 | 5 | 9 | 18 | 0 |
| | பு | 1 | 21 | 0 | 5 | 11 | 9 | 0 |
| | கே | 0 | 21 | 0 | 6 | 0 | 0 | 0 |

ரோகணி, அஸ்தம், திருவோணம், சந்திரதிசை வரு 10-க்கு புக்தி அந்தரமும் ஆகமொத்தம் திசை 2-க்கு வரு 16

| | கி | மீ | நா | நா | மொத்தம். வரு | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| சந்திரபுக்தி மாசம் 10 | சந் | 0 | 25 | 0 | 6 | 0 | 25 | 0 |
| | செ | 0 | 17 | 30 | 6 | 1 | 12 | 30 |
| | ரா | 1 | 15 | 0 | 6 | 2 | 27 | 30 |
| | குரு | 1 | 10 | 0 | 6 | 4 | 7 | 30 |
| | சனி | 1 | 17 | 30 | 6 | 5 | 25 | 0 |
| | பு | 1 | 12 | 30 | 6 | 7 | 7 | 30 |
| | கே | 0 | 17 | 30 | 6 | 7 | 25 | 0 |
| | சுக் | 1 | 20 | 0 | 6 | 9 | 15 | 0 |
| | சூ | 0 | 15 | 0 | 6 | 10 | 0 | 0 |
| செவ்வாய் புக்தி மாசம் 7 | செ | 0 | 12 | 15 | 6 | 10 | 12 | 15 |
| | ரா | 1 | 1 | 30 | 6 | 11 | 13 | 45 |
| | குரு | 0 | 28 | 0 | 7 | 0 | 11 | 45 |
| | சனி | 1 | 3 | 15 | 7 | 1 | 15 | 0 |
| | பு | 0 | 29 | 45 | 7 | 2 | 14 | 45 |
| | கே | 0 | 12 | 15 | 7 | 2 | 27 | 0 |
| | சு | 1 | 5 | 0 | 7 | 4 | 2 | 0 |
| | சூ | 0 | 10 | 30 | 7 | 4 | 12 | 30 |
| | சந் | 0 | 17 | 30 | 7 | 5 | 0 | 0 |
| ராகுபுக்தி மாசம் 18 | ரா | 2 | 21 | 0 | 7 | 7 | 21 | 0 |
| | குரு | 2 | 12 | 0 | 7 | 10 | 3 | 0 |
| | சனி | 2 | 25 | 30 | 8 | 0 | 28 | 30 |
| | பு | 2 | 16 | 30 | 8 | 3 | 15 | 0 |
| | கே | 1 | 1 | 30 | 8 | 4 | 16 | 30 |
| | சு | 3 | 0 | 0 | 8 | 7 | 16 | 30 |
| | சூ | 0 | 27 | 0 | 8 | 8 | 13 | 30 |
| | சந் | 1 | 15 | 0 | 8 | 9 | 28 | 30 |
| | செ | 1 | 1 | 30 | 8 | 11 | 0 | 0 |

| | கி | மீ | நா | நா | மொத்தம். வரு | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| குருபுக்தி மாசம் 16 | குரு | 2 | 4 | 0 | 9 | 1 | 4 | 0 |
| | சனி | 2 | 16 | 0 | 9 | 3 | 20 | 0 |
| | பு | 2 | 8 | 0 | 9 | 5 | 28 | 0 |
| | கே | 0 | 28 | 0 | 9 | 6 | 26 | 0 |
| | சு | 2 | 20 | 0 | 9 | 9 | 16 | 0 |
| | சூ | 0 | 24 | 0 | 9 | 10 | 10 | 0 |
| | சந் | 1 | 10 | 0 | 9 | 11 | 20 | 0 |
| | செ | 0 | 28 | 0 | 10 | 0 | 18 | 0 |
| | ரா | 2 | 12 | 0 | 10 | 3 | 0 | 0 |
| சனிபுக்தி மாசம் 19 | சனி | 3 | 0 | 15 | 10 | 6 | 0 | 15 |
| | பு | 2 | 20 | 45 | 10 | 8 | 21 | 0 |
| | கே | 1 | 3 | 15 | 10 | 9 | 24 | 15 |
| | சு | 3 | 5 | 0 | 11 | 0 | 29 | 15 |
| | சூ | 0 | 28 | 30 | 11 | 1 | 27 | 45 |
| | சந் | 1 | 17 | 30 | 11 | 3 | 15 | 15 |
| | செ | 1 | 3 | 15 | 11 | 4 | 18 | 30 |
| | ரா | 2 | 25 | 30 | 11 | 7 | 14 | 0 |
| | குரு | 2 | 16 | 0 | 11 | 10 | 0 | 0 |
| புதபுக்தி மாசம் 17 | பு | 2 | 12 | 15 | 12 | 0 | 12 | 15 |
| | கே | 0 | 29 | 45 | 12 | 1 | 12 | 0 |
| | சு | 2 | 25 | 0 | 12 | 4 | 7 | 0 |
| | சூ | 0 | 25 | 30 | 12 | 5 | 2 | 30 |
| | சந் | 1 | 12 | 30 | 12 | 6 | 15 | 0 |
| | செ | 0 | 29 | 45 | 12 | 7 | 14 | 45 |
| | ரா | 2 | 16 | 30 | 12 | 10 | 1 | 15 |
| | குரு | 2 | 8 | 0 | 13 | 0 | 9 | 15 |
| | சனி | 2 | 20 | 45 | 13 | 3 | 0 | 0 |

| | கி | மீ | நா | நா | மொத்தம். வரு | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| கேதுபுக்தி மாசம் 7 | கே | 0 | 12 | 15 | 13 | 3 | 12 | 15 |
| | சு | 1 | 5 | 0 | 13 | 4 | 17 | 15 |
| | சூ | 0 | 10 | 30 | 13 | 4 | 27 | 45 |
| | சந் | 0 | 17 | 30 | 13 | 5 | 15 | 15 |
| | செ | 0 | 12 | 15 | 13 | 5 | 27 | 30 |
| | ரா | 1 | 1 | 30 | 13 | 6 | 29 | 0 |
| | குரு | 0 | 28 | 0 | 13 | 7 | 27 | 0 |
| | சனி | 1 | 3 | 15 | 13 | 9 | 0 | 15 |
| | பு | 0 | 29 | 45 | 13 | 10 | 0 | 0 |
| சுக்கிர புக்தி மாசம் 20 | சு | 3 | 10 | 0 | 14 | 1 | 10 | 0 |
| | சூ | 1 | 0 | 0 | 14 | 2 | 10 | 0 |
| | சந் | 1 | 20 | 0 | 14 | 4 | 0 | 0 |
| | செ | 1 | 5 | 0 | 14 | 5 | 5 | 0 |
| | ரா | 3 | 0 | 0 | 14 | 8 | 5 | 0 |
| | குரு | 2 | 20 | 0 | 14 | 10 | 25 | 0 |
| | சனி | 3 | 5 | 0 | 15 | 2 | 0 | 0 |
| | பு | 2 | 25 | 0 | 15 | 4 | 25 | 0 |
| | கே | 1 | 5 | 0 | 15 | 6 | 0 | 0 |
| சூரிய புக்தி மாசம் 6 | சூ | 0 | 9 | 0 | 15 | 6 | 9 | 0 |
| | சந் | 0 | 15 | 0 | 15 | 6 | 24 | 0 |
| | செ | 0 | 10 | 30 | 15 | 7 | 4 | 30 |
| | ரா | 0 | 27 | 0 | 15 | 8 | 1 | 30 |
| | குரு | 0 | 24 | 0 | 15 | 8 | 25 | 30 |
| | சனி | 0 | 28 | 30 | 15 | 9 | 24 | 0 |
| | பு | 0 | 25 | 30 | 15 | 10 | 19 | 30 |
| | கே | 0 | 10 | 30 | 15 | 11 | 0 | 0 |
| | சு | 1 | 0 | 0 | 16 | 0 | 0 | 0 |

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், செவ்வாதிசை வ௵ 7-க்கு புக்தி அந்தரமும் ஆகமொத்தம், திசை 3-க்கு வ௵-23

| | கி | மீ | நா | நா | வ௵ (மொத்தம்.) | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| செவ்-புக்தி மீ 4 நா 27 | செ | 0 | 8 | 34½ | 16 | 0 | 8 | 34½ |
| | ரா | 0 | 22 | 3 | 16 | 1 | 0 | 37½ |
| | குரு | 0 | 19 | 36 | 16 | 1 | 20 | 13½ |
| | சனி | 0 | 23 | 16½ | 16 | 2 | 13 | 30 |
| | பு | 0 | 20 | 49½ | 16 | 3 | 4 | 19½ |
| | கே | 0 | 8 | 34½ | 16 | 3 | 12 | 54 |
| | சுக் | 0 | 24 | 30 | 16 | 4 | 7 | 24 |
| | சூ | 0 | 7 | 21 | 16 | 4 | 14 | 45 |
| | சந் | 0 | 12 | 15 | 16 | 4 | 27 | 0 |
| ராகு புக் மா 12 நா 18 | ரா | 1 | 26 | 42 | 16 | 6 | 23 | 42 |
| | குரு | 1 | 20 | 24 | 16 | 8 | 14 | 6 |
| | சனி | 1 | 29 | 51 | 16 | 10 | 13 | 57 |
| | பு | 1 | 23 | 33 | 17 | 0 | 7 | 30 |
| | கே | 0 | 22 | 3 | 17 | 0 | 29 | 33 |
| | சுக் | 2 | 3 | 0 | 17 | 3 | 2 | 33 |
| | சூ | 0 | 18 | 54 | 17 | 3 | 21 | 27 |
| | சந் | 1 | 1 | 30 | 17 | 4 | 22 | 57 |
| | செ | 0 | 22 | 3 | 17 | 5 | 15 | 0 |
| குரு புக்தி மா 11 நா 6 | குரு | 1 | 14 | 48 | 17 | 6 | 29 | 48 |
| | சனி | 1 | 23 | 12 | 17 | 8 | 23 | 0 |
| | பு | 1 | 17 | 36 | 17 | 10 | 10 | 36 |
| | கே | 0 | 19 | 36 | 17 | 11 | 0 | 12 |
| | சுக் | 1 | 26 | 0 | 18 | 0 | 26 | 12 |
| | சூ | 0 | 16 | 48 | 18 | 1 | 13 | 0 |
| | சந் | 0 | 28 | 0 | 18 | 2 | 11 | 0 |
| | செ | 0 | 19 | 36 | 18 | 3 | 0 | 36 |
| | ரா | 1 | 20 | 24 | 18 | 4 | 21 | 0 |

| | கி | மீ | நா | நா | வ௵ (மொத்தம்.) | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| சனிபுக்தி மா 13 நா 9 | சனி | 2 | 3 | 10½ | 18 | 6 | 24 | 10 |
| | புத | 1 | 26 | 31½ | 18 | 8 | 20 | 42 |
| | கே | 0 | 23 | 16½ | 18 | 9 | 31 | 59 |
| | சுக் | 2 | 6 | 30 | 18 | 11 | 20 | 28 |
| | சூ | 0 | 19 | 57 | 19 | 0 | 10 | 26 |
| | சந் | 1 | 3 | 15 | 19 | 1 | 13 | 40 |
| | செ | 0 | 23 | 16½ | 19 | 2 | 6 | 57 |
| | ரா | 1 | 29 | 51 | 19 | 4 | 6 | 48 |
| | குரு | 1 | 23 | 12 | 19 | 6 | 0 | 0 |
| புத புக்தி மா 11 நா 27 | பு | 1 | 20 | 34½ | 19 | 7 | 20 | 35 |
| | கே | 0 | 20 | 49½ | 19 | 8 | 11 | 24 |
| | சுக் | 1 | 29 | 30 | 19 | 10 | 10 | 54 |
| | சூ | 0 | 17 | 51 | 19 | 10 | 28 | 45 |
| | சந் | 0 | 29 | 45 | 19 | 11 | 28 | 30 |
| | செ | 0 | 20 | 50 | 20 | 0 | 19 | 19 |
| | ரா | 1 | 23 | 33 | 20 | 2 | 12 | 53 |
| | குரு | 1 | 17 | 36 | 20 | 4 | 0 | 23 |
| | சனி | 1 | 26 | 31 | 20 | 5 | 27 | 0 |
| கேதுபுக்தி மா 4 நா 27 | கே | 0 | 8 | 34½ | 20 | 6 | 5 | 35 |
| | சுக் | 0 | 24 | 30 | 20 | 7 | 0 | 34 |
| | சூ | 0 | 7 | 21 | 20 | 7 | 7 | 36 |
| | சந் | 0 | 12 | 15 | 20 | 7 | 19 | 40 |
| | செ | 0 | 8 | 34½ | 20 | 7 | 28 | 15 |
| | ரா | 0 | 22 | 3 | 20 | 8 | 20 | 18 |
| | குரு | 0 | 19 | 36 | 20 | 9 | 9 | 54 |
| | சனி | 0 | 23 | 16½ | 20 | 10 | 3 | 11 |
| | புத | 0 | 20 | 49½ | 20 | 10 | 24 | 0 |

| | கி | மீ | நா | நா | வ௵ (மொத்தம்.) | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுக்கிரபுக்தி மா 14 | சுக் | 2 | 10 | 0 | 21 | 1 | 4 | 0 |
| | சூ | 0 | 21 | 0 | 21 | 1 | 25 | 0 |
| | சந் | 1 | 5 | 0 | 21 | 3 | 0 | 0 |
| | செ | 0 | 24 | 30 | 21 | 3 | 24 | 30 |
| | ரா | 2 | 3 | 0 | 21 | 5 | 27 | 30 |
| | குரு | 1 | 26 | 0 | 21 | 7 | 23 | 30 |
| | சனி | 2 | 6 | 30 | 21 | 10 | 0 | 0 |
| | பு | 1 | 29 | 30 | 21 | 11 | 29 | 30 |
| | கே | 0 | 24 | 30 | 22 | 0 | 24 | 0 |
| சூரியபுக்தி மா 4 நா 6 | சூ | 0 | 6 | 18 | 22 | 1 | 0 | 18 |
| | சந் | 0 | 10 | 30 | 22 | 1 | 10 | 48 |
| | செ | 0 | 7 | 21 | 22 | 1 | 18 | 9 |
| | ரா | 0 | 18 | 54 | 22 | 2 | 7 | 3 |
| | குரு | 0 | 16 | 48 | 22 | 2 | 23 | 51 |
| | சனி | 0 | 19 | 57 | 22 | 3 | 13 | 48 |
| | பு | 0 | 17 | 51 | 22 | 4 | 1 | 39 |
| | கே | 0 | 7 | 21 | 22 | 4 | 9 | 0 |
| | சுக் | 0 | 21 | 0 | 22 | 5 | 0 | 0 |
| சந்திரபுக்தி மாசம் 7 | சந் | 0 | 17 | 30 | 22 | 5 | 17 | 30 |
| | செ | 0 | 12 | 15 | 22 | 5 | 29 | 45 |
| | ரா | 1 | 1 | 30 | 22 | 7 | 1 | 15 |
| | குரு | 0 | 28 | 0 | 22 | 7 | 29 | 15 |
| | சனி | 1 | 3 | 15 | 22 | 9 | 2 | 30 |
| | பு | 0 | 29 | 45 | 22 | 10 | 2 | 15 |
| | கே | 0 | 12 | 15 | 22 | 10 | 14 | 30 |
| | சுக் | 1 | 5 | 0 | 22 | 11 | 19 | 30 |
| | சூ | 0 | 10 | 30 | 23 | 0 | 0 | 0 |

திருவாதிரை, சுவாதி, சதயம், ராகுதிசை வரு 18-க்கு புக்தி அந்தரமும் ஆகமொத்தம் திசை 4-க்கு வரு—14

| புக்தி | கி | மீ | நா | நா | வரு | மா (மொத்தம்) | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| ராகு புக்தி மா 32 நா 12 | ரா | 4 | 25 | 48 | 23 | 4 | 25 | 48 |
| | குரு | 4 | 9 | 36 | 23 | 9 | 5 | 24 |
| | சனி | 5 | 3 | 54 | 24 | 2 | 9 | 18 |
| | பு | 4 | 17 | 42 | 24 | 6 | 27 | 0 |
| | கே | 1 | 26 | 42 | 24 | 8 | 23 | 42 |
| | சு | 5 | 12 | 0 | 25 | 2 | 5 | 42 |
| | சூ | 1 | 18 | 36 | 25 | 3 | 24 | 18 |
| | சந் | 2 | 21 | 0 | 25 | 6 | 15 | 18 |
| | செ | 1 | 26 | 42 | 25 | 8 | 12 | 0 |
| குருபுக்தி மா 28 நா 24 | குரு | 3 | 25 | 12 | 26 | 0 | 7 | 12 |
| | சனி | 4 | 16 | 48 | 26 | 4 | 24 | 0 |
| | பு | 4 | 2 | 24 | 26 | 8 | 26 | 24 |
| | கே | 1 | 20 | 24 | 26 | 10 | 16 | 48 |
| | சு | 4 | 24 | 0 | 27 | 3 | 10 | 48 |
| | சூ | 1 | 13 | 12 | 27 | 4 | 24 | 0 |
| | சந் | 2 | 12 | 0 | 27 | 7 | 6 | 0 |
| | செ | 1 | 20 | 24 | 27 | 8 | 26 | 24 |
| | ரா | 4 | 9 | 36 | 28 | 1 | 6 | 0 |
| சனி புக்தி மா 34 நா 6 | சனி | 5 | 12 | 27 | 28 | 6 | 18 | 27 |
| | பு | 4 | 25 | 21 | 28 | 11 | 13 | 48 |
| | கே | 1 | 29 | 51 | 29 | 1 | 13 | 39 |
| | சு | 5 | 21 | 0 | 29 | 7 | 4 | 39 |
| | சூ | 1 | 21 | 18 | 29 | 8 | 25 | 57 |
| | சந் | 2 | 25 | 30 | 29 | 11 | 21 | 27 |
| | செ | 1 | 29 | 51 | 30 | 1 | 21 | 18 |
| | ரா | 5 | 3 | 54 | 30 | 6 | 25 | 12 |
| | குரு | 4 | 16 | 48 | 30 | 11 | 12 | 0 |

| புக்தி | கி | மீ | நா | நா | வரு | மா (மொத்தம்) | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| புத புக்தி மா 30 நா 18 | பு | 4 | 10 | 3 | 31 | 3 | 22 | 3 |
| | கே | 1 | 23 | 33 | 31 | 5 | 15 | 36 |
| | சு | 5 | 3 | 0 | 31 | 10 | 18 | 36 |
| | சூ | 1 | 15 | 54 | 32 | 0 | 4 | 30 |
| | சந் | 2 | 16 | 30 | 32 | 2 | 21 | 0 |
| | செ | 1 | 23 | 33 | 32 | 4 | 14 | 33 |
| | ரா | 4 | 17 | 42 | 32 | 9 | 2 | 15 |
| | குரு | 4 | 2 | 24 | 33 | 1 | 4 | 39 |
| | சனி | 4 | 25 | 21 | 33 | 6 | 0 | 0 |
| கேதுபுக் மா 12 நா 18 | கே | 0 | 22 | 3 | 33 | 6 | 22 | 3 |
| | சு | 2 | 3 | 0 | 33 | 8 | 25 | 3 |
| | சூ | 0 | 18 | 54 | 33 | 9 | 13 | 57 |
| | சந் | 1 | 1 | 30 | 33 | 10 | 15 | 27 |
| | செ | 0 | 22 | 3 | 33 | 11 | 7 | 30 |
| | ரா | 1 | 26 | 42 | 34 | 1 | 4 | 12 |
| | குரு | 1 | 20 | 24 | 34 | 2 | 24 | 36 |
| | சனி | 1 | 29 | 51 | 34 | 4 | 24 | 27 |
| | பு | 1 | 23 | 33 | 34 | 6 | 18 | 0 |
| சுக்ர புக்தி மாசம் 36 | சு | 6 | 0 | 0 | 35 | 0 | 18 | 0 |
| | சூ | 1 | 24 | 0 | 35 | 2 | 12 | 0 |
| | சந் | 3 | 0 | 0 | 35 | 5 | 12 | 0 |
| | செ | 2 | 3 | 0 | 35 | 7 | 15 | 0 |
| | ரா | 5 | 12 | 0 | 35 | 0 | 27 | 0 |
| | குரு | 4 | 24 | 0 | 36 | 5 | 21 | 0 |
| | சனி | 5 | 21 | 0 | 36 | 11 | 12 | 0 |
| | பு | 5 | 3 | 0 | 37 | 4 | 15 | 0 |
| | கே | 2 | 3 | 0 | 37 | 6 | 18 | 0 |

| புக்தி | கி | மீ | நா | நா | வரு | மா (மொத்தம்) | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியபுக்தி மா 10 நா 24 | சூ | 0 | 16 | 12 | 37 | 7 | 4 | 12 |
| | சந் | 0 | 27 | 0 | 37 | 8 | 1 | 12 |
| | செ | 0 | 18 | 54 | 37 | 8 | 20 | 6 |
| | ரா | 1 | 18 | 36 | 37 | 10 | 8 | 42 |
| | குரு | 1 | 13 | 12 | 37 | 11 | 21 | 54 |
| | சனி | 1 | 21 | 18 | 38 | 1 | 13 | 12 |
| | பு | 1 | 15 | 54 | 38 | 2 | 29 | 6 |
| | கே | 0 | 18 | 54 | 38 | 3 | 18 | 0 |
| | சு | 1 | 24 | 0 | 38 | 5 | 12 | 0 |
| சந்திரபுக்தி மாசம் 18 | சந் | 1 | 15 | 0 | 38 | 6 | 27 | 0 |
| | செ | 1 | 1 | 30 | 38 | 7 | 28 | 30 |
| | ரா | 2 | 21 | 0 | 38 | 10 | 19 | 30 |
| | குரு | 2 | 12 | 0 | 39 | 1 | 1 | 30 |
| | சனி | 2 | 25 | 30 | 39 | 3 | 27 | 0 |
| | பு | 2 | 16 | 30 | 39 | 6 | 13 | 30 |
| | கே | 1 | 1 | 30 | 39 | 7 | 15 | 0 |
| | சு | 3 | 0 | 0 | 39 | 10 | 15 | 0 |
| | சூ | 0 | 27 | 0 | 39 | 11 | 12 | 0 |
| செவ்புக்தி மா 12 நா 18 | செ | 0 | 22 | 3 | 40 | 0 | 4 | 3 |
| | ரா | 1 | 26 | 42 | 40 | 2 | 0 | 45 |
| | குரு | 1 | 20 | 24 | 40 | 3 | 21 | 9 |
| | சனி | 1 | 29 | 51 | 40 | 5 | 21 | 0 |
| | பு | 1 | 23 | 33 | 40 | 7 | 14 | 33 |
| | கே | 0 | 22 | 3 | 40 | 8 | 6 | 36 |
| | சு | 2 | 3 | 0 | 40 | 10 | 9 | 36 |
| | சூ | 0 | 18 | 54 | 40 | 10 | 28 | 30 |
| | சந் | 1 | 1 | 30 | 41 | 0 | 0 | 0 |

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, குருதிசை ௵ 16-க்கு புக்தி அந்தரமும் ஆகமொத்தம், திசை 5-க்கு ௵ 57.

| | கி | ௴ | நா | நா | ௵ | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மொத்தம். | | | |
| குரு புக்தி ௴ 25 நா 18 | குரு | 3 | 12 | 24 | 41 | 3 | 12 | 24 |
| | சனி | 4 | 1 | 36 | 41 | 7 | 14 | 0 |
| | பு | 3 | 18 | 48 | 41 | 11 | 2 | 48 |
| | கே | 1 | 14 | 48 | 42 | 0 | 17 | 36 |
| | சு | 4 | 8 | 0 | 42 | 4 | 25 | 36 |
| | சூ | 1 | 8 | 24 | 42 | 6 | 4 | 0 |
| | சந் | 2 | 4 | 0 | 42 | 8 | 8 | 0 |
| | செ | 1 | 14 | 48 | 42 | 9 | 22 | 48 |
| | ரா | 3 | 25 | 12 | 43 | 1 | 18 | 0 |
| சனி புக்தி ௴ 30 நா 12 | சனி | 4 | 24 | 24 | 43 | 6 | 12 | 24 |
| | பு | 4 | 9 | 12 | 43 | 10 | 21 | 36 |
| | கே | 1 | 23 | 12 | 44 | 0 | 14 | 48 |
| | சு | 5 | 2 | 0 | 44 | 5 | 16 | 48 |
| | சூ | 1 | 15 | 36 | 44 | 7 | 2 | 24 |
| | சந் | 2 | 16 | 0 | 44 | 9 | 18 | 24 |
| | செ | 1 | 23 | 12 | 44 | 11 | 11 | 36 |
| | ரா | 4 | 16 | 48 | 45 | 3 | 28 | 24 |
| | குரு | 4 | 1 | 36 | 45 | 8 | 0 | 0 |
| புத புக்தி ௴ 27 நா 6 | பு | 3 | 25 | 36 | 45 | 11 | 25 | 36 |
| | கே | 1 | 17 | 36 | 46 | 1 | 13 | 12 |
| | சு | 4 | 16 | 0 | 46 | 5 | 29 | 12 |
| | சூ | 1 | 10 | 48 | 46 | 7 | 10 | 0 |
| | சந் | 2 | 8 | 0 | 46 | 9 | 18 | 0 |
| | செ | 1 | 17 | 36 | 46 | 11 | 5 | 36 |
| | ரா | 4 | 2 | 24 | 47 | 3 | 8 | 0 |
| | குரு | 3 | 18 | 48 | 47 | 6 | 26 | 48 |
| | சனி | 4 | 9 | 12 | 47 | 11 | 6 | 0 |

| | கி | ௴ | நா | நா | ௵ | மா | நா | நா |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மொத்தம். | | | |
| கேது புக்தி ௴ 11 நா 6 | கே | 0 | 19 | 36 | 47 | 11 | 25 | 36 |
| | சு | 1 | 26 | 0 | 48 | 1 | 21 | 36 |
| | சூ | 0 | 16 | 48 | 48 | 2 | 2 | 24 |
| | சந் | 0 | 28 | 0 | 48 | 3 | 6 | 24 |
| | செ | 0 | 19 | 36 | 48 | 3 | 26 | 0 |
| | ரா | 1 | 20 | 24 | 48 | 5 | 16 | 24 |
| | குரு | 1 | 14 | 48 | 48 | 7 | 1 | 12 |
| | சனி | 1 | 23 | 12 | 48 | 8 | 24 | 24 |
| | பு | 1 | 17 | 36 | 48 | 10 | 12 | 0 |
| சுக்ர புக்தி ௴ 32 | சு | 5 | 10 | 0 | 49 | 3 | 22 | 0 |
| | சூ | 1 | 18 | 0 | 49 | 5 | 10 | 0 |
| | சந் | 2 | 20 | 0 | 49 | 8 | 0 | 0 |
| | செ | 1 | 26 | 0 | 49 | 9 | 26 | 0 |
| | ரா | 4 | 24 | 0 | 50 | 2 | 20 | 0 |
| | குரு | 4 | 8 | 0 | 50 | 6 | 28 | 0 |
